# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32
கதிர் 269
ஆவணி 6ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை
22 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


# இடைக்கால அறிக்கை செப். முதல் வாரத்தில் நாடாளுமன்றுக்கு முன்வைக்கப்படும்

## கூட்டமைப்பிடம் மைத்திரி உறுதி பொது வாக்கெடுப்புக்கு சு.க. இணக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 22

புதிய அரசமைப்புத் தொடர்பில் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முதல் தடவையாக இணங்கியுள்ளது. அத்துடன், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் ஈடுபடும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை செப்ரெம்பர் முதல் வாரத்தில் அரசமைப்பு நிர்ணய சபை (நாடாளுமன்றில்) முன்வைக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன நேற்று உறுதியளித்தார்.

அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்கும் இடையில் நேற்றிரவு 9.30 மணியிலிருந்து சுமார் ஒரு மணி நேரம் சந்திப்பு நடைபெற்றது.

**மனோ வெளிநடப்பு**

சந்திப்பின் ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டவரைவு தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதன்போது அமைச்சர் மனோ கணேசன் முரண்பட்டுக் கொண்டு கூட்டத்திலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார். இதனைத் தொடர்ந்து 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஆயுள் காலம் முடிவடையும் மாகாண சபைகளை இரண்டு ஆண்டுகள் வரையில் பதவி நீடிப்புச்செய்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்வதற்கு ஆகக் >> 04



நல்லூர் கந்தனின் தீர்த்தக் காட்சி

நல்லூர்கந்தசுவாமி ஆலயதீர்த்தத்திருவிழா நேற்றுக்காலை இடம்பெற்றது. பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பங்கேற்றதுடன், பல நூற்றுக் கணக்கனோர் காவடிகள் எடுத்தனர். (வ-37)

## இரசாயனவியல் வினாத்தாள் 'லீக்' விவகாரத்தில் இருவர் கைது

கொழும்பு, ஓக. 22

"தொழில் போட்டி காரணமாகவே, கம்பகா தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் தனது முன்னோடிப் பரீட்சை வினாத்தாளிலுள்ள வினாக்கள், உயர்தரப் பரீட்சை இரசாயனவியல் வினாத் தாளில் வெளி >> 25

## கூட்டமைப்பை அரச தலைவர் இன்றும் சந்திப்பார்

கொழும்பு, ஓக. 22

காணி விடுவிப்புக்களில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் படைத் தளபதிகள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தமிழ்த் தேசியக் கூட்ட >> 04

## ஹெலியில் வட்டமிட்டு குடாநாட்டுக் கரையோரங்கள் வான் படையால் படம் பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் சட்டவிரோதமாக மணல் அகழும் பகுதிகளை அரச வான் படை >> 04

திருட்டுக் குற்றச்சாட்டில்

## சிறுவன் உட்பட மூவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஓக. 22

வவுனியாவில் பல திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 10 வயதுச் சிறுவனும் இளைஞர்கள் இருவருமாக மூவர் வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

"வவுனியா வேப்பங்குளம், பட்டக்காடு, நெளுக்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகளில் இடம்பெற்ற திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்தன. அவை >> 25

## ஓபிஎஸ் - ஈபிஎஸ் கைகோர்ப்பு ஒன்றிணைந்தது அ.தி.மு.க.

சென்னை, ஓக. 22



தமிழகத்தின் ஆளும் கட்சியான அ.தி.மு. கழகத்துக்குள் ஏற்பட்ட மோதல் காரணமாக பிரிந்திருந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் >> 25

## சந்நிதி முருகனுக்கு இன்று அதிகாலை கொடியேற்றம்



விரிவு பக்.07

## அமைச்சர்விஜயதாஸகுறித்து இன்று உறுதியான தீர்மானம்

ரணில் நேற்று அறிவிப்பு >> 25

## அடிப்படை உரிமையற்றவரை தற்காலிகமாக நீக்க முடியுமா?

### ரெலோவிடம் கேட்கிறார் டெனீஸ்

யாழ்ப்பாணம், ஓக. 22

எனது அமைச்சுபொறுப்பை கபடத்தனமாகவும் - சூட்சுமமாகவும் தட்டிப்பறிக்க நினைக்கின்றார்கள். கட்சியின் அடிப்படை உறுப்புரிமைகூட இல்லாத என்னை ஆறு மாதங்க >> 25

## சுட்டுக்கொன்ற மாணவனின் குடும்பத்துக்குவீடு

அமைச்சர் சுவாமிநாதன் இன்று அடிக்கல் நடுவார்

யாழ்ப்பாணம், ஓக. 22

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பல்கலைக் கழக மாணவனின் குடும்பத்தினருக்கு அமைத்துக் கொடுக்கும் வீட்டுக்கு அடிக்கல் >> 25

## சுகாதார அமைச்சர் இன்றியே வடக்கு அமைச்சரவை இன்று

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு ப.சத்தியலிங்கத்துக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. புதிய சுகாதார அமைச்சர் பதவியேற்கவும் இல்லை, ப.சத்தியலிங்கத்தின் பதவிவிலகல் கடிதம் ஆளுநருக்கு கொடுக்கப்படவுமில்லை. >> 25

see more news in newuthayan.com

# வடக்கு அமைச்சரவையிலிருந்து தூக்கி எறியப்பட்டார் டெனீஸ்

## முதல்வரின் கடிதத்தால் குழம்பிப்போன ஆளுநர் சட்ட மா அதிபரிடம் ஆலோசனை கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து பா.டெனீஸ்வரனை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தூக்கி எறிந்துள்ளார். அவரது அமைச்சுப் பதவியில் சிலவற்றை திருமதி அனந்தி சசிதானுக்கும், எஞ்சியவற்றை தானே பொறுப்பெடுப்பதாவும் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கு, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடிதம் எழுதியுள்ளார்.

அமைச்சர் பா.டெனீஸ்வரன் தானே அமைச்சுப் பதவியில் தொடர்வதாக ஏற்கனவே, வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளமையால், இந்த விடயத்தில் சட்டஆலோசனை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநர் குரே சட்டமா அதிபர் திணைக்களத்தை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண அமைச்சரவையை >> 25

ரெலோவின் பரிந்துரையைப் புறந்தள்ளி

# அமைச்சராக குணசீலனை நியமிக்க விக்கி தீர்மானம்

## அதனை ஆளுநருக்கு அவர் அறிவித்தார்

யாழ்ப்பாணம், ஓக. 22

ரெலோ சார்பில் க.விந்தனை அமைச்சராக நியமிக்குமாறு அந்தக் கட்சி பரிந்துரைத்துள்ள போதும் அதனைப் புறந்தள்ளிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ரெலோவின் உறுப்பினரான ஜி.குணசீலனை சுகாதார அமைச்சராக நியமிக்குமாறு ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்குமாகாண அமைச்சர்கள் த.குரு >> 25



# இந்திய மீனவர்கள் தொடர் அத்துமீறல்

## வடக்கு மீனவர்களுக்குப் பாதிப்பு எனக் குற்றச்சாட்டு

மன்னார்,ஓக.22
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடிக்கும் செயற்பாடுகளை நிறுத்தவில்லை. அவர்கள் தொடர்ந்து அத்துமீறி மீன்பிடிப்பதால் வடக்கு மாகாண மீனவர்கள் வாழ்வாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் குற்றம் சாட்டினார்.

மன்னார் மாவட்ட மீனவ சமாசத்தில் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை விடுவிப்பதற்கு வடமாகாண கடற்றொழிலாளர் சமாசம் இணக்கம் தெரிவித்திருந்தது. அந்தப் படகுகளின் விடுவிப்புக்காக அரசுக்கு சில நிபந்தனைகளையும் நாங்கள் விடுத்திருந்தோம். கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் விடுவிக்கப்படும் போது, அவர்கள் மீளவும் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையக்கூடாது என்ற நிபந்தனை யைப் பிரதான நிபந்தனையாக விதித்தோம்.

இழுவை மடித் தடைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும், வெளிநாட்டுப் படகுகள் கையாளும் திருத்தச்சட்டத்தையும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். ஒரு சில சட்டங்களை இன்று அரசு நிறைவேற்றியுள்ளது.



இழுவை மடித்தடைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் கடந்த 6 ஆம் திகதி நிறைவேற்றி அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.அதே நேரம் வெளிநாட்டுப் படகுத் திருத்தச்சட்டமும் தற்போது நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

கைப்பற்றப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை விடுவித்து அதனைக் கொண்டு செல்லுவதற்கு இந்தியாவில் இருந்து ஒரு குழு இலங்கைக்கு வந்துள்ளது. அவர்கள் படகுகளைத் திருத்தம் செய்து அவற்றைக் கொண்டு செல்லவுள்ளனர் என்று நாங்கள் அறிகின்றோம். அதற்காக நாங்கள் ஒப்புதல் வழங்கியுள்ளோம். கைப்பற்றப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் மீண்டும் எக்காரணம் கொண்டும் எமது கடற்பரப்புக்குள் நுழையக் கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்திருந் தோம். கடந்த சில நாள்களுக்கு முன்னர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் சுமார் 49 இந்திய மீனவர்கள் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சியாக மீனவர்களின் அத்து மீறிய வருகை நிறுத்தப்படாமல் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் நல்லெண்ண சமிக்ஞையாக ஏற்றுக்கொண்டு, இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைவதை இந்திய மீனவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படைத் தளபதி ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் தமிழராக உள்ளார். அவர் கடந்த காலங்களில் கிழக்கு மாகாணங்களில் கடற்படைத் தளபதியாகக் கடமையாற்றியுள்ளார். எனவே இலங்கைத் தரப்பினரால் தமிழகமீனவர்கள் தாக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அதனை வட பகுதி மீனவர்களாகிய நாங்கள் மறுத்து வருகின்றோம். சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த கடற்படைத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளமையானது, எதிர் காலத்தில் இந்தியத் தரப்பினர் முன் வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் இனி வரும் காலங்களில் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படைத் தளபதியை மீனவச் சமூகத்துடன் இணைந்து வரவேற்கிறோம். எதிர்காலத்தில் வட பகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்ட கடற்றொழில் முறைமைகளை 24 மணி நேரமும் வட பகுதி கடலில் மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (ஐ-56)

## 9 அரிவாள்களுக்கு மேல் படுத்து நல்லூரானுக்குப் பறவைக் காவடி

யாழ்ப்பாணம்,ஓக.22
9 அரிவாள்களுக்கு மேல் படுத்திருந்து நல்லூரானுக்குப் பறவைக்காவடி எடுத்து தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றினார் பக்தர் ஒருவர். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் தீர்த்தத்திருவிழா நேற்று நடைபெற்றது. யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை நோக்கி காவடிகள் பல படையெடுத்து வந்தன.

அதில் இதுவரை யாரும் செய்யாத ஒரு நேர்த்திக்கடனைப் பக்தர் ஒருவர் செய்துள்ளார். 9 அரிவாள்களுக்கு மேல் படுத்துக்கொண்டு காவடி எடுத்து வரு ம் காட்சியைக் கட்டு பக்தர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். ♯ து தொடர்பிலான ஒளிப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. இதுவரை இவ்வாறான ஒரு நேர்த்திக்கடனை எவரும் செலுத்தியதில்லை என்று கருத்துக்களையும் சிலர் பகிர்ந்துள்ளனர். (ஐ)

## இரு நெற் களஞ்சியங்கள் திறப்பு விழா நேற்று

கிளிநொச்சி,ஓக.22
கிளிநொச்சி இராமநாதபுரம் மற்றும் பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட நெற்களஞ்சிய சாலைகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முதன்மை விருந்தனராகக் கலந்து கொண்டு இரு சாலைகளையும் திறந்து வைத்தார். கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அவை அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய நீர்ப்பாச னக்குளமான இரணைமடுக் குளத்தினுடைய மீள் நிர்மாணப் பணிகள் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

அதன் ஒரு அங்கமான நெற்களஞ்சியங்கள் மற்றும் நெல் உலரவிடும் தளங்கள் போன்ற கட்டுமானங்களும் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்வில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-ரி-2)

## நல்லூரில் குவிந்தன காவடிகள்

யாழ்ப்பாணம்,ஓக.22
நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் நேற்று காவடிகள் நிறைந்து காணப்பட்டன. ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்றுச் சிறப்பற இடம்பெற்றது. காலை 7 மணிக்கு சண்முக தீர்த்தத்தில் வேல் பெருமான் உள்ளிட்ட பஞ்ச மூர்த்திகளும் தீர்த்தமாடி, காலை 8 மணிக்கு பஞ்ச மூர்த்திகளும் வெளி வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். அதனைத்தொடர்ந்து காவடிகள் ஆலயத்தை நோக்கி வரத் தொடங்கின. நேற்று முன்தினமே அதிகளவு காவடிகள் ஆலயத்துக்கு வந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. பறவைக்காவடிகள், தூக்குக் காவடிகள், செதில் காவடிகள் என நூற்றுக்கணக்கில் காவடிகள் குவிந்த வண்ணமிருந்தன. பெண்கள், சிறுமிகள் பாற்காவடிகள் எடுத்தும் நேர்த்திக் கடன் நிறைவேற்றினர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது தமது உடலை வருத்திக் காவடிகள் எடுத்து நேர்த்திக் கடன் நிறைவேற்றி வரும் காட்சிகளைப் பார்த்து பக்தர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். (ஐ)



## நாயால் முறிந்தது கால்

யாழ்ப்பாணம்,ஓக.22
மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வீதியின் குறுக்கே வந்த நாயுடன் மோதி விபத்துக்குள்ளானார். அதில் அவருக்குக் கால் முறிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் நேற்று நடந்தது. ஒழுங்கை யொன்றிலிருந்து வேகமாக ஓடி வந்த நாய் மோட்டார் சைக்கிளுடன் மோதியது அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டார். அவரது கால் ஒன்று முறிந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9, ரி2)

## சைட்டத்துக்கு எதிராக நேற்று உணவு ஒறுப்பு

கொழும்பு,ஓக.22
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியான உணவு ஒறுப்புப் போராட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. கொழும்பு கோட்டைத் தொடருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த உணவு ஒறுப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள், கலைஞர்கள், சிவில் அமைப்புக்கள் உள்ளிட்டவர்கள் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகரவும் போராட்டத்தில் இணைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அதிவேகச் சாலைகளை அரசு சீனாவுக்கு விற்க தயாராகிறது

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.22
தற்போதைய அரசு 3 அதிவேகச் சாலைகளை சீனாவுக்கு விற்கவுள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே உதய கம்மன்பில இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்தாவது;

கட்டுநாயக்க, தெற்கு மற்றும் கொழும்பு அதிவேகச் சாலைகளை அதிகார சபையின் கீழ் கொண்டு வந்து அதன் மூலம் 600 மில்லியன் டொலருக்கு சீனாவின் செங்டோக் நிறுவனத்துக்கு விற்க அரசு தயாராகின்றது. இந்தவார அமைச்சரவை சந்திப்பில் இதுதொடர்பான பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



நாட்டில் எந்தவொரு சொத்துக்களையும் விற்கவில்லை எனத் தெரிவித்து 35 வருட குத்தகைக்கு விடப்படுகின்றது. 10 வருடங்களுக்கு மேல் குத்தகைக்கு விடுவதென்பது விற்றதற்கு சமனானதாகும். நாட்டிலுள்ள அனைத்து சொத்துக்களையும் விற்று இறுதியில் விற்பதற்கு மக்கள் மட்டுமே எஞ்சுவர். அவ்வாறான நிலைமை வரை காத்திருக்காமல் விற்பனைக்கு எதிராக வீதிக்கு இறங்க வேண்டும் என்று பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றார். (ற)

## உதயங்கவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக.22
தன்னை கைது செய்யும் உத்தரவை நீக்க வேண்டும் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க விடுத்த கோரிக்கையை கோட்டை நீதிவான் லங்கா ஜெயரத்ன நேற்று நிராகரித்தார்.

சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள உதயங்க வீரதுங்க சட்டத்தரணிகள் ஊடாக இந்த கோரிக்கையை விடுத்திருந்தார்.

வெளிநாடு சென்றுள்ள உதயங்க வீரதுங்க நாடு திரும்பும் போது கைது செய்வதை தவிர்க்குமாறு அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

அதை நிராகரித்துள்ள நீதிவான் சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அதனை தடுக்கும் வகையில் கோரிக்கை விடுக்க வேண்டாம் என்று குறி ப்பிட்டார். (ற)



இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, வானூர்திப்படைத் தளபதியான எயார் மார்ஷல் கபில ஜயம்பதியை, வானூர்திப்படைத்தலைமையகத்தில், நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். தலைமையகத்துக்கு வந்த இராணுவத் தளபதிக்கு, இலங்கை வானூர்திப் படையினர் அணிவகுப்பு மரியாதை வழங்கி வரவேற்றனர். (ஐ)

## பொலித்தீன் தடையை எதிர்த்து உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.22

பொலித்தீன் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உற்பத்தியாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பு குணசிங்கப்புர பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள பொலித்தீன் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனால் கொழும்பு கோட்டைப் பகுதியில் சிறிது நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புலமைசார் குறைபாடு: விழிப்பூட்டும் செயலமர்வு

கிளிநொச்சி,ஓக.22

புலமைசார் குறைபாடுடையவர்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கான விழிப்பூட்டும் செயலமர்வு கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி சமூக சேவைகள் அலுவலகத்தில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. அதில் மாவட்டத்தில் உள்ள பல புலமைசார் குறைபாடுடையவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் பராமரிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில், புலமைசார் குறைபாடுடையவர்கள் நலன்புரிச் சங்கத்தால் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. நிகழ்வில் மாவட்ட மருத்துவமனை உளநல மருத்துவர் ஜெகரூபன், புலமைசார் குறைபாடுடையவர்கள் நலன்புரிச் சங்கத்தின் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# தமிழர்களின் பலத்தை குறைக்கச் சதி

### ஸ்ரீநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஓக.22

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களின் பலமான ஜனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. அந்த சக்தியை நேரடியாகவும், மறைமுகமாகவும் பலவீனப்படுத்துவதற்காகப் பல கெடுபிடிகளும், நெருக்கடிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார். சமகால அரசியலில் முன்னெடுக்கப்பட வேண்டிய தூரநோக்குச் சிந்தனைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

சிறுபான்மைச் சமூகங்களான தமிழரும், முஸ்லிம்களும் ஒற்றுமையாய்ச் செயற்பட்டு உரிமைகளைப் பெறுவதைத் தடுப்பதற்காக பல சூழ்ச்சி நிகழ்ச்சி நிரல்கள் கையாளப்பட்டு வருகின்றன. அதனைத் தூரநோக்குச் சிந்தனையாளர்கள் உற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலப் போரால் சிறுபான்மை இனங்கள் திட்டமிட்டு வேண்டுமென்று சீரழிக்கப்பட்டன. போர் முடிவடைந்த பின்னரும் இவ்விரு சிறுபான்மைச் சமூகங்களையும் முட்டி மோதவிட்டு சீரழித்துச் சின்னாபின்னமாக்குவதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இப்பொழுது திடீரென நமக்காகப் பரிந்து பேச எத்தனிக்கும் நபர்களின் கடந்த கால நடவடிக்கைகள் பற்றியும், அவர்கள் ஏன் இவ்வளவு ஆர்வமாகவுள்ளார்கள் என்பது பற்றியும் நாம் கவனமாகச் சிந்திக்க வேண்டும். இலங்கைச் சிறுபான்மைச் சமூகங்கள் இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ ஈடு செய்ய முடியாத இழப்புக்களைச் சந்தித்தவர்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எதிர்கால நடவடிக்கைகளை இணக்கப்பாட்டோடு முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## பணிப் பெண்களாக செல்வோர் அதிகம் வடக்கு, கிழக்கினரே

### அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவிப்பு

அம்பாறை, ஓக.22

வறுமை நிலை காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பெண்களே அதிகளவில் வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்கின்றனர்.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது. அந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது;

கிழக்கு மாகாணத்துக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமொன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் வெளிநாட்டுக்கு பணியாளர்களாக செல்லும் ஆயிரத்து 400 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 900 பேர் பெண்கள் - என்றார். (ற)

## படகு இயந்திரங்கள் திருட்டு: சந்தேகநபர்களுக்கு மறியல்

மூதூர், ஓக.22

மீன்பிடிப்படகின் இயந்திரங்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

வெருகல் சோதனைச் சாவடியில் வைத்து இரண்டு சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்தார். (ஐ-40)

## ரணிலிடமும் ஆணைக்குழு விசாரணை செய்யவேண்டும்

### வாசுதேவ நாணயக்கார வலியுறுத்து

கொழும்பு, ஓக.22

மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரத்தை விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் விசாரணை நடத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்தக் கோரிக்கையை 3 நாள்களுக்கு முன்னதாக கடிதம் மூலம் விடுத்துள்ளேன்.

மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜூன் மகேந்திரனை நியமித்தது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே. அதனால் அவரே அனைத்து விடயங்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். - என்றார்.(ற)

## நிவாரண வேலைத்திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி,ஓக.22

வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வறட்சி நிவாரண உதவித்திட்டத்துக்கான வேலைகள் கிளிநொச்சி ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் வசித்து வரும் குடும்பங்களின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் முரசு மோட்டைப் பொதுச்சந்தை வளாகத்தைத் துப்புரவு செய்தனர். இந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேங்காயில் அம்மன் கண்!

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பூசை செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட தேங்காயில் அம்மனின் கண் தென்படுகின்றது என்று கூறப்படுகின்றது. கிளிநொச்சி, மருதநகரில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அங்குள்ள வைரவர் கோவிலொன்றில் வைக்கப்பட்ட இந்தத் தேங்காயை அந்தப் பகுதி மக்கள் பார்த்து வழிபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

பணி வேண்டுகை

செய்திப் பத்திரிகை

உதவி ஆசிரியர்கள் (பயிற்சி)

ஆகக் குறைந்த கல்வித் தகைமை:

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் தமிழ்ப் பட்டதாரி.

அல்லது

எழுத்துத் துறையில் சிறந்த ஆளுமை உள்ளவராக இருத்தல்.

(எந்தத் துறைசார் பட்டதாரியாகவும் இருக்கலாம்)

நேர்முகத் தேர்வு
23.08.2017 புதன்கிழமை
நடைபெறும்.
நேர்முகத் தேர்வுக்கான
நேரத்தை

021 492 7481

என்ற தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொண்டு
பெற்றுக் கொள்ளுங்கள்.



# கடந்த கால போர்ச் சூழலால் இனவிகிதாசாரம் மாறியுள்ளது

## எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டு

திருமலை.ஓக.22

நாட்டில் கடந்த காலங்களில் போர்ச்சூழல் ஏற்பட்டது. தமிழ் மக்கள் இந்தியா உட்பட வெளிநாடுகளில் தஞ்சமடைந்தனர். இது இன விகிதாசார வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைந்தது.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக் காட்டினார். திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் திருகோணமலை மாவட்டத்தின் இன விகிதாசார நிலமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இன விகிதாசார நிலமைகளைப் பற்றி நாம் பேசும் போது, நாட்டில் இடப் பெயர்வுகள் ஏற்படாது இருந்த காலத்தைக் கருத்திற் கொள்ள வேண்டும். போர்ச் சூழலால் நாட்டை விட்டு மக்கள் வெளியேறுவதற்கு முன்னர், அமைதிச் சூழல் ஏற்பட்ட காலத்தில் உள்ள விகிதாசாரங்களை வைத்துப் பேச வேண்டியது அவசியம்.

1983 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் இன விகிதாசாரம் தமிழர்கள் 42 சதவீதம் , முஸ்லிம்கள் 32 சதவீதம், சிங்களவர்கள் 26 சதவீதம் என்ற நிலையில் இருந்தது. நாட்டில் எற்பட்ட போர் காரணமாகத் திருகோணமலையில் இருந்து இந்தியாவுக்குப் பலர் இடம்பெயர்ந்து சென்றனர். அவர்கள் முழுமையாக மீண்டும் நாட்டுக்கு வந்து சேரவில்லை. இது போல ஐரோப்பிய நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்கள் இன்னமும் நாட்டுக்கு மீளத் திரும்பவில்லை. அதனாலேயே மாவட்டத்தின் இன விகிதாசாரப் புள்ளி விவரம் மாறியுள்ளது. அதேவேளை இந்த ஆண்டு மிக முக்கியமான ஒரு ஆண்டாக உள்ளது. பல தேர்தல்களைச் சந்திக்க வாய்ப்புள்ளது. கூட்டு அரசின் அரைவாசிக் காலம் இந்த ஆண்டுடன் முடிவடையவுள்ளது.

எனவே அபிவிருத்திப் பணிகளை விரைவாகச் செய்து முடிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் - என்றார்.

மாவட்டச் செயலர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அதில் பிரதி அமைச்சர் சுகந்த புஞ்சி நிலமே, நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லா மகருப், இம்ரான் மகருப், எம்.எஸ். தௌபிக் க.துரைரெட்ணசிங்கம், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டனர். (ஐ-ரி-2,40)

# உள்ளூர் மீனவர்களால் வலைகளுக்குச் சேதம்

## கண்டனம் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு.ஓக.22

உள்ளூர் மீனவர்கள் மீன்பிடி வலைகளை சேதமாக்குதல் மற்றும் மீன்கள் திருடப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு, பூநொச்சிமுனை கடற்கரையோரம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காத்தான்குடி, கல்முனை, பூநொச்சிமுனை, வாழைச்சேனையைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்று திரண்டு, பதாகைகளைத் தாங்கியவாறு, கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கடற்கரையில் இருந்து காத்தான்குடிப் பிரதேச செயலகம் வரை மீனவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். அங்கு காத்தான்குடிப் பிரதேச செயலர் எஸ்.எச்.



முசம்மிலிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர். "தேத்தாத்தீவு மற்றும் களுதாவளைக் கடற்கரையில் நாளாந்தம் மீன்கள் திருடப்படுகின்றன. இது தொடர்பாக மாவட்டக் கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளரிடம் பலமுறை முறைப்பாடு செய்தோம். எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாம் நாளாந்தம் கடலில் பிடிக்கும் மீன்கள் இவ்வாறு திருடப்படுவதால் , வாழ்வாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். திருடர்களை நாம் அடையாளப்படுத்தியும் இன்னும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீனவர்களிடையே இன விரிசலை ஏற்படுத்தும் வகையில் இந்தத் திருட்டு நடவடிக்கையை ஒரு குழு திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றது. உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ஐ)

# தங்கக் கட்டிகள் கடத்தல் இந்தியர் நால்வர் கைது

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஒரு தொகைத் தங்ககட்டிகளைக் கடத்த முற்பட்ட நால்வர் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நால்வரும் இந்தியக் குடிமக்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தங்கக் கட்டிகளைத் தமது உடலில் மறைத்து எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர். தகவலை அறிந்த சுங்கப்பிரிவினர் சோதனை மேற்கொண்டனர். அவர்களிடமிருந்து 387.81 கிராம் நிறையுடைய தங்கத்தை மீட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கக்கட்டிகள் சுங்கப்பிரிவினரால் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று சுங்கப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-ரி-2)

# முன்னாள் அமைச்சர் பிணையில் விடுவிப்பு

வானூர்தி சேவைகள் முன்னாள் அமைச்சர் பிரியங்க ஜயரத்ன நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்கு கொழும்பு நீதிமன் றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் 75 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கினார்.

பிரியங்கர ஜயரத்ன வானூர்தி சேவைகள் அமைச்சராகப் பதவி வகித்த போது, சட்ட ரீதியற்ற முறையில் வானூர்தி சேவைகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அபிவிருத்தி அதிகாரி என்ற புதிய பதவிக்கு அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரை நியமித்துள்ளார்.

வானூர்தி சேவைகள் பணிப்பாளர் சபையை ஊக்குவித்த குற்றச்சாட்டில் அமைச்சருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### இடைக்கால...

கூடியது 6 மாதங்கள் வரையில் தேர்தலை ஒத்திப்போடுவதைஏற்றுக்கொள்ளலாம்என்றுகட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்துடன் கட்சிகள் ஏற்கனவே இணங்கியதைப் போன்று 20ஆவது திருத்தச் சட்டவரைவு மாற்றியமைக்கப் படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் புதிய அரசமைப்புத் தேக்க நிலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இடித்துரைத்துள்ளார். இதனைத் தொடர்ந்து 20ஆவது திருத்தச் சட்டவரைவு உள்ளிட்ட ஏனைய விடயங்களை நிறுத்திய அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேன,புதியஅரசமைப்பு உருவாக்கத்தில்ஏற்பட்டுள்ளமுட்டுக்கட்டைதொடர்பில் விரிவாக நீண்ட நேரம் ஆராய்ந்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், புதிய அரசமைப்பு உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையுடன் இணைப்பாகச் சேர்ப்பதற்கு தமது கருத்துக்கள்அடங்கியஅறிக்கையைவழங்குவதாகக் கூறியிருந்தனர். இதுவரையில் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஏன்காலத்தைஇழுத்தடிக்கின்றீர்கள்?என்றுதனது கட்சியானசிறிலங்காசுதந்திரக்கட்சியினரிடம்அரச தலைவர்கேள்விஎழுப்பியுள்ளார்.எதிர்வரும்வெள்ளிக்கிழமை தாம் அதனைச் சமர்ப்பிக்கின்றோம் என்றுசிறிலங்காசுதந்திரக்கட்சியினர்பதில்வழங்கியுள்ளனர். இதன்போது குறுக்கிட்ட தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்க,இந்தவாரத்துக்கான வழிநடத்தல்குழுக்கூட்டம்வியாழக்கிழமைவரையிலேயேநடைபெறும். அதற்குமுன்னர்அதனைச் சமர்ப்பிக்கவேண்டும்என்றுகோரியுள்ளார்.

இதற்குஇணங்கியசிறிலங்காசுதந்திரக்கட்சியினர், நாளை மறுதினம் வியாழக்கிழமை தமது அறிக்கையைவழிநடத்தல்குழுவுக்குச்சமர்ப்பிப்பதாகத் தெரிவித்துள்ளனர். வழிநடத்தல் குழுவுக்கு அவர்கள் அறிக்கை சமர்ப்பித்ததும் அதனை ஆராய்ந்து ஒரு வாரத்தினுள்ளேயே. இடைக்கால அறிக்கையைநாடாளுமன்றத்துக்குசமர்ப்பிப்பதுஎன்று தீர்மானிக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, புதிய அரசமைப்பு உருவாக்கம் சம்பந்தமான பேச்சுக்களின் போது நிறைய விடயங்களை மனம்விட்டுப்பேசியுள்ளார். அதிகாரப்பகிர்வுஎல்லா ஆட்சிக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள் என்ற பிழையானபரப்புரைமுன்னெடுக்கப்பட்டுச்செல்கின்றது. சிங்கள மக்கள் மத்தியில் உண்மையை எடுத்துரைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். இந்தச்சந்தர்பத்தில்குறுக்கீடுசெய்தஅமைச்சர்மங்கள சமரவீர, இந்தப் பரப்புரை நடவடிக்கையை ஊடக அமைச்சர் என்ற ரீதியில் தன்னால் செய்ய முடியும் என்று கூறியுள்ளார். மக்கள் மத்தியில் உண்மையைத்தெளிவுபடுத்தவேண்டும். அதனைச்செய்யாமல், பொதுவாக்கெடுப்புக்குச்சென்று இந்த முயற்சியில் முட்டி மோதி தோற்க முடியாது என்றும் அரச தலைவர் குறிப் பிட்டுள்ளார். (வ-5)

### குடாநாட்டுக்...

யினர்நேற்றுஉலங்குவானூர்தியில்சென்றுவானிலிருந்தவாறேபார்வையிட்டனர். அந்தஇடங்களை அவர்கள் வானிலிருந்த வாறே ஒளிப்படங்களும் எடுத்தனர். யாழ்ப்பாணகுடாநாட்டின்வான்பரப்பில் உலங்குவா னூர்தி நேற்று வட்டமிட் டது. அரியாலை, பாசையூர், ஊர்காவற்றுறை, வட மராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்கள் உலங்குவா னூர்தி ஊடாக நேற்றுக் கண்காணிக்கப்பட்டன. அந்தப் பிரதேசங்களை அரச வான் படையினர் ஒளிப்படமும் எடுத்துக் கொண்டனர்.

"நாட்டின் பல பாகங்களி லும் காடுகள், கனியவள பிரதேசங்கள் போன்றவற்றை அரச வான் படையினர் மாதம் ஒருதடவை உலங்குவானூர்தியில் சென்று பார்வையிடுகின்றனர். அவற்றை ஒளிப்படம் எடுத்து வருகின்றனர்" என்று வான் படைத் தலைமையகம் தெரிவித்தது.

சட்டவிரோதமாகமணல்அகழ்வுஇன்னும்தொடர்ந்துகொண்டிருக்கிறது. வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நடவடிக்கையில் இளைஞன் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். அந்த இளைஞனின் கொலைக்குற்றச்சாட்டில்2பொலிஸார்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இளைஞனின்கொலையைத்தொடர்ந்துவடமராட்சி துன்னாலையில்குழப்பநிலைஏற்பட்டது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்திய சிலர் இரவு பகலாக டிப்பர்கள், உழவு இயந்திரங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றினர். குழப்பம் செய்த குற்றச்சாட்டில் பலர்கைதுசெய்யப்பட்டனர். சட்டவிரோதமாகமணல் அகழப்படும்சம்பவங்கள்வடமராட்சிகிழக்கில்மட்டுமன்றியாழ்ப்பாணக்குடாநாட்டின்ஏனையஇடங்களிலும்தொடர்கின்றனஎன்றுதெரிவிக்கப்பட்டது. (வ-48)

### கூட்டமைப்பை...

மைப்பினர் இடையிலான சந்திப்பு இன்று பி.ப.4.30 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது. இந்தச்சந்திப்பில்முப்படைகளின்தளபதிகள்மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரைப் பங்கேற்குமாறுஅரசதலைவர்அறிவுறுத்தியுள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தலைவருக்கும்இடையேநேற்றிரவுஇடம்பெற்றசந்திப்பிலேயே இன்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. (வ-101-5)

# மல்லாகம் நீதிமன்றப் பதிவாளருக்கு எதிராக அதே நீதிமன்றால் பிடியாணை

யாழ்ப்பாணம், ஒக. 22

மல்லாகம் நீதிமன்றப் பதிவாளருக்கு எதிராக அதே நீதிமன்றின் பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் நேற்று பிடியாணை வழங்கி உத்தரவிட்டார்.

பெண் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியால்தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக் கில் முறைப்பாட்டாளராகஉள்ளமல்லாகம்நீதிமன்றப்பதிவாளர்நேற்றையதினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்கு மன்றில் முன்னிலையாகவில்லை. இதனைத் தொடர்ந்து பதிவாளரைக் கைது செய்துநீதிமன்றில்முற்படுத்துமாறு பதில் நீதிவான் பிடியாணை வழங்கி உத்தரவிட்டார்.

அலைபேசி ஊடாக தன்னுடைய உத்தியோகபூர்வ தொலைபேசியில் பெண் சட்டத்தரணி ஒருவர் தன்னை அச்சுறுத்தியதாக மல்லாகம்நீதிமன்றப்பதிவாளர் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைக்கு வருமாறு பொலிஸார் விடுத்தஅழைப்பைபெண்சட்டத்தரணி புறக்கணித்திருந்தார். அதனால் பதிவாளரின் முறைப்பாடு தொடர்பில்பெண்சட்டத்தரணிக்கு எதிராக மல்லாகம் நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில் பெண் சட்டத்தரணிக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது. அதனையும் அவர் புறக்கணித்ததால் அவருக்குஎதிராகபிடியாணைபிறப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் சட்டத்தரணி ஊடாக அந்தப்பெண்சட்டத்தரணி மன்றில் சரணடைந்தார். அவரை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்திருந்தது. பெண் சட்டத்தரணிக்கு எதிராக கடந்த தவணை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

தன் மீதான குற்றச்சாட்டைபெண் சட்டத்தரணி மறுத்ததை அடுத்து, வழக்கு விசாரணை நேற்றையதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்குநேற்றையதினம்பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, வழக்கின் முதலாம் சாட்சியான மல்லாகம் நீதிமன்ற பதிவாளர்மன்றில்முன்னிலையாகவில்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், குறித்த சாட்சிக்குநீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்புக் கட்டளைகையளிக்கப்பட்டதா?என்று கேள்வி எழுப்பினார்.

தெல்லிப்பழை பொலிஸாரின் சார்பில் முன்னிலையான பொலிஸ் சார்ஜன்ட் பாலித, அழைப்புக் கட்டளைசாட்சியிடம்நேரில்கையளிக்கப்பட்டதாகவும், அது தொடர்பான அறிக்கைநீதிமன்றில்சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மன்றிடம் தெரிவித்தார்.

அழைப்புக் கட்டளை கையளிக்கப்பட்டும்குறித்தசாட்சிசமுகமளிக்காததால் அவருக்கு எதிராக பிடியாணைக்குஉத்தரவிடுமாறுசட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றைக் கோரினார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பதில் நீதிவான், குறித்த சாட்சியான நீதிமன்றப் பதிவாளருக்குஎதிராகபிடியாணைக்குஉத்தரவிட்டு வழக்கு விசாரணையை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

வழக்கின் எதிரயான பெண் சட்டத்தரணி சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி சுமந்திரனுக்கு அனுசரணையாக சட்டத்தரணிகள் கே.எஸ்.பாலகிருஷ்ணன், கே.சயந்தன் ஆகியோரும்மன்றில்முன்னிலையாகினர். (வ-101)

## தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம்,ஒக.21

இலங்கைஇளங்கலைஞர் மன்றம்நல்லூர்திருவிழா காலத்தையொட்டிதெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஏற்பாட்டில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் நல்லூர் கந்தனின் பூங்காவனத் திருவிழாவான இன்று பாட்டு இடம்பெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை6.45தொடக்கம்8 மணி வரை நிகழ்வு இடம்பெறும், இதில் பாட்டு இளங்கலைஞர் மன்ற மாணவர்களும்,வயலின் எஸ். நிரஜ்ஜலாவும், மிருதங்கம்ஞா.வசந்தும்இசைக் கவுள்ளனர். (21)

## சங்கீத கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் திருவிழாக்காலத்தைமுன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின்ஏற்பாட்டில் "சங்கீதகதாப்பிரசங்கம்" கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதல் நடைபெற்றுவருகின்றது.

இதனை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வருகின்றார்.

தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில்மாலை6.30மணி தொடக்கம் 8 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வின் 17ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை கம்பராமாயணத்தின்"ஸ்ரீராமபட்டாபிசேகம் "பகுதி இடம்பெறவுள்ளது. (21)

## செல்வச்சந்நிதியில் ஆன்மிக நிகழ்வுகள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பாண்பாட்டுப் பேரவை விசேட ஆன்மிக நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

இதன்பிரகாரம் 1ஆம், 2ஆம் திருவிழா தினமான இன்று 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வடக்கு பிராந்திய சாயிசமித்தி நிலைய அன்பர்களின் பஜனை இடம்பெறும்.

3ஆம் திருவிழாவான நாளை புதன்கிழமை காலை 10 மணிக்குகுமராசரணம், சரணம்என்னும்தலைப்பில்சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சொற்பொழிவும், 4ஆம் திருவிழாவான நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 10 மணிக்கு காவிக்கமலக்கழலுடன் சேர்ந்தருள்வாய் என்னும் தலைப்பில் சைவப்புலவர் செ.கந்தசத்தியசாதனின் சொற்பொழிவும் இடம்பெறும். (யு-173)

## சந்நிதியானுக்கு பக்திப் பஜனை

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு ஆலய அறநெறிப் பாடசாலையில் இன்று முதல்பல்வேறுநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தினமும் மாலை 4.00 மணிமுதல் 7.00 மணிவரையும் மற்றும் சுவாமி திருவீதியுலா நிறைவுற்றதும் ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட மேடையியிலும் நிகழ்வுகள் இடம்பெறும் . அந்தவகையில் கொடியேற்றத் திருவிழாவாகிய இன்று மாலை மாணவர்களின் பஜனையும், உடுவை தில்லை நடராசாவின் சந்நிதி முருகன் அருளிய மதியும் நிதியும் என்ற தலைப்பிலான சொற்பொழிவும், பொன் சுகந்தனின் ஆறு என்ற தலைப்பில் கதாப்பிரசங்கமும் இடம் பெறும். (யு-108)

## காயப்பட்டவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஒக. 22

வீட்டில் காயமடைந்த நிலையில் கவனிப்பாரற்று இருந்தவர் அயலவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

அகத்தியர் ஒழுங்கை இளவாலையை சேர்ந்த இராஜேந்திரம் பிரேம்குமார் (வயது -55) என்பவரே உயிரிழந்தார். அவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். கடந்த சனிக்கிழமை அவரது வீட்டு வளவில் காயமடைந்த நிலையில் இருந்துள்ளார். அயலவர்கள் அவரை நோயாளர் காவு வண்டி மூலமாகத் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்கவில்லை. (4-8-ரி1)

## "உயிர்ப்பைத் தேடி" ஆற்றுகை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக.22

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை யின் முன்னாள் துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் நெறியாள்கையில் உருவான "உயிர்ப்பைத் தேடி" சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி இன்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் இடம்பெறும்.

இரண்டு நாள்களும் பிற்பகல் 4 மணிக்கு கந்தர்மடம் பழம் சாலையில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இது இடம்பெறும். அரங்க செயற்பாட்டுக்குழுவினர் பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நிகழ்த்தும் இந்தக்கொண்டாட்ட அரங்கில் ஆடல், பாடல், காண்பியம், கதைசொல்லல் என அனைத்தும் இணைந்த ஓர் அரங்காக இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி

ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

* 10 நாள் பயிற்சிகள்.
* ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
* இருபாலாருக்குமானது
* பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
* கட்டணம் இல்லை.
* பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்
முழுப் பெயர்: ..........
வதிவிட முகவரி: ..........
பிறந்த ஆண்டு: ..........
அலைபேசி இலக்கம்: ..........
தற்போது முழுநேர / பகுதி நேர பணியில் ஈடுபடுகின்றீர்களா – ஆம் / இல்லை
கல்வித் தகைமை:
சாதாரண தரம்–
ஆண்டு: .......... பெறுபேறு:
பாடம் பெறுபேறு
1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........
6. ..........
7. ..........
8. ..........
9. ..........
10. ..........
உயர்தரம்–
ஆண்டு: .......... பெறுபேறு:
பாடம் பெறுபேறு
1. ..........
2. ..........
3. ..........
4. ..........
..........
கையொப்பம்

## கொக்குவில் இந்துவில் பழைய மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 22
கொக்குவில் இந்துக்கல்லூரியில் 1991ஆம் ஆண்டு கா.பொ.த. உயர்தரத்தில் கல்விபயின்ற மாணவர்களின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு விழாவும் எதிர்வரும் 27 ஆம் அதிகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ய-8)

# சங்கத்தானை ரயில்பாதைக்கு கடவை அமைக்குமாறு கோரல்

சாவகச்சேரி, ஓக.22
சாவகச்சேரி சங்கத்தானை தொடருந்து நிலையத்துக்குஅருகில்உள்ளசாலைக்குபாதுகாப்புக் கடவை அமைக்குமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் உ. சிசில் றெமின்டஸ் தென்மராட்சி பிரதேச செயலரைக் கேட்டுள்ளார். அப்பகுதியில் ஐந்து சாலைகளில் உள்ளன. இவற்றால்வரும்பொதுமக்கள்மற்றும்வாகனங்கள் இந்தக் கடவையூடாகவே பயணித்து வருகின்றமை வழமை. இந்தக் கடவைக்கு அபாய ஒலி மற்றும்சமிக்ஞைவிளக்குகள்என்பனபொருத்தப்பட்டுள்ளன.
ஆனால்சிலவேளைகளில்அவைசெயற்படுவதில்லை. இதனால் விபத்துகள் இடம்பெறும் அச்சம் நிலவுகிறது.
எனவே, இவ்விடத்தில் பாதுகாப்பு கடவையை அமைக்குமாறு அவர் கோரியுள்ளார். இதே வேளை, எழுதுமட்டுவாழ் தொடருந்து நிலையத்திலிருந்துநாவற்குளிதொடருந்துநிலையம் வரையானபகுதிகளில்இருபதுக்கும்மேற்பட்ட பாதுகாப்பற்ற கடவைகள் காணப்படுகின்றன. இவற்றுக்கு கடவைகள் அமைக்கக் கோரும் முன்மொழிவை கடந்த மாதம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர்சமர்ப்பித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது (ய-9)

## தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு நாளை கொடியேற்றம்

தெல்லிப்பழை, ஓக.22
பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் அடுத்தமாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4)

## உயிர்துறக்க முயன்றவரை காப்பாற்றிய அயலவர்கள்

உயிர்துறக்க முயன்று கயிற்றில் தொங்கிய நபர் ஒரு வரை காப்பாற்றிய அயலவர்கள் அவரை சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்த்தனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காகயாழ்.போதனாமருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.
இப்பகுதியைச் சேர்ந்த 38வயது குடும்பத் தலைவர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மரத்தில் தொங்கி யுள்ளார். எனினும் அயலவர்களால் இது அவதா னிக்கப்பட்டதால் அவர்காப்பாற்றப்பட்டார். (ய-9)

## ஆன்மிகப் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.22
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் இருந்து இந்த ஆண்டு நடுப்பகுதி வரை ஆன்மிகப் பயிற்சிநெறிகள் முன்னெடுக்கப்பட்டன.
இந்த ஆன்மிகப் பிரசாரகர் பயிற்சி நெறியில் 40பேர் வரையில் பங்கேற்றிருந்தனர். அதில் இறுதிப் பரீட்சையில் (எழுத்து மற்றும் செயன்முறை) 18 பேர் தேர்ச்சியடைந்துள்ளனர்.
இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நல்லூர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மறுவாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைக்கவுள்ளார். (ய)

## பழந்தமிழர் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம்,ஓக.22
பழந்தமிழர் ஆய்வு மாநாடு 2017 நடத்தப்பட இருப்பதனால் இந்த மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
"பழந்தமிழரும் பௌத்தமும்" எனும் கருப்பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.
ஆய்வுக் கட்டுரைகளை அனுப்ப விரும்புவோர் ம.வித்தி யானந்த நேசன், நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம் இல.7 கலைமகள் வீதி, அரியாலைமேற்கு, யாழ்ப்பாணம்எனும்முகவரிக்குபதிவுத்தபாலிலோ அல்லது Mvithiy ananthanesan@ Gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ தமது கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணபழந்தமிழ்இயக்கநிறுவுநர்ம.வித்தியானந்தநேசன்கேட்டுக் கொண்டார். (21)

# லொறிச் சாரதி உயிர்மாய்ப்பு

*குடும்ப வறுமை காரணம் என விசாரணையில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக.22
பாரவூர்திச் சாரதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டார். அவருடைய இறப்புக்குக் காரணம் குடும்ப வறுமை என இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம்சங்கானை 7ஆம் கட்டடைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. அதே இட்த்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் மகேஸ்வரன் (வயது 47) என்பவரே இவ்வாறு உயிர் துறந்தார். பாரவூர்தி ஒன்றின் சாரதியாகக் கடமையாற்றும் இவரின் குடும்பத்தில் உள்ள வறுமையாலேயே தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிரை மாய்த்தார் என இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.
திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம் குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உறிவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-21,8)

# மகாகும்பாபிசேகம்

ஊர்காவற்றுறை, ஓக. 22
ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய புனரா வர்த்தன நவகுண்ட பக்ஷ மகாகும்பா பிசேகம் இன்று 22ஆம்திகதி ஆரம்ப மாகிறது. எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகள் எண்ணெய்க்காப்பு இடம்பெற்று 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு பெருச்சாந்தி, நீர்குடமுழுக்கு மகா கும்பாபிசேகம் நடைபெறும். தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிசேக மும் நடை பெற்று எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் 15ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை 1008 சங்காபி சேகமும், இரவு திருவூஞ்சலும் இடம் பெற்று அம்பாள் வீதி உலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (4)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 120 | 140 | 120 | 120 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 60 | 120 | 100 | 140 |
| பாகல் | 160 | 200 | 280 | 180 | 160 |
| க.கிழங்கு | 100 | 140 | 100 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 160 | 200 | 130 | 200 | 160 |
| பூசணி | 70 | 60 | 60 | 50 | 60 |
| தக்காளி | 140 | 140 | 160 | 170 | 130 |
| வாழைக்காய் | 100 | 90 | 120 | 80 | 60 |
| கீரை | 20 | 30 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 40 | 20 | 30 |
| ப.மிளகாய் | 300 | 250 | 400 | 250 | 240 |
| புடோல் | 80 | 100 | 60 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 120 | 100 | 100 |
| வெண்டி | 80 | 100 | 60 | 80 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 100 | 120 |
| தேங்காய் | 60 | 65 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 160 | 160 | 140 | 120 |
| கரட் | 180 | 200 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 60 | 60 | 40 | 40 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 300 | 400 | 600 | 300 |
| கணவாய் | 700 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 600 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஓட்டி | 250 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 400 | 400 |
| வாழை | – | 200 | 300 | – |



அலுவலக கைப்பைகள் பல தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை பல வடிவங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 4 ஆயிரத்து 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகின்றன.

## செல்வச்சந்நிதியான் கொடியேற்றம் இன்று திருவிழா ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், ஓ.22

பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று 22ஆம் திகதி அதிகாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. திருவிழாவின் இரண்டாம் திருவிழா மாலை இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் கலாசார உடையுடன் ஒழுக்கசீலர்களாக வரவேண்டும். திருவிழா காலத்தில் திருடர்களின் நடமாட்டம் உள்ளதால் பக்தர்கள் பெறுமதிமிக்க ஆபர ணங்களை அணிவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கோவில் நிர்வாகத்தினாலும் பருத்தித்துறை பிரதேச செயலரினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பை உறுதிப்படுத்த கோயில் சுற்றாடலில் தானியங்கி கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படுவதுடன் தினமும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். திருவிழாவின் இறுதி நான்கு தினங்களும் மேலதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவர்கள் தற்காலிக பஸ் நிலையம் மற்றும் சாலைக்கடவைகளிலும் கடமையில் ஈடுபடுவார்கள். பொலிஸாருடன் சாரணர் முதலுதவிச் சங்கத்தினர், இலங்கைச்செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவைகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்குபக்தர்கள்போதியஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாடுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. ஆலயச் சூழலில் பச்சைகுத்தல், சிகரட், மதுபானம், புகைத்தல் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் ஒலிபெருக்கி பாவனைக்கும்தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும், கடைகளில் குறைந்த ஒலியைப் பாவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலை யோரங்களில் கடைகள் அமைக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆற்றில்நீராடும் பக்தர்கள் பாதுகாப்பு எல்லைக்குள் நீராடுதல் வேண்டும்.

ஆலய வளாகத்தில் பருத்தித்துறை பிரதேசசெயலகம்வல்வெட்டித்துறை நகரசபை, பொலிஸ் நிலையம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கலாசாரத் திணைக்களம், வைத்திய நிலையம் மற்றும் விலைக்கட்டுப்பாட்டுத்திணைக்களம்ஆகியவற்றின் உற்சவ காலப்பணி மனைகள் என்பனவும் இயங்கும்.

பொருள்களின் விலைகள் குறித்தொதுக்கப்பட்ட விலை களுக்கு அமைவாகவே விற்கப்படல்வேண்டும். மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பொலித்தின் பாவனையும்தடை செய்யப்பட்டுள்ளது.

இ.போ.ச தனியார் போக்குவரத்து பேருந்துகளுக்கான தரிப்பிடம் வழமையான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள து. எனினும், வலிகாமப் பகுதியில் இருந்து அச்சுவேலி பாதைவழியாக வரும் பக்தர்க ளின் நலன்கருதிதனியார்போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் தொண்டைமானாறு சந்திப்பகுதி யில் மேலதிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருவிழா நாள்களில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் காலை 10 மணிக்கு தெய்வீக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் சந்நிதியானின்;15அன்னதானமடங்களிலும் தினமும்பக்தர்களுக்குஅன்னதானம் வழங்கப்படும். (ய-173)

வடக்கில் நிலவும் கடும் வறட்சியால்

# பெரிய வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 22

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வறட்சிகாரணமாகசிறுபோகத்தில்திட்டமிடப்பட்டபெரியவெங்காய விளைச்சல் இடம்பெறவில்லைஎனவடக்குமாகாண விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.



இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 382 கெக்.ரேயரில் பெரிய வெங்காயம் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால்77கெக்ரேயர் பரப்பளவிலேயே பயிரிடப்பட்டது.

இவ்வாறு எதிர்பார்த்த அளவு செய்யமுடியாமல் போனமைக்கு இரண்டு முக்கிய காரணிகள் உள்ளன.

முதலாவதாக வறட்சி காரணமாகவெங்காயச்செய்கையில் விவசாயிகள் நாட்டம் செலுத்தவில்லை.

மேலும்வடக்குமாகாணத்தில் உள்ள அநேகமான விவசாயிகள் பெரிய வெங்காயத்தை விட ச் சின்ன வெங்காய செய்கையிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர். சின்னவெங்காயத்தைப் பயிரிடும் போது 65 நாள்களில் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பெரிய வெங்காயத்தை நாற்று மேடை அமைத்தே பயிரிட வேண்டும். பம்பாய் வெங்காய இனங்கள் இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுவிவசாயிகளுக்குவிற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ராம்பூர் சிவப்பு இனம் மற்றும் ராசிக் சிவப்பு இனம் என இரு இன வெங்காயங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் இம்முறை யாழ்ப்பணத்தில் 16.5 கெக்ரேயரும், கிளிநொச்சியில்12.6கெக்டேயரும், முல்லைத் தீவில் 4.6 கெக்ரேயரும், மன்னாரில் 23.9கெக்ரேயரும், வவுனியாவில் 26 கெக்ரேயரும் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

வறட்சியின்தாக்கம்காரணமாகவே எதிர்பார்த்த அளவினை பெறமுடியவில்லை. பெரிய வெங்காயவிதைகள் உற்பத்தி திட்டம் இருந்தபோதிலும் இம்முறை அதனையும் வெற்றிகரமாகச்செய்ய முடியவில்லை - என்றார். (ய-8)

# அரச பதிவு ஏதுமின்றியே இராணுவம் காணி அபகரிப்பு

### ரவிகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் ஒகஸ்ட் 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமக்களின் பல ஏக்கர் காணிகள் மாவட்டச் செயலகத்தின் பதிவில் இல்லாமல் இராணுவம் அபகரித்து வைத்துள்ளது எனவடக்குமாகாணசபை உறுப்பினர்து.ரவிகரன்குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவுமாவட்டச்செயலகத்தின் தகவலின்படி மாவட்டத்தில் 14ஆயிரத்து 162ஏக்கர் காணி படையினரின் வசம் உள்ளதாக கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் முறிகண்டிப் பகுதியில் படையினரின் குடியிருப்புக்காக சுமார் ஆயிரத்து 703 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் கொக்குத்தொடுவாய் செல்லும் வீதியில் ஆழ ஊடுருவும் படையணி சுமார் 170ஏக்கர்நிலத்தைவைத்திருக்கின்றது.

இவ்வாறுமுல்லைத்தீவுமாவட்டத்தில்படையினர்வசம்உள்ள பலஏக்கர்காணிகள் பற்றிய தரவுகள்மாவட்டச்செயலகத்திடம் இல்லை.

மாவட்டச்செயலகத்தின்தகவல்படி மாவட்டத்தில் மூவாயிரத்து 60 தமிழ்க் குடும்பங்களுக்குக் காணிகள் இல்லை. அதேபோல்1007முஸ்லிம்குடும்பங்களுக்கு காணிகள் இல்லை. 170சிங்களகுடும்பங்களுக்கும் காணிகள் இல்லை என கூறப்பட்டுள்ளது. ஆனால்வாக்காளர் பட்டியலின்படிமுல்லைமாவட்டத்தில் சிங்களக் குடும்பங்களின்எண்ணிக்கை25மட்டுமே. முல்லைத்தீவுமாவட்டச்செயலகம்மாவட்டத்தில் காணி அற்றவர்களின் தரவுகள் மற்றும் படையினரிடம் உள்ள காணிகள் பற்றி பிழையான தரவுகளையே வைத்திருக்கின்றது. எமது மாவட்டத்தில் சிங்களக் குடும்பங்களின்எண்ணிக்கை 25 இனால் மாவட்ட செயலகம் 170 என கூறுகின்றது என்றார். (ய-8)



## பூங்காவனத் திருவிழா

### பூங்காவனத்தெழுந்து புதுவாழ்வு தாருமையா நல்லூர் கந்தா

தமிழர்கள் அரசாண்ட
தலைநகராம்
நல்லையம்பதியில்
தமிழர்கள் துயர் துடைக்க
தனிப்பெரும்
தமிழ்த்தெய்வமாய்
நல்லைக்கந்தன் எனும்
நல்நாமம் கொண்டு
நல்லூர்பதியமர்ந்து
நற்றமிழின் வடிவாய்
நால்வேதப்பொருளாய்
நவில்பொழில் கொண்டு
நாணிலத்தோர் நல்வாழ்வு
வளம்பெற நல்லருளைப்
பொழிகின்றீர்
குஞ்சரியாள் குறவள்ளியுடன்·
குமரனாய் வடிவங்கொண்டு
குவலயத்தோர் கும்பிடும்
குகனாய் நல்லூரில்
குடிகொண்டு
நாளும் வண்ணமுற நல்லூர்
பதியில் நல்நடனம்
செய்கின்றீர்
நாடியுனைத்துதிக்கும்
நானிலத்தோர் வாழ்வு
வளம்பெறவே
பூங்காவனத்தெழுந்து
புதுவாழ்வு தாருமையா நல்லூர்
கந்தா....

*சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்*

### பல்லோரும் பணிந்தேத்தும் நல்லை முருகன்

நல்லூரின் வீதியிலே நாம்
நடந்து வந்திட்டால்
தொல்லை வினைகள்
தூள்படவே
பறந்திடுமே சொல்லிய
யோகர் நடந்தவீதி
பல்லோர் பணிந்தேத்தும்
நல்லை
முருகனை ரூபா ஒன்றுடனே
எந்தநாளும் வணங்கிடுவோம்

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை

### துங்கனே உன் பாதம் சரணடைந்தோம்

நல்லையெம்பதிவாழ் செல்வேலே
நல்லருளை எமக்கு ஈந்திடப்பா
ஈசனின் தனயனே சரவணனே
ஈனருக்கென்றும் உதவிடப்பா
பிரணவப் பொருளானின் அனுஜனப்பா நீ
பழனிமலை வாழும் ஆண்டியப்பா
துன்பங்கள் யாவும் தி ர்ந்திடவே
துங்கனே உன்பாதம் சரணடைந்தோம்

*கு. அஸ்வினி*



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
கல்கமுவ ஸ்ரோர்ஸ்
பல சரக்குப் பொருள்களை நியாய விலையில்
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.
இல.133/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 0966
077 183 6625

# தரம் 1 மாணவர் அனுமதிக்காக அபிவிருத்தி நிதி கேட்கமுடியாது

## வடக்கு கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான அனுமதிக்குரிய நேர்முகத்தேர்வு காலத்தில் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம் போன்றவை பாடசாலை அபிவிருத்திக்கென எவ்வகை நிதியும் கோரமுடியாது என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களின் அனுமதிக்கான நேர்முகத்தேர்வுகள் இடம்பெறும் சமயம் பழைய மாணவர் சங்கமும் பங்குகொள்வது வழக்கம். இருப்பினும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்தி தேவைக்கு பணம் வழங்குவீர்களா எனக் கேட்பது ஒரு தகுதியாகாது. அவ்வாறு பல பிரபல பாடசாலைகளில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பழைய மாணவர் சங்கம் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வங்கிக் கணக்குகள் வழங்கப்படுவது போன்ற நடவடிக்கைகளும் தடைசெய்யப்படவுள்ளன.

எனவே, இந்த ஆண்டுமுதல் இவை நடைமுறைக்கு கொண்டு வரப்படும். அத்தோடு பிரபல பாடசாலைகளில் ஓர் வகுப்பில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வழமையான மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் அதிக மாணவர்கள் இணைக்கப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக ஓர் வகுப்பில் 32 மாணவர்களே இணைத்துக்கொள்ள முடியும் என்ற நிலையில் பிரபல பாடசாலைகள் பலவற்றில் 40 தொடக்கம் 44 மாணவர்களும் இருக்கின்றமை சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே இவ்வாறு இடம்பெறுவதாக் கூறப்படும் அனைத்தும் பாடசாலைகளுக்கும் அனுமதிக்குரிய நேர்முகப் பரீட்சைக்கு முன்பே இவற்றுக்கான அறிவுறுத்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கில் உள்ள 66 பாடசாலைகளிலேயே மாணவர்களுக்கான அனுமதிகளில் போட்டி நிலவுவது கண்டறியப்பட்டுள்ளது. அந்தப் பாடசாலைகளுக்கு சுற்றுநிரூபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக கண்காணிப்பும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றார். (ய-101)

# எரிபொருள் மானியத்தில் நெடுந்தீவில் குளறுபடி

யாழ்ப்பாணம், ஓக.19

நெடுந்தீவில் 5 மீனவர் சங்கங்கள் உள்ளன. இதில் எரிபொருள் மானியத்துக்கான தொழில் உபகரணங்கள் 4 சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. ஆனாலும் ஒரு சங்கத்தில் எவருக்குமே வழங்கப்படவில்லை என நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்சுட்டிக்காட்டப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர்பிரிவுக்கானஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இணைத் தலைவர்களில் ஒருவரானதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதற்போதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மீனவர்களுக்கென நங்கூரத் தரிப்பிடம் கிடையாது. கடல் அரிப்பு அதிகரித்தே செல்கின்றது.

இதனால் 3.5 கிலோ மீற்றருக்கு உடனடியாக தடுப்பணை அமைத்துத்தரப்பட வேண்டும். வெளிச்ச வீடு தொடர்பாக பல ஆண்டுகளாகக் கோரிக்கை முன்வைக்கின்றோம். அவை அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது என்று கூட்டத்தில் கலந்துகொண்ட மீனவர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதற்கு நீரியல் வளத் திணைக்கள பிரதிநிதி ரமேஸ்கண்ணா பதிலளிக்கையில்:

நெடுந்தீவில் 4 இறங்குதுறைகள் அமைப்பதற்கான பணிகள் அடுத்த ஆண்டு இடம்பெறும்.

இந்த ஆண்டு இங்கு 9 வெளி இணைப்பு இயந்திரங்களை வழங்கவுள்ளோம். தடுப்பணைகளைப் பொறுத்தமட்டில் எமது திணைக்களம் சிபாரிசை மட்டுமே வழங்க முடியும். கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினாலேயே அதனைஅமைக்கமுடியும். வெளிச்ச வீட்டுக்குப் பதிலாக பெரிய 4 விளக்குகள் வந்துள்ளன. அதற்கானசெலவு நிதியும்வழங்கப்படும்-என்றார். (ய-101)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிப்பது பற்றி அறிவிக்கவில்லை

## வடக்கு பட்டதாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஓக.22

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்கும் செயற்பாடு பற்றி எமக்கு தெரியப்படுத்தியிருந்த போதும் இதுவரையில் உத்தியோகபூர்வமான தகவல் கிடைக்கவில்லை என்று வடக்கு மாகாண வேலையற்ற சமூகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

எமது தொடர்ச்சியான போராட்டத்தின் பின்னர் அரசு எமது வேலை தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

குறித்த வெற்றிடங்களுக்கு எம்மை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி ஒருவருட கால பயிற்சிநெறியின் அடிப்படையில் பட்டதாரிகளை உள்வாங்கி 20ஆயிரம் ரூபா பயிற்சிக்காலக் கொடுப்பனவும் வழங்கப்பட்டு, பின்னர் நிரந்தரமாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் அண்மையில் மட்டக்களப்பு ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க, வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 20ஆயிரம் பட்டதாரிகள் அபிவிருத்தி உதவியாளர்களாக இணத்துக்கொள்ளப்பட உள்ளார்கள் எனத் தெரிவித்திருந்தார். தொழில் இல்லாத பட்டதாரிகள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கிறார்கள். இவர்கள் பல ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள் .இவர்களின் பிரச்சினைகள் பற்றி எமக்கு முதலமைச்சர்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

எனவே 20 ஆயிரம் பட்டதாரிகளை அபிவிருத்தி உதவியாளர்களாக நியமிக்கக் தீர்மானித்தோம். இவர்கள் பிரதேசத்தின் வருமானம், கைத்தொழில், பெண்களின் நடவடிக்கைகள் உட்பட பலபணிகளில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இது மகிழ்சிக்கு உரிய விடயம். ஆனால் இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் பற்றி எமக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்ததாகத் தகவல்களும் கிடைக்கவில்லை என்றனர். (ய-ரி)

# செம்மணியில் பறவைகள் சரணாலயத்துக்கு வசதியாக விளம்பரங்களை அகற்றக் கோரிக்கை

சாவகச்சேரி, ஓக.22

சாவகச்சேரி பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட உவர் நீர் ஏரிப்பகுதியை பறவைகள் சரணாலயமாக மாற்றும் பொருட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன..

செம்மணிக்கும் நாவற்குழிப் பாலத்திற்கும் அண்டிய பகுதிகளில் இவ்வாறு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சினாலும், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தாலும் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இதனால் இந்தப் பகுதியின் சாலையோரத்தில் இருபக்கங்களிலும் நட்டப்பட்டிருந்த விளம்பர தட்டிகளை அகற்றுமாறு சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரியிருந்தனர்.

கடந்தவருடம் தொடக்கம் இவற்றுக்கான விளம்பர கட்டணங்கள் அறவிடுவதற்கும் தடைவிதித்தனர்.

இதனால் பிரதேசசபையினால் இந்தப் பகுதியில் உள்ள விளம்பர தட்டிகளை உடன் அகற்றுமாறு உரிய விளம்பர நிறுவனங்களிடம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் காலம் கடந்த நிலையிலும் உரிய விளம்பரத்தட்டிகள் அகற்றப்படவில்லை. மாறாக விளம்பரதாரர்கள் விளம்பரங்களை மீளவும் காட்சிப்படுத்தி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, உரிய விளம்பர பலகைகள் அடுத்து வரும் மாதங்களில் உள்ளூராட்சி சபையால் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, முதன்மைச் சாலையில் பனை அபிவிருத்திச் சபையின் முன்பாகவுள்ள நீர்ப்பரப்பில் பொருத்தப்பட்டுள்ள விளம்பரத்தட்டிகள் சில சேதமடைந்து காணப்படுகின்றன. திருடர்கள் நாளாந்தம் குழாய்களை ஒவ்வொன்றாகக் கழற்றிச் செல்வதையும் காணமுடிகின்றது.

எஞ்சிய குழாய்கள் மழைக்காலத்தில் நீருள் மறைந்துபோகும். இதனால் இந்தப் பகுதியில் வந்து நீரில் இறங்கி விளையாடுவோர் காயமடைய நேரிடும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் தமது விளம்பரத் தட்டிகளை உரியமுறையில் அப்புறப்படுத்திக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். (ய-131)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவை வழங்கக்கோரி மாகாணசபையில் பிரேரணை

வடக்கு மாகாணத்தில் சமுர்த்தி நிறுத்தப்பட்ட பயனாளிகளுக்கு மீளவும் அந்த உதவிக்கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்எனவலியுறுத்திமாகாணசபையில்வடக்குமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது.

அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டதாவது:

முன்னைய ஆட்சிக்காலத்தில் வறுமையானவர்கள் என இனம்காணப்பட்டகுடும்பங்கள்தெரிவுசெய்யப்பட்டுசமுர்த்தி உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்வுதவியால் சிறியளவிலாவது உணவுத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் இருந்தன. திடீரெனஇந்தமாதம்பலஆயிரக்கணக்கானகுடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவைநிறுத்தியுள்ளார்கள்.

இதனால் வறுமையில் உள்ள குடும்பங்கள் பட்டினியை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

எனவே வறுமையில் வாழும் மக்களின் வயிற்றில் அடிக்காமல், வாழ்வாதாரத்தை சிதைக்காமல், ஏற்கனவே வழங்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்க வேண்டும். இதற்குஅரசதலைவரைவலியுறுத்தவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-8)

# வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் தளவாட விவரங்களை ஆராய ஏற்பாடு

யாழ்ப்பாணம். ஓக. 22

வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் அலுவலக தேவைக்காக கடந்த வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் மற்றும் உபகரணங்கள் பற்றிய விவரங்கள் முழுமையாக உள்ளன. அமைச்சரவை அனுமதி கிடைத்தால் மாத்திரமே பேரவைச் செயலகத்தினர் உரிய இடங்களுக்குச் சென்று நேரில் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பர் என்று வடக்கு மாகாண பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் அமைச்சர்கள், சபை உறுப்பினர்களுக்கு 2015ஆம், 2016ஆம் ஆண்டு நிதியாண்டில் அலுவலக பாவனைக்காக பொருள்கள், தளபாடங்கள் கொள்வனவுக்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் பற்றிய விவரங்கள் தளபாடம் மற்றும் உபகரண இருப்புப் பட்டியலில் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்று சரிபார்த்து அறிக்கையிடுமாறு 53ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாண அமைச்சர் சபையினால் கோரப்பட்டது.

பொருள்களின் விவரங்கள் உரியமுறையில் பதியப்படுவது அவசியம் என்பதனாலும், நடப்பு ஆண்டில் இவ்வாறான ஒதுக்கீடுகள் வழங்கப்படுவது தொடர்பாக ஆராய்வதற்கும் இது உதவியாக இருக்கும். ஆகவே இந்தப் பதிவுகளை நாம் முழுமையாக ஏற்கனவே பதிவுசெய்து வைத்துள்ளோம்.

ஆனால் பொருள்களை நேரில் பார்த்து பதியும் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு நாம் செய்ய வேண்டுமானால் அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்க வேண்டும்.

அத்துடன் இவ்வாறு நாம் தரவுகள் எடுப்பதற்கு செல்வதற்கு தேவையான முன் அறிவித்தல்களை அலுவலகங்களுக்கு வழங்கும் செயற்பாட்டினை அவர்கள் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் நாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# விலங்குகளுக்கு உணவு வழங்கினால் அபராதம்

கொழும்பு, ஓக. 22

தெகிவளை தேசிய மிருகக் காட்சி சாலையில் விலங்குகளுக்கு உணவு வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறிச் செயற்படுபவர்கள் சி.சி.ரி.வி கண்காணிப்பு கமரா ஊடாக அவதானிக்கப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்களைப் பார்வையிட வருகை தரும் மக்கள் மிருகங்களுக்கு உணவு வழங்குகின்றமையால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விலங்குகளுக்கு உணவு வழங்க தடை எனும் அறிவித்தல் பலகையை நாம் மிருகக் காட்சி சாலையில் வைத்துள்ளோம். அதனையும் பொருட்படுத்தாமல் உணவு வழங்குபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் - என்றார். (5)

# 4,000 பயிற்றுவிப்பாளர்கள் பாடசாலைகளில் இணைப்பு

## விளையாட்டுக்களை ஊக்குவிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 22

பாடசாலைகளில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக 4 ஆயிரம் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதுவரை 17 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் நேர்முகப் பரீட்சைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதாகவும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளில் மாணவர்களின் கல்வியைப் போலவே விளையாட்டுத்துறையும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். தேசிய மட்டத்திலும் பன்னாட்டு மட்டத்திலும் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டும் என்பதே அரசின் இலட்சியமாகும்.

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சிறப்பாக விளங்கியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவுசெய்யப்படவுள்ள 4 ஆயிரம் பேரில் 80 வீதமானோர் ஆண்களாக இருப்பர். விடுமுறை நாள்களிலும் பாடசாலை அலுவல்கள் முடிவடைந்த பின்னும் விளையாட்டுப் பயிற்சி நடத்தப்படவேண்டுமென்பதாலேயே ஆண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் பயிற்றுவிப்பாளர்கள் மூன்று தர முயர்வுகளுக்குப் பின்னர் தலைமைப் பயிற்றுவிப்பாளர்களாக முடியும். அவர்கள் திறமை பெற்றிருக்கும் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக வேறு விளையாட்டுகளிலும் பயிற்சி வழங்கமுடியும். மாணவர்கள் குறைந்தபட்சம் ஒரு விளையாட்டிலாவது திறமை பெற்றிருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள். இவர்கள் கல்வியமைச்சுக்குப் புறம்பான தனி சேவையாளர்களாகக் கணிக்கப்படுவார்கள். இலங்கையின் கல்வித்துறையில் இவ்வாறான தனிச் சேவையொன்று ஆரம்பிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும் - என்றார். (5)

# மத்தல வானூர்தி பங்கு விவகாரத்தில் இந்தியா விடாப்பிடி

கொழும்பு, ஓக. 22

மத்தல பன்னாட்டு வானூர்தி கூட்டு வியாபாரத்தில் 70 வீதப் பங்குகள் தனக்கு வழங்கப்படவேண்டுமென இந்தியா கோரியிருப்பதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வானூர்தி நிலையத்தின் நிர்வாகத்தை அரச மற்றும் தனியார் கூட்டுப் பங்களிப்புடன் நடத்துவதற்கான பிரேரணையை அமைச்சரவை கடந்த 9ஆம் திகதி அங்கீகரித்திருந்தது.

இந்தியா 70 சதவீதப் பங்குகளைக் கோரியிருந்தது. இலங்கை ஆரம்பத்தில் இதற்கு இணங்கியிருந்தது. இதன் பின்னர் இந்தியாவின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்காக 51 சதவீதப் பங்குகளை வைத்துக் கொண்டு எஞ்சிய 49 சதவீதப் பங்குகளை விற்பனை செய்யவே இலங்கை விரும்பியிருந்தது.

இது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந்தியா 70 சதவீதப் பங்குகள் வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்துள்ளது. இதனால் இது தொடர்பில் முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (5)

# காசல்ரீ நீர்த்தேக்கம் நிரம்பி வழியும் நிலைக்கு உயர்வு

கொழும்பு, ஓக. 22

மலைநாட்டின் மேற்குப் பள்ளத்தாக்கில் கடந்த வியாழக்கிழமை முதல் பெய்துவரும் மழையால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் நிரம்பிவழியும் மட்டத்திலிருந்து எட்டு அடிகள் குறைவான மட்டம் வரை நிரம்பியிருப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.


மவுசாகலை, விமல சுரேந்திர, கென்யோன், லக்ஸபான, நியூ லக்ஸபான மற்றும் பொல்பிட்டிய ஆகிய நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்திருப்பதால் நீர்மின் உற்பத்தியை வழமை நிலைக்குக் கொண்டுவர முடியுமென இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்திருக்கிறது. (5)

# வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதா?

## அறியும் வசதியை வழங்கியுள்ளது தேர்தல்கள் திணைக்களம்

கொழும்பு, ஓக. 22

நடப்பு ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை, தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்துக்கு சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.




2017ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணி கடந்த மே மாதம் ஆரம்பமானது. தற்போது வரைவு வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இருந்து இந்த ஆண்டு வரைவு பட்டியலில் நீக்கப்பட்டவர்களது பெயர்கள் மற்றும் சேர்க்கப்பட்டவர்களது பெயர்கள் என்பன, தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கிராம அலுவலர் அலுவலகங்கள், பிரதேச சபைகள் என்பவற்றில் அவற்றைப் பார்வையிட முடியும்.

தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத் தளத்துக்குச் சென்று, 2017ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் வரைவு பகுதியைக் 'கிளிக்' செய்து, தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொடுத்தால், நடப்பு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பெயர் சேர்த்துக் கொள்ளப்படாத, தகுதியுள்ள வாக்காளர்கள் கோரிக்கைப் படிவத்தின் ஊடாக, தேர்தல்கள் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்க முடியும். விசாரணைகளின் பின்னர் பெயர்கள் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)

# கிழக்கில் ஐ.ம.சு.மு. ஆட்சியாம்

## புதுக் கணக்குப்போடுகிறார் ஹிஸ்புல்லா

கொழும்பு, ஓக. 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழர்கள் மாத்திரமே வாக்களிப்பார்கள். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முஸ்லிம்கள் மாத்திரமே வாக்களிப்பார்கள். தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று மூன்று இனத்தவர்களது ஆதரவையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்தி கிழக்கின் ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றும்.

இவ்வாறு புதுக் கணிப்பு வெளியிட்டார் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா.

காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட ஹிஸ்புல்லா அங்கு மேலும் தெரிவித்ததாவது:



கிழக்கு மாகாண சபை அதன் பதவிக் காலம் நிறைவடைந்ததும் கலைக்கப்படும். கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் வெகு விரைவில் நடைபெறும்.

அதற்கான தயார்ப்படுத்தல்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். எமது கட்சிக்குள் இருவேறு அணிகள் வெவ்வேறாக செயற்பட்டாலும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நாங்கள் ஒன்றிணைந்தே செயற்படுவோம். கிழக்கு மாகாணத்தில் நாங்கள் இணைந்து செயலாற்றினால் மாத்திரமே மீண்டும் கிழக்கின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை இரண்டு முறை கைப்பற்றியிருந்தது. தற்போதும், அதிகமான ஆசனங்களை நம்வசம் வைத்திருந்தும் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாட்டில் நல்லாட்சி என்ற புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கியுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நாட்டின் அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் செய்கின்ற பணிகளுக்கு கிழக்கு மாகாண மக்கள் பக்க பலமாக இருக்க வேண்டும். கிழக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரத்தை அரச தலைவர் தலைமையிலான ஐக்கிய மக்கள்-சுதந்திர முன்னணி கைப்பற்றுமாயின் கிழக்கு மாகாணம் மேலும் அபிவிருத்தியடையும் - என்றார். (5)

# 14 வயதுச் சிறுவன் கோரக் கொலை

## புத்தளத்தில் சம்பவம்

கொழும்பு, ஓக. 22

புத்தளம், முந்தல் பிரதேசத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான தோட்டத்திலிருந்து சிறுவன் கோரமாகக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். நஸார் முஹம்மது நஸ்ரான் (வயது - 14) எனும் சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

உயிரிழந்த சிறுவன், தனது நண்பரான இளைஞனுடன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சமீரகம பிரதேசத்திலுள்ள தோட்டத்துக்குச் சென்றுள்ளனர். இதனைச் சிலர் கண்டுள்ளனர். மாலை 5 மணியாகியும் வீடு திரும்பாத நிலையில் சிறுவனின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் ஊர் மக்களின் உதவியுடன் சிறுவனைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

சிறுவனோடு சென்றதாகக் கூறப்படும் இளைஞரை கையும் மெய்யுமாகப் பிடித்த பிரதேச மக்கள், காணாமற்போனதாகக் கூறப்படும் சிறுவன் தொடர்பில் விசாரித்துள்ளனர். இளைஞன் முன்னுக்குப் பின் முரணான தகவல்களையே பிரதேச மக்களிடம் தெரிவித்துள்ளார். ஆத்திரமடைந்த பிரதேச மக்கள் சந்தேகநபரான இளைஞரை நையப்புடைத்ததுடன், தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். காணாமற்போனதாக கூறப்படும் 14 வயதுடைய சிறுவன் சமீரகம பிரதேசத்திலுள்ள தோட்டத்திலுள்ள குப்பை மேட்டிலிருந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் ஏக்கநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், பொதுமக்களின் பிடியிலிருந்த சந்தேகநபரான இளைஞரை மீட்டதுடன், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளையும் ஆரம்பித்தனர்.

சிறுவன் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாமெனத் தாம் சந்தேகிப்பதாக, முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். சிறுவனின் படுகொலையானது சமீரகம பிரதேசத்தில் பெரும் சோகத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (5)

## பதவி விலகி விடாதீர்கள்;

### விஜயதாசவிடம் கோரிய தேரர்கள்

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை, அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டாம் என்று தேரர்கள் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பௌத்த சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேரர்கள் அடங்கிய குழுவினர் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சுக்கு நேற்றுக் காலை வருகை தந்திருந்தனர்.

அமைச்சரை சந்தித்து ஆசீர்வாதம் வழங்குவதற்காகவும் பதவியிலிருந்து விலக வேண்டாம் எனக் கோருவதற்காகவும் தாம் வருகை தந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் அங்கு வருகை தராத காரணத்தால் அதிகாரிகளைச் சந்தித்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

'அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும். எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் பதவி விலக வேண்டாம்' என்று கோரிக்கை விடுப்பதாக ஊடகவியலாளர்களிடம் தேரர்கள் தெரிவித்துள்ளனர். (5)

# ஆண்டு இறுதிவரையில் தேர்தலை நடத்தமுடியாது

### சிக்கல்களை விளக்குகிறார் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, ஓக. 22

தேர்தல்கள் ஆணையகம் முகங்கொடுத்துவரும் நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக மாகாண சபைத் தேர்தலையோ, உள்ளூராட்சிச்சபைத்தேர்தலையோ இந்த ஆண்டு இறுதிவரை நடத்துவதற்கான வாய்ப்புக்



கள் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக் காலங்கள் ஒக்ரோபர் முதலாம் திகதி முடிவடையவுள்ளன. அந்தச் சபைகளுக்கான வேட்புமனுக்கள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் ஒக்டோபர் 2ஆம் திகதி வெளியிடப்படுமென அரசு பலமுறை அறிவித்துள்ளது. வர்த்தமானி அறிவித்தல் ஒக்டோபர் 2இல் வெளிவந்தால் வேட்புமனுக்களை ஏற்கும் திகதி அந்த மாதம் 25இல் முடிவடையும்.

வேட்புமனுக்கள் ஏற்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து தொடக்கம் எட்டு வாரங்களில் தேர்தல் நடத்தப்படவேண்டுமென மாகாண சபைத் தேர்தல் சட்டம் வரையறுத்துள்ளது. எட்டு வார கால அவகாசம் முடிவடையும் டிசெம்பர் 2ஆம் திகதி சனிக்கிழமையாக உள்ளது. அதற்கடுத்த நாள் 3ஆம் திகதி பூரணை தினமாகும். அன்றைய தினம் தேர்தலை நடத்துவதற்குப் பௌத்த விகாரைகள் மறுப்புத் தெரிவிக்க இடமுண்டு.

அதற்கடுத்த சனிக்கிழமையான டிசெம்பர் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதாயின் உயர் தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப்படவுள்ள பாடசாலைகளை வாக்குச்சாவடிகளாகப் பாவிக்கமுடியாது.

விடைத்தாள்களைத் திருத்தும் பணி டிசெம்பர் 11இல் முடிவடைந்ததும் 12ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகும் என்பதால் அன்றைய தினமும் தேர்தலை நடத்தமுடியாது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டவரைவு திருத்தத்துக்கான பிரேரணை நாளை மறுதினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அது விவாதிக்கப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு ஏற்கப்படுவதற்குக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது செல்லும். அதன்பின் வேட்புமனுக்கள் கோரப்பட்டு தேர்தலை நடத்த மேலும் கால அவகாசம் தேவைப்படும்.

இந்த நடைமுறைப் பிரச்சினைகளால் மாகாண சபைத் தேர்தலையோ, உள்ளூராட்சி-சபைத் தேர்தலையோ இவ்வருட இறுதிக்குள் நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை - என்றார். (5)

## பரீட்சைக்காக மாநாட்டை ஒத்திவைக்கிறது சுதந்திரக் கட்சி

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதிவரை நடைபெறவிருப்பதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாடு ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டு செப்ரெம்பர் 3ஆம் திகதி நடத்தப்படும் என்று அந்தக் கட்சியின் தலைமைச் செயலரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பு பொரளை கெம்பல் மைதானத்தில் செப்ரெம்பர் 2ஆம் திகதி இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உயர்தரப் பரீட்சை அன்றைய தினமும் நடைபெறவிருப்பதால் பரீட்சார்த்திகளின் நலன்கருதி மாநாட்டை அதற்கடுத்த நாள் ஒத்திவைக்க கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்திருக்கின்றது என்று அவர் மேலும் கூறியுள்ளார். (5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் நவரத்தினம் திருநாமச்சந்திரன்

(ஓய்வு பெற்ற சாவகச்சேரி பிரதேசச்பை ஊழியர்)

மண்ணில் 20.04.1951 — விண்ணில் 23.07.2017



கடந்த 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.07.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

அமரர் உயர்திரு

**சின்னத்துரை கிருஸ்ணபிள்ளை**

(ஓய்வுநிலை தபாலதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 24.08.2017 வியாழக் கிழமை காலை கீரிமலையில் நடைபெற்று. வீட்டுக்கிருத்தியம் நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூகராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
077 960 5119, 077 234 2140,
076 645 3274

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 22.09.1948 — இறப்பு 22.08.2016



அமரர் அன்ரனி சபரிமுத்து

ஓராண்டு கடந்து சென்றாலும் ஒவ்வொரு விநாடியும்
நீங்கள் எங்களுடன் வாழ்வதைப்
போல் உணர்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்
சகோதரிகள்.

## 18 ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர் குணசிங்கம் ஞானேந்திரன் (குட்டி)

(கண்ணன், உரிமையாளர்
கோபிகா ஆடையகம்)

தோற்றம் 07.01.1977
மறைவு 10.09.1999



நீ எங்கு சென்றாய் கண்ணா ? குட்டி !
என செல்லமாக அழைத்தோமடா
முருகப் பெருமானின் அருள் வேண்டி நீ தினமும்
தவறாது பிரதிஷ்டை செய்து வந்தாயே !
அந்த இறைவனும் உன் அன்புக்கு பக்திக்கு
முதலிடம் கொடுத்தாரோ ? நல்லூர்
பூங்காவனம் அன்று - நீ அந்த இறைவனின்
குழந்தையாக அவதாரம் எடுக்க சென்றாயோ கண்ணா ?
மண்ணிலே உன் நினைவுகள் எமது
மனதை வாட்டி நிற்குதையா !

40 6, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், நண்பர்கள்.
கோபிகா ஆடையகம்.

# 27ஆண்டுகளாக கிட்டாத நீதி இனி அரசை நம்பிப் பயனில்லை

## பன்னாட்டுப் பொறிமுறையே தேவை
## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 22
கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இலங்கை நீதிப் பொறிமுறை ஊடாக 27 ஆண்டுகள் கடந்தும் எந்த நீதியும் கிடைக்கவில்லை. நாம் பன்னாட்டு நீதிப்பொறிமுறையே அவசியம் என்று வேண்டுகின்றோம். மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் ஆலய முன்றலில் கைதின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பொதுச் செயலரும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கத்துக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதக் காலப் பகுதிகளில் இடம்பெற்ற கொடூரமான போர், இராணுவத்தின் அடக்குமுறைகள், தொடர்ச்சியான சுற்றிவளைப்புக்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் பயந்து, ஒளிந்து பாதுகாப்பற்ற சூழலில் இருந்தனர். பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம், சித்தாண்டி சிறி சித்தி வேலாயுத சுவாமி ஆலயத்தை நலன்புரி முகாமாக அறிவித்து அங்கு அடைக்கலம் அடையச்செய்தது.

இலங்கை இராணுவத்தினர் முகாமில் அடைக்கலம் தேடி வந்திருந்த இளைஞர்கள், மாணவர்கள், வறுமையான கூலித் தொழிலாளர்களையும் மூன்று சுற்றிவளைப்பு நடவடிக்கையின் மூலம் 62 பேரைக் கைது செய்து வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். கைது செய்யப்பட்ட அனைவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டான்சேனை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். 27 ஆண்டுகளாக அதன் பின்னர் என்னவென்று தெரியாத நிலமையிலேயே உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தமது உயிர்வாழும் உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் இழந்துள்ளனர். எங்கே என்ன நிலையில் இருக்கிறார்கள்? இருக்கிறார்களா, இல்லையா என்பதை அறிய நாம் துடித்துக் கொண்டிருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகளாகிய நாம் அச்சுறுத்தப்படுவதானது உண்மையைக் கண்டறிவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இது சாட்சிகளுக்குப் பாதுகாப்பு கிடையாது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. நிலைமாறுகால நீதியின் நியாயாதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது.

இலங்கை அரசு அரசியல் இயலாமையிலும் நல்லிணக்கம் சார்ந்து நேர்மையான எண்ணப்பாடு இல்லாமலும் இருப்பதாகவே காண்கிறோம். வடக்கு கிழக்கு மக்களுக்கு நீதியை வழங்கவோ சமாதானமான வாழ்வை உருவாக்கவோ இயலாத நிலையிலேயே இலங்கை அரசுள்ளது.

எமது பிரதேசத்தில கைதின் பின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இலங்கை நீதிப் பொறி முறை ஊடாக 27 வருடங்கள் கடந்தும் எந்த நீதியும் கிடைக்கப்பெறாத நிலையில் நாம் பன்னாட்டு நீதிப் பொறிமுறையே அவசியம் என்று வேண்டுகின்றோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகளுக்கும் ஏனைய சாட்சிகளுக்கும் இந்த விடயம் சார்ந்து செயற்படும் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கும் உரிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகள் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்பட அரச வன்முறைப் பொறிமுறைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவையாவையும் முறையே நடைபெறவும் உண்மையான நல்லிணக்கம் ஏற்படவும் வேண்டுமாயின் ஐ.நா. இலங்கை நிலைமாறுகால நீதி முன்னெடுப்புகளில் இணைப் பங்காளியாக வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5)

# படைவிட்டோடிகள் 5 ஆயிரம் பேர் கைது

முப்படைகளிலிருந்தும் தப்பிச்சென்று ஒளிந்து வாழ்ந்த ஒன்பது அதிகாரிகளும், 5 ஆயிரத்து 641 சிப்பாய்களும் இதுவரை கைதுசெய்யப்பட்டிருப்பதாக இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் றொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

இராணுவத்தின் 9 அதிகாரிகளும் 4 ஆயிரத்து 638 சிப்பாய்களும், கடற்படையின் 905 சிப்பாய்களும், வான் படையின் 98 சிப்பாய்களும் உள்ளடங்குகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை நாடெங்கும் மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனையின்போது மாத்திரம் இவர்களுள் ஒரு இராணுவ அதிகாரியும் 776 இராணுவச் சிப்பாய்களும் சிக்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

(5)




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2017
ஏவிளம்பி வருடம் 23.08.2017 முதல் 03.09.2017 வரை

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - 23.08.2017 புதன்கிழமை | - முற்பகல் 10.00 மணி |
| திருமுறைத் திருவிழா | - 25.08.2017 வெள்ளிக்கிழமை | - மாலை 06.00 மணி |
| திருமஞ்சத் திருவிழா | - 28.08.2017 திங்கட்கிழமை | - மாலை 06.00 மணி |
| வேட்டைத் திருவிழா | - 31.08.2017 வியாழக்கிழமை | - பிற்பகல் 02.00 மணி |
| கைலாச வாகன வீதிவலம் | - 31.08.2017 வியாழக்கிழமை | - மாலை 06.00 மணி |
| சப்பறத் திருவிழா | - 01.09.2017 வெள்ளிக்கிழமை | - மாலை 06.00 மணி |
| தேர்த்திருவிழா | - 02.09.2017 சனிக்கிழமை | - காலை 9.00 மணி |
| தீர்த்தத் திருவிழா | - 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை | - காலை 10.00 மணி |
| கொடியிறக்கம் | - 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை | - மாலை 06.00 மணி |
| பிராயச்சித்தம் | - 04.09.2017 திங்கட்கிழமை | - காலை 06.00 மணி |
| வைரவர் பொங்கல் | - 04.09.2017 திங்கட்கிழமை | - மாலை 04.00 மணி |

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

பனை அபிவிருத்திச்சபை
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,
புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

சர்வதேச கருத்தரங்கும்
கண்காட்சியும் - 2017
"பனை வளத்தின் மகிமையை
உலகறியச் செய்வோம்"
திகதி:
25, 26, 27/08/2017
நேரம்:
காலை 10.00 - இரவு 10.00
இடம்:
கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலின் கிராண்ட் போல்ட்ரும்,
காலிமுகத்திடல் மைதானம்

பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கட்டிடம்,
முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.பே: 021 222 2034 / தொலைநகல்: 021 222 4154 / மின்னஞ்சல்: slpdbho@yahoo.com

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
NP - BDT, HONDA HONET.
விலை நேரில்
077 611 0625, 076 738 4755

வீடு வாடகைக்குத் தேவை
சிறிய வைத்திய குடும்பத்துக்கு யாழ்.நகரை அண்டிய பகுதியில் கார் Park உடன் வீடு வாடகைக்குத் தேவை.
076 462 1813

நல்லூரில் தவறியது
தேரடிக்கும் ஆறுமுக சுவாமி வாசலுக்கும் இடையில் தேர் இழுக்கும் போது பதிவுத்திருமண மோதிரம் தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 388 4234

காணவில்லை
19.08.2017 சனிக்கிழமை சப்பரத் திருவிழா அன்று நல்லூரில் அடையாள அட்டையும் (580203736V) சாரதி அனுமதிப்பத்திரமும் தொலைந்து விட்டது. கண்டெடுப்பவர்கள் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.
077 724 2381

பெண்கள் வேலைக்கு தேவை
வவுனியாவிலுள்ள சிறுவர் இல்லத்தில் பணிபுரிவதற்கு முகாமையாளர் A/L படித்த, பராமரிப்பாளர் O/L படித்த இரு பெண்கள் உடன் தேவை.
வயது 28 - 50
இல்லத்தில் தங்கியிருப்பதுடன் சம்பளம் நேரில் பேசிக்கொள்ளப்படும்.
024 222 3683
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்,
வவுனியா.

ஒன்று கூடல்
கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1996ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்ற கலை, வர்த்தக, கணித மற்றும் விஞ்ஞான பாடநெறிகளில் கல்விகற்ற மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளது. ஆகவே 1996 ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்விகற்ற மாணவ, மாணவிகள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்தில் 25.08.2017 இற்கு முன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.
1) 077 881 3176
2) 077 645 2235
1996 ஆம் ஆண்டு உயர்தர
மாணவர்கள்.

# அமைச்சர்களே அரசை விமர்சிக்கும் அதிசயம்

## இங்கு மட்டும்தான் நடக்கின்றது என மகிந்த குத்தல் பேச்சு

கொழும்பு, ஓக. 22
உலகில் எந்தவொரு அரசையும் அதன் அமைச்சர்களே விமர்சித்த வரலாறு கிடையாது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு அண்ணாந்து பார்த்துக் கொண்டு தனது முகத்தில்தானே துப்பிக் கொள்கிறது. இந்த அரசின் அமைச்சர்களே அரசையும் அதன் செயற்பாடுகளையும் பகிரங்கமாக விமர்சிக்கின்றனர். உலகில் எந்தவொரு அரசையும் அதன் அமைச்சர்களே விமர்சித்த வரலாறு கிடையாது.

*கூட்டு அரசு அண்ணாந்து பார்த்துக் கொண்டு தனது முகத்தில்தானே துப்பிக் கொள்கிறது*

கூட்டு அரசில் அவ்வாறு நடக்கின்றது. அரசை விமர்சிக்கும் அமைச்சர்களும் தங்கள் பதவிகளிலிருந்து விலகத் தயாராக இல்லை. அரசை மட்டுமன்றி சக அமைச்சர்களையும் விமர்சித்துக் கொண்டு வெட்கம் கெட்டுப்போய் தங்கள் பதவிகளில் தொடர்ந்திருக்கின்றார்கள் - என்றார். (5)

### அனுமதியில்லாமல் கடற்சிப்பிகளை ஏற்றிச் சென்றவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 22
கிண்ணியாவிலிருந்து குளியாபிட்டிக்கு அனுமதிப் பத்திரமின்றி கடற்சிப்பிகளை ஏற்றிச்சென்ற சாரதி லொறியுடன் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாகக் கந்தளாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

5 லட்சம் பெறுமதியான கடற்சிப்பிகளை டிப்பர் லொறியில் கொண்டு செல்வதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து கந்தளாய் தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கமைய போட்டங்காடு சந்தியில் வாகனங்களை சோதனையிட்ட போதே லொறியுடன் சாரதியை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (5)





# காகிதத்தில் உள்ளதை நடைமுறைப்படுத்துங்கள்

## மாகாணசபை சிறப்பாக இயங்க அதுவே போதும் என்கிறார் கிழக்கு முதல்வர்

மட்டக்களப்பு, ஓக. 22
13 ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டு காகிதத்தில் எழுதப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின் மாகாண சபை சிறப்பாகச் செயற்பட முடியும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்திலிருந்து வேலையில்லாப் பிரச்சினையைத் துடைத்தெறிவதும் வாழ்வாதாரத்தை உயர்த்தி வறுமையை ஒழிப்பதையும் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இந்த இரண்டு இலக்குகளுக்கும் தலைமை அமைச்சரும், அரச தலைவரும் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். கிழக்கு மாகாண நல்லாட்சியிலே வேலையில்லாப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக ஆரம்பம் முதல் குரலெழுப்பி வருகின்றோம். அதன் பயனாக பட்டதாரிகள் ஆயிரத்து 700 பேருக்கு ஒரேடியாக நியமனங்களை வழங்க முடிந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பரந்து கிடக்கும் பல வளங்களை பயன்படுத்தி மனித வளத்தையும் சேர்த்து வேலைவாய்ப்பை ஏற்படுத்தி வறுமையை ஒழிப்பதற்குத் திட்டங்களை வகுத்துள்ளோம்.

இன ஒற்றுமை அரசை நாட்டுக்கு முன்னுதாரணமாக கிழக்கில் நடாத்தி வருகின்றோம். கொழும்பு அரசிடமிருந்து கிடைக்கும் நிதி உதவி குறைவாக உள்ளது. அதனை எதிர்காலத்தில் அதிகரித்து வழங்க வேண்டும் என்றார். (5)

# இன ஆதிக்கம் செலுத்தினால் தோற்றுப்போவீர்கள்

## இப்படி எச்சரிக்கிறார் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர்

மட்டக்களப்பு, ஓக. 22
கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது சவாரி விடுவதற்கு நினைத்தால் எல்லோரும் தோற்றுப்போக வேண்டிய நிலை ஏற்படும். அனைவரும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சிங்காரவேலு தண்டாயுதபாணி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைமை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களும் தங்களுடைய தனித்துவத்தை பேணி தங்களைத் தாங்களே ஆளக்கூடிய சுயாட்சியின் அடிப்படையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வல்லவராக நின்று உழைப்பார் என்ற நம்பிக்கை சிறுபான்மை மக்களுக்கு உள்ளது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணம் அபிவிருத்தியிலே பெரிய இடைவெளி கொண்டதாகக் காணப்படுகிறது. இது இங்குள்ள அனைவருக்கும் தெரிந்த விடயம். அபிவிருத்தி இடைவெளி நிரப்பவேண்டிய தேவையும் அவசரமும் இருப்பதை உணர்ந்து கொழும்பு அரசின் அமைச்சர்கள் உதவி வழங்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் எல்லோரும் ஒன்றாக வாழுகின்றோம். மாகாண சபையின் நடவடிக்கையில் அதனைக் காணுகின்றோம். முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள் உறுப்பினர்கள் இணைந்து மாகாண சபையை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில இடைவெளிகள் காணப்பட்டாலும் அவ்வப்போது தோன்றுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு சிறப்பாக மாகாணசபை இயங்குகின்றது.

இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேற்றப்பட்ட மக்களுடைய பிரச்சினைகள் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. படித்த இளையோர் வேலையின்மை காரணமாகத் தமது குடும்பத்தை நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. தமிழ்ப் பிரதேச மக்களின் தேவைகளைத் தமிழ் மக்களுக்கு காணப்படும் இடைவெளிகளை நிரப்பக் கூடிய வகையில் இங்குள்ள அமைச்சர்களான ஹக்கீம் மற்றும் பைசல் காசிம் ஆகியோர் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

[illegible] மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் [illegible] தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க [illegible]டுத்துள்ள புதிய அரசமைப்புத் தொ[illegible] [illegible] நல்ல பயனைத் தரும் என்று [illegible]கள் எதிர்பார்த்துள்ளோம். இதனைக் குழப்புவதற்கு தீய சக்திகள் முயற்சி செய்கின்றன - என்றார். (5)

### ஐ.நா. தீர்மானம் முழுமையாக நடைமுறையாக வேண்டும்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயத்தில் உறுதியாக உள்ளது. இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் கீச்சகத்தில் பதிவிடப்பட்டுள்ளது. நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களை முன்னிறுத்தியே அந்த நீதி கிடைக்க வேண்டும். காயங்களை ஆற்றுப்படுத்துவதற்கு வழிவகுக்கவேண்டும். அதனைத் தவிர பன்னாட்டுச் சமூகமோ பாதிக்கப்பட்டவர்களோ வேறு எதனையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளது. (5)

# அபிவிருத்தியைப் பகிர்வதில் இனங்களிடையே சந்தேகம்

## மு.க. தலைவர் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22
போருக்குப் பின்னர் அபிவிருத்தி என்ற விடயத்தில் இனங்கள் மத்தியிலே புரிந்துணர்வு இல்லை. அபிவிருத்திகளைப் பகிர்ந்து கொள்வதிலே இனங்களுக்கிடையில் தொடர்ந்தும் சந்தேகம் நிலவுகின்றது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:
அரசியல் தலைமைகள் கூட்டு அரசை அமைத்தவுடன் இன ஒற்றுமை வந்து விடமாட்டாது. இன ஒற்றுமையானது அடிமட்ட சமூக மக்களிடமிருந்து வருவதன் ஊடாகவே அதனை அனுபவிக்க முடியும்.

அரச ஊழியர் நியமனங்களில், பதவி நிலைகளில், நிறைவேற்று அதிகாரங்களில் சமத்துவம் பேணப்பட வேண்டும். இவ்வாறான பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில் தான் ஒரு நெருக்கடியான ஆட்சி கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்றது.

தமிழ் மக்களுக்கு உரிய பங்கு அபிவிருத்திக்குப் போக வேண்டும் என்பதற்காக எனது அமைச்சினூடாக 200 மில்லியன் ரூபாவை மட்டக்களப்பு நகரின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக செலவிட்டுள்ளேன் - என்றார். (5)

# பாதாள உலகக் குழுவை ஒடுக்க சிறப்புப் படை

நாட்டில் பரவலடைந்துள்ள பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், அவர்களை ஒடுக்கவும் சிறப்பு அதிரடிப் படையில் ஆயிரம் பேர் கொண்ட சிறப்புப் படையணி நிறுவப்படவுள்ளது. இந்தப் படையணியில் உள்ளடங்கும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கை[illegible] தற்போது ஆரம்பி[illegible]கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் பாதாள உலகக் குழுவினரை ஒடுக்கல் ஆகிய பணிகளுக்காக இந்தப் படையணி களமிறக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அந்த படையணியில் இணைத்துக்கொள்ளப்படுவோருக்குப் போதைப்பொருள் தடுப்பு, பாதாள உலக கட்டுப்பாட்டு உபாயம் என்பன தொடர்பில் சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பு அதிரடிப்படை கட்டளைத் தளபதி மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.ஆர்.லத்தீபின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (5)

### இரண்டு மாதக் குழந்தை தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்ப்பு

கொழும்பு, ஓக. 22
பொகவந்தலாவில் இரண்டு மாதக் குழந்தை அடுப்பில் தவறி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டு தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குழந்தையின் தாய் வீட்டு வேலைகளில் ஈடுபட்டு கொண்டிருந்த போது இரண்டு மாதக் குழந்தை அடுப்பில் தவறி விழுந்தாக மருத்துவரிடம் தாயார் தெரிவித்துள்ளார். தாயாரின் தகவல்களில் மருத்துவருக்குச் சந்தேகம் ஏற்பட்டதையடுத்து அவர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

பொலிஸார் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அடுப்பின் உயரமும் குழந்தை தொங்க விடப்பட்டிருந்த ஏணையின் உயரமும் ஒரே அளவில் இருந்துள்ளது. ஏணையில் தீப்பற்றிக் குழந்தைக்கு தீக்காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5)

## அதிரடிப் படை மீது துப்பாக்கிச் சூடு; 3 'கேடிகளைத்' தேடி வேட்டை

நீர்கொழும்பு குரண பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் மீது கடந்த 12ஆம் திகதி பாதாள உலகக் கும்பல் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பில் மேலும் மூன்று பயங்கரக் 'கேடிகளைத்' தேடிப்பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரியும் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருமான எம்.ஆர்.லத்தீப் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஏற்கனவே நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வந்த வானைத் தவிர வேறொரு வானில் மேலும் ஒரு கும்பல் இருந்ததாகவும், பொலிஸ் அதிரடிப் படையினர் முதலாவது வானைச் சுற்றிவளைத்ததும் மற்ற வான் தப்பிச் சென்றிருப்பதாகவும் அதில் இருந்தவர்களைக் கைது செய்யவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதிரடிப்படையினரால்சுற்றிவளைக்கப்பட்ட வானிலிருந்து கைதுசெய்யப்பட்ட நால்வரும் பியகம பிரதேசவாசியான சம்பிக்க குமார ஜயதுங்க (வயது - 28), சீதுவை பிரதேசவாசியான வஜிரகுமார (வயது - 41), தெல்தெனியவைச் சேர்ந்த ஜானக அருண சாந்த (வயது-40), ராகமையைச் சேர்ந்த தரிந்து மடுசா (வயது - 31) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வஜிரகுமார, கடந்த பெப்ரவரி மாதம் களுத்துறை சிறைச்சாலை பஸ்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் பிரதான சூத்திரதாரியான மாகந்துர மதூசின் நெருங்கிய சகாவென தெரியவந்துள்ளது. (5)

# உயிர் துறக்கும்வரை தவநிலையில் முருகன்

### 28 ஆண்டுகள் சிறையில் வாடியவர் எடுத்த முடிவு

கொழும்பு, ஓக. 22

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனையை அனுபவித்து வரும் முருகன், உயிர் துறப்பதற்காகத் தொடர்ச்சியாக நான்கு நாள்கள் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், கடந்த 28 ஆண்டுகளாகவேலூர்ச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஆயுள் தண்டனைக் கைதிகள் பொதுவாக 14 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்படுவது வழக்கம். முருகன், அவரது மனைவி நளினி உள்ளிட்ட, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களை 28 ஆண்டுகளாகியும் விடுதலை செய்வதற்கு இந்திய நடுவண் மறுத்து வருகிறது.

இதற்கான சட்டப் போராட்டங்கள் தொடர்ந்து வரும் நிலையில், தனக்கு விடுதலை கிடைக்காது என்பதால், சிறையிலேயே, உயிர்துறக்க அனுமதி வழங்கும்படி, சிறைத்துறை உயர் அதிகாரிகளுக்கு முருகன் கடிதம் அனுப்பினார். இந்தக் கடிதத்துக்கு அதிகாரிகள் தரப்பில் இருந்து இதுவரை பதில் அளிக்கப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த 4 நாள்களாக உணவு எதையும் உட்கொள்ளாமல், முருகன் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்.

உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பிக்க முன்னரே, முருகன், பல வாரங்களாக, ஒரு நேர உணவையும், பின்னர் தனியே பழங்களையும் மாத்திரம் உட்கொண்டு வந்தார்.

தற்போது அவர், எதையும் உண்ணாமல் உயிர் துறக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதால், அவரது உடல்நிலை மோசமடைந்துள்ளது. முருகனை வேலூர் அரசு செல்வதற்காக, நோயாளர் காவு வண்டி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)



## தாய்வீடு திரும்பத் தயாராகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஓக. 22

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீளவும் வருமாறு அதன் பொதுச் செயலர் என்னை அழைத்துள்ளார். பெரும்பாலான உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

'தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து நான் ஆராய்ந்து வருகின்றேன். முக்கிய தேர்தலுக்குரிய அறிவிப்பு வெளியான பின்னர் எனது அரசியல் பயணம் மீண்டும் ஆரம்பமாகும்' என்று குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலராகப் பதவிவகித்த திஸ்ஸ அத்தநாயக்க கடந்த அரசதலைவர் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி மகிந்தவுக்கு ஆதரவு வழங்கினார். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவரது அரசியல்வாழ்வு கேள்விக்குறியானது. மகிந்த அணியுடனான அரசியல் உறவுகளையும் முறித்துக்கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மறுபடியும் வருவதற்கு அவர் முயற்சித்து வருகிறார் எனக் கூறப்படுகின்றது. அதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்கள் சிலர், திஸ்ஸ அத்தநாயக்க மறுபடியும் கட்சிக்குள்வருவதைவிரும்பவில்லையெனவும் கூறப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த திஸ்ஸ அத்தநாயக்க, சுமார் 35 வருடங்களுக்கு மேலாக அந்தக் கட்சியில் அங்கம் வகித்தார். கட்சித் தலைமைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் உடனிருந்து ஆதரவு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



## மகிழ்ச்சி

கிரித்திவெல பேருந்து நிலையம் நேற்றுமுன்தினம் இரவு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சர் சரத் பொன்சேகா ஆகியோர் கலந்து கொண்டு கூடிக் குலாவினர். (5)

## டெங்கு குறைந்துள்ளபோதிலும் தற்போதைய மழையால் மீண்டும் அதிகரிக்கும் அபாயம்

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மும்முரம்

கொழும்பு, ஓக. 22

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகின்றபோதிலும் இடைக்கிடையே பெய்துவரும் மழையால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய அபாயம் தோன்றியிருப்பதாகச் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் ஆலோசகரும் சமூக மருத்துவ நிபுணருமான திருமதி பிரேசிலா சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூலை இறுதி வாரத்தில் 9 ஆயிரத்து 441 ஆக இருந்த டெங்கு நோயாளர்களின் தொகை ஓகஸ்ட் இரண்டாவது வாரத்தில் 3 ஆயிரத்து 862 ஆகக் குறைந்துள்ளது. இது கிட்டத்தட்ட 41 வீத வீழ்ச்சியாகும்.

டெங்கு நோயின் தீவிரத்தைக் குறைப்பதில் மக்கள் இப்போது ஆர்வம் காட்டிவருகிறார்கள். அவர்களது வீடுகளையும், வளவுகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சிகள் செய்கின்றனர். பாடசாலைகள், அரச மற்றும் தனியார் கட்டடங்கள் அடிக்கடி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில வாரங்களாக நிலவிவரும் வறட்சியான காலநிலையும் டெங்கு நுளம்புகள் குறைந்திருப்பதற்கு ஒரு காரணமாகும். வடகிழக்கு பருவக்காற்றால் நாட்டின் பல பகுதிகளில் இடைக்கிடையே மழை பெய்து வருவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மக்கள் முன்னரைவிட இப்போது விழிப்பாகச் செயற்பட வேண்டும் - என்றார். (5)

## சின்னையாவை தளபதியாக்கி அரசு தேசிய பாதுகாப்பைப் பலிகொடுத்துள்ளது

### சீறுகிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஓக. 22

அமெரிக்க இராணுவத் தலைமையகத்திடமிருந்து (பென்டகன்) சம்பளம் வாங்கிய சின்னையாவை கடற்படைத் தளபதியாக நியமித்து தேசியப் பாதுகாப்பை அரசு பலிகொடுத்துள்ளது. இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையின் 21ஆவது தளபதியாக றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நியமிக்கப்பட்டுள்ள நிலையிலேயே விமல் வீரவன்ச மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

புத்தளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள சின்னையாவின் இனம் குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை. போர்முடிவடைந்ததும் அவர் கடற்படையிலிருந்து பதவி விலகிச்சென்றார். அதற்குரிய கடிதத்தையும் கையளித்திருந்தார். அமெரிக்கத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நான்கு வருடங்கள் பணியாற்றினார். அவருக்கு அமெரிக்க இராணுவத் தலைமையகத்தில் இருந்தே சம்பளம் வழங்கப்பட்டது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் அரசியல் பழிவாங்கலுக்குள்ளானவர் என்ற போர்வையில் சின்னையா மீண்டும் கடற்படைக்கு உள்வாங்கப்பட்டு, கிழக்குப் பிராந்தியத்துக்கான கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறானதொரு பின்புலத்தில் தற்போது கடற்படைத் தளபதியாக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் கடல்பாதுகாப்புக்கு, திருகோணமலை துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நாடாக விளங்கும் அமெரிக்கா, கடல் பாதுகாப்பு குறித்து விழிப்பாக இருந்துவருகின்றது. எனவே, அந்த நாட்டுக்குத் தேவையான ஒருவரை கடற்படைத் தளபதியாக்கினால் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு என்ன நடக்கும்?

போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு படையினர் இன்று சிறையில் அடைக்கப்பட்டுவருகின்றனர். இராணுவம், கடற்படையைச்சேர்ந்த புலனாய்வாளர்களை சிறையில் அடைத்து தேசியப் பாதுகாப்பைத் தினம், தினம் அரசு பலிகொடுத்து வருகின்றது - என்றார். (5)

## விஜயதாச பதவி விலகவேண்டும்

### மறைமுகமாக சரத் அமுனுகம சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 22

அமைச்சரவைப் பொறுப்புக்களை மீறும் எந்த அமைச்சரும் பதவி விலக வேண்டும் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தொடர்பிலேயே அவரின்பெயரைக்குறிப்பிடாமல் சரத் அமுனுகம இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக குத்தகைத் தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தை பொதுவெளியில் வைத்து விஜயதாச ராஜபக்ச விமர்சித்திருந்தார். அவரைப் பதவி நீக்கவேண்டும் என்று அவரின் சொந்தக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் பலரும் கோரிவருகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா, நீதியமைச்சர் விஜயதாச பதவி விலகினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணையவேண்டும் என்று கோரியிருந்தார். இவ்வாறானதொரு நிலையில் சிறப்புத் திட்டங்களுக்கான அமைச்சர் சரத் அமுனுகம, விஜயதாச பதவிவிலக வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். (5)

## 7 கோடி தமிழ் மக்களும் பா.ஜ.கவில் இணையவேண்டுமாம்

சென்னை, ஒக. 22
தமிழகத்தில் உள்ள சுமார் 7 கோடி தமிழ் மக்களும் பா.ஜ.கவில் இணைய வேண்டும் என்று தெரிவித்தார் பொன். ராதாகிருஷ்ணன். திருச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பா.ஜ.கவுக்கு இந்தியாவெங்கும் பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்திலும் பாரதத் தலைமை அமைச்சர் மோடிக்கு பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 7 கோடி தமிழர்களும் பாரதிய ஜனதாவில் இணையவேண்டும் என்பதே எனது விருப்பம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)





## அ.தி.மு. கழக அரசை வீழ்த்த தி.மு.க. திட்டம்

சென்னை, ஒக. 22
தமிழகத்தின் முதல்வர் பழனிசாமியும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் இணைந்துள்ள நிலையில், அ.தி.மு.க. அரசை வீழ்த்துவதற்கான முயற்சிகளை தி.மு.க. வெளிப்படையாகவே தொடங்கியுள்ளது.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் மூன்று பிரிவாக அ.தி.மு. கழகம் பிரிந்தது. எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம், தினகரன் ஆகியோர் ஒவ்வொரு தரப்புக்கும் தலைமை தாங்கினர். தினகரனை நீக்கிவிட்டு கட்சியையும், ஆட்சியையும் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தி.மு. கழகத்துக்கு பெரும் பின்னடைவு என்று கருதப்படும் நிலையில், தனது சமூக வலைத்தளங்களில் அ.தி.மு. கழகத்தை ஒரு பிடிபிடித்து வருகிறார் ஸ்டாலின்.

"பழனிசாமி அரசு விரைவில் வீட்டுக்கு செல்வதே தமிழகத்துக்கு நல்லது என்பதால், அரச ஊழியர்களுடன் இணைந்து இந்த அரசை ஜனநாயகரீதியில் வீழ்த்தி, அரச ஊழியர்களையும், மக்களையும் காப்பாற்றும் பணியில் திமுக தீவிர கவனம் செலுத்தும்'

'ஜனநாயக முறையில் மக்களைச் சந்தித்து ஆட்சியமைப்பதையே திமுக விரும்புகிறது. அதிமுக எம்.எல்.ஏ.க்களை இழுத்து குறுக்கு வழியில் ஆட்சிமையக்க விரும்பவில்லை'

'பேச்சின் மூலம் இதுபோன்ற போராட்டங்களை கையாளும் தகுதி, திறமை இல்லாத சர்வாதிகார 'குதிரைபேர அரசு' விரைவில் ஜனநாயக ரீதியில் வீழ்த்தப்படும்'

'10 லட்சத்திற்கும் மேலான அரசு ஊழியர்கள் கோரிக்கைகளை குதிரைபேர அரசு கண்டுகொள்ளாமல், போராட்டங்களை காவல் துறை மூலம் அடக்குவது கண்டனத்திற்குரியது.'

'அறியாமை, அலட்சியம், ஆணவப்போக்குடன் செயற்படும் அதிமுக அரசு' ஆகியன ஸ்டாலின் சமீப காலமாக வெளியிட்ட ருவிற்றர்

# கட்சி ஓ.பி.எஸ்ஸி
# ஆட்சி இ.பி.எஸ்ஸி

## அ.தி.மு.க. அணிகள் இணைந்தன

சென்னை, ஒக. 22
தமிழகத்தின் ஆளும் கட்சியான அ.தி.மு. கழகம் கருத்து முரண்பாடுகளைக் களைந்து நேற்று இணைந்தது. தமிழகத்தின் துணை முதலமைச்சர் பொறுப்பும், அ.தி.மு. கழகத்தின் வழிகாட்டல் (நிர்வாகம்) குழுவின் ஒருங்கிணைப்பாளர் பொறுப்பும் ஓ.பன்னீர்செல்வத்துக்குக் கொடுக்கப்பட்டன. 196 நாள்களின் பின்னர் இந்த இணைப்பு நடைபெற்றுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவின் பின்னர் முதல்வராக பன்னீர்செல்வம் பொறுப்பேற்றார். பதவியில் இருந்து சசிகலாவால் ஓ.பன்னீர்செல்வம் அகற்றப்பட்டதன் பின்னர் அ.தி.மு. கழகம் இரண்டாக உடைந்தது. சசிகலா சிறை சென்றதன் பின்னர் அ.தி.மு. கழகம் மூன்றாக உடைந்தது. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தினகரன் ஆகியோர் ஒவ்வொரு தரப்புக்கும் தலைமை தாங்கினர்.

தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் தினகரன் சிறைசென்றார். அதன்பின்னர் இருமுனை மோதல்கள் உச்சம் தொட்டன. தினகரன் பிணையில் இருந்து வெளிவந்ததும் அவரின் பக்கம் 17 சட்டமன்ற உறுப்பினர்கள் தாவினார்கள். இதனால் தனது ஆட்சியைத் தக்கவைக்க வேண்டிய தேவை எடப்பாடியின் தரப்பினருக்கு இருந்தது. இந்தப்பின்னணியிலேயே இந்த இணைப்பு நடைபெற்றது.

**வெள்ளிக்கிழமை இரவு ஆரம்பித்தது பரபரப்பு**

இரு அணிகளும் இணைகின்ற முக்கியப் பேச்சுக்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றன. எடப்பாடியின் வீட்டில் அவரின் ஆதரவாளர்களும், ஓ.பன்னீர்செல்வத்தின் வீட்டில் அவரின் ஆதரவாளர்களும் நீண்ட நேரம் பேச்சு நடத்தினர்.

இணைப்பு நடைபெறுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் வெள்ளிக்கிழமை இரவே ஏற்பட்டன. ஜெயலலிதாவின் சமாதியும் அலங்கரிக்கப்பட்டது. இதனால் அங்கு தொண்டர்கள் குவிந்தனர். பின்னர் ஏற்பட்ட கருத்து மோதல்கள் காரணமாக கடைசிக் கட்டத்தில் இணைப்புக் கைவிடப்பட்டது.



> ❝ கட்சியும், சின்னமும் மீட்கப்பட்டதும் ஓ.பன்னீர்செல்வம் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்பார்.

**நேற்று உச்சக்கட்டப் பரபரப்பு**

அ.தி.மு. கழகம் நேற்று இணையும் சாத்தியக்கூறு உள்ளது என்று இந்திய ஊடகங்கள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தன. இதனால் தமிழகத்தில் நேற்று காலை முதல் உச்சக் கட்டப் பரபரப்பு ஏற்பட்டது. நண்பகல் 12 மணியளவில் இணைப்பு நடைபெறும் என்று இருந்தது. எனினும் சசிகலா கட்சியில் இருந்து நீக்கப்படுவார் என்று எழுத்துமூலம் வழங்கினால் மட்டுமே இணைப்புச் சாத்தியம் என்று ஓ.பன்னீர்செல்வம் தரப்பு கடைசிக் கட்டத்தில் விடாப்பிடியாக நின்றது.

இதையடுத்து எடப்பாடியின் தரப்பில் இருந்து சில அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம் வீட்டுக்கு விரைந்தனர்.

அவர்கள் ஓ
சந்தித்து உ
னர்சுமார்45
கழகத்தை
ஓ.பன்னீர்செ
பாடியும் அ
யடுத்து இ
சசிகலாவை
நடவடிக்கை

**ஒருங்கிணை**
**ஓ.பன்னீர்செ**

அ.தி.மு. க
சின்னம் ஆ
யத்தால் தற்
ளது. இத
பொதுச் செ
ளரை தற்
அறிவிக்க மு
நிலை உ
ஒருங்கிணை
குழுத் தலை
ஓ.பன்னீர்செ
அறிவிக்க
டுள்ளார்.
கட்சியும்,
மும் மீட்கப்
ஓ.பன்னீர்செ
பொதுச் செ
ராகப் பொறு
பார்.
இணை ஓ
ணைப்பா
உள்ள எட
பழனிச்
துணைப்
செயலாள
பொறுப்பே
என்று இந்தி
கங்கள்செய்
யிட்டன.




## தினகரனின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியான ஆலோசனை

பிரிந்திருந்த ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் மீண்டும் இணைந்துள்ள நிலையில், தினகரன் தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களுடன் நேற்று காலை முதல் மாலை வரை கலந்தாலோசனையில் ஈடுபட்டார்.

ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். தரப்பினர் இணைகின்றனர் என்று பேச்சு வந்ததன் ஆரம்பத்தில் இருந்தே தினகரன் அணியினர் ஆலோசனையில் ஈடுபட்டும், பெங்களூர் சிறைக்குச் சென்று சசிகலாவைச் சந்தித்தும் வந்தனர்.

இந்த நிலையில் இணைப்பு நடைபெற்ற நேற்றையதினம் அவர்கள் தமது ஆலோசனையில் மிகத் தீவிரம் காட்டினர் என்று இந்திய உடகங்கள் குறிப்பிட்டன.

எடப்பாடியின் பக்கம் தமது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் உள்ளனர் என்றும், தேவை ஏற்பட்டால் அவர்கள் தமது பக்கம் வருவார்கள் என்றும் தினகரன் தெரிவித்தார் என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)


## தமிழக விவசாயிகளின் போராட்டம் தொடர்கிற

சென்னை, ஒக. 8
பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் டெல்லி ஜந்தர்மந்தரில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். 37ஆவது நாளாக நேற்றும் அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

விவசாயக் கடன்களைத் தள்ளுபடிசெய்ய வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், விளைபொருள்களுக்கு இலாபகரமான விலை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில், டெல்லி ஜந்தர் மந்தரில் தமிழக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், ஒவ்வொரு நாளும் விவசாயிகள் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். உடலில் இலை தழைகளைக் கட்டிக்கொண்டு, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி போராட்டம் நடத்தியிருந்த அவர்கள், நேற்றுமுன்தினம் முக்காடு அணிந்தபடி போராட்டம் நடத்தினார்கள். (ம)





# ிடம்
# ிடம்

கள் ஓ.பன்னீர்செல்வத்தைச்
து உரையாடினர். இதன்பின்
மார்45நிமிடங்களில்தலைமைக்
த்தை நோக்கிப் புறப்பட் டார்
னீர்செல்வம். முன்னதாக எடப்
ம் அங்கு வந்திருந்தார் இதை
து இணைப்பு நடைபெற்றது.
ாவை கட்சியில் இருந்து நீக்க
க்கையும்மேற்கொள்ளப்பட்டது.

**ங்கிணைப்பாளராக**
**ன்னீர்செல்வம்**

மு. கழகத்தின் பெயர், கட்சிச்
ம் ஆகியன தேர்தல் ஆணை
ால் தற்போது முடக்கப்பட் டுள்
இதனால்
ுச் செயலா
தற்போது
ிக்க முடியாத
உள்ளது.
ங்கிணைப்புக்
தலைவராக
னீர்செல்வம்
விக்கப்பட்
ார்.
யும், சின்ன
ீட்கப்பட்டதும்
னீர்செல்வம்
ுச் செயலாள
பொறுப்பேற்

ண ஒருங்கி
ப்பாளராக
எடப்பாடி
னிச்சாமி
ணப் பொதுச்
லாளராகப்
ுப்பேற்பார்
இந்திய ஊட
ர்செய்திவெளி
ன. (ம)







அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கும், வெள்ளை இனத்தவர்களுக்கும் இடையே சமீபகாலமாக மோதல் நடைபெற்றுவரும் நிலையில், பொஸ்டன் மாகாணத்தில் கறுப்பினத்தவர்களுக்கு ஆதரவாக மிகப்பெரும் பேரணிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டன. ஒட்டு மொத்தமாக சுமார் 30ஆயிரம் மக்கள் இந்தப் பேரணிகளில் பங்குபற்றினர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

# சிங்கப்பூர் கடலில் கப்பல்கள் விபத்து

சிங்கப்பூர், ஓக. 22
சிங்கப்பூர் கடல் பகுதியில் சென்ற அமெரிக்க போர்க் கப்பல், சரக்கு கப்பலுடன் மோதி நேற்று விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 10 சிப்பாய்கள் காணாமல் போயுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. இந்த விபத்தில் அமெரிக்க போர்க் கப்பல் கடும் சேதம் அடைந்தது. சரக்கு கப்பலில் போர்க் கப்பலை விட அதிக எடையுடன் இருந்தது. ஏனெனில் அதில் சுமார் 30 ஆயிரம் தொன் சரக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. (ம)

# ‘ஜெ’,எம்.ஜி.ஆர்.சமாதிகளில்தொண்டர்கள்கொண்டாட்டம்

சென்னை, ஓக.. 22
ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். அணிகள் இணைந்ததை அடுத்து தொண்டர்கள் தலைமைக் கழகத்திலும், ஜெயலலிதா சமாதியிலும் திரண்டிருந்தனர். அவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக பட்டாசு வெடித்துக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இணைப்பிற்காக ஓ.பி.எஸ்., மற்றும் எடப்பாடி இருவரும் தலைமைக் கழகத்துக்கு வந்தபோது மலர்தூவி, பட்டாசு வெடித்து பெரும் எடுப்பில் வரவேற்புக் கொடுக்கப்பட்டது. அணிகள் இணைந்ததன் பின்னர் அவர்கள் இருவரும் ஜெயலலிதாவின் சமாதிக்குச் சென்றனர். இணைப்பின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அங்கும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் சமாதிகள் வண்மலர்களால் விசேட விதமாக அலங்கரிக்கப்பட்டன. (ம)




# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த
**அமரர்**
**சொர்க்கலிங்கம் பரமானந்தம்**
(முன்னைநாள் ராஜேந்திரா இன்ரஸ்ரி உரிமையாளர்)



நிஜமாக நீ மறைந்து
ஓராண்டு ஆனதோ!
நீ இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ?
உன்னை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடி விட்டாலும் - நண்பா
உன்னை எங்கள் உள்ளத்தில்
வைத்துப் பூஜிப்போம்

**உன் பிரிவால் துயருறும்**
**நண்பன்**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# விக்னேஸ்வரன் வரமா, சாபமா?

வடக்கு மாகாண அமைச்சரவைக் குழப்பங்களைத் தொடர்ந்து அமைச்சர் டெனீஸ்வரனைக் கட்சியிலிருந்து 6 மாதங்களுக்குத் தற்காலிகமாக நீக்கியிருக்கிறது ரெலோ அமைப்பு. அதன் மூலம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் நடவடிக்கைகள் ஊடாக கட்சிக்குள் உடைவு அல்லது குழப்பம் ஏற்பட்ட மூன்றாவது அமைப்பாகி இருக்கிறது ரெலோ.

முதலமைச்சராகப் பதவியேற்றதில் இருந்தே சி.வி.விக்னேஸ்வரனின் நடவடிக்கைகள் ஏதோவொரு விதத்தில் கட்சிகள் அனைத்தையும் பாதித்துள்ளன. கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையிலான உறவுகளை மட்டுமல்ல, கட்சிகளுக்கு உள்ளே உறுப்பினர்கள் இடையிலான உறவுகளையும் பாதித்துள்ளன.

முதன்முதலில் அமைச்சரவையை நியமித்தபோதே இந்தப் பிரச்சினை ஆரம்பித்துவிட்டது. தகுதியானவர்களைத்தான் அமைச்சர்களாக நியமிப்பேன் என்று கூறிக்கொண்டு ஈபிஆர்எவ் அமைப்பின் கோரிக்கையை நிராகரித்து பொ.ஐங்கரநேசனை விவசாய அமைச்சராக நியமித்தார். இதன் மூலம் ஈபிஆர்எல்எவ் அமைப்பிலிருந்து ஐங்கரநேசன் பிரியக் காரணமானார்.

ஊழல் குற்றச்சாட்டு விசாரணையின் முடிவில் அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசனையும் த.குருகுலராசாவையும் பதவிகளைத் தியாகம் செய்யவேண்டும் என்று கேட்டதன் பயனாக மற்றைய இருவரையும் பதவி விலக்குவதில் குறியாக இருந்தார். அதன் மூலம் ரெலோ கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தினார். அமைச்சர் டெனீஸ்வரனை அந்த அமைப்பு அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே தூக்கிவீசிவிட்டது.

புளொட் அமைப்புக்குள் அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் லிங்கநாதன் தனது புளொட் கட்சியுடன் மனக்கசப்புக்களை உருவாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியையும் அவர் விட்டுவைக்கவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உரிய அமைச்சுப் பதவியை வ.கமலேஸ்வரனுக்கு வழங்கப்போவதாக அவரிடம் தெரிவிக்கப்போக, இப்போது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் சம்பந்தரிடம் அதற்காகத் தூது போயிருக்கிறார்கள். அமைச்சரவையில் இடம் பெறுவது இல்லை என்று கட்சித் தலைமையும் மாகாண சபை உறுப்பினர்களும் முடிவு செய்த பின்னர், அங்கேயும் ஓர் விரிசல் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்படி தன்னை ஆட்சிக்குக் கொண்டு வந்த கட்சிகள் அனைத்திற்குள்ளும் தனது நடவடிக்கைகள் ஊடாகக் குழப்பங்களைக் கனகச்சிதமாக விளைவித்துவிட்டார் முதலமைச்சர். தான் முதலமைச்சர் வேட்பாளராக வரவேண்டும் என்றால் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் தலைவர்களும் ஒன்றாகக் கோரிக்கை விடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி, அதற்கூடாக ஒற்றுமைக்கான சமிக்ஞையைக் காட்டிய முதலமைச்சர், தற்போது அந்தக் கட்சிகளுக்கு உள்ளேயே குழப்பங்களையும், பிரிவையும், பிரிவினையையும் ஏற்படுத்திய ஒருவராகிவிட்டார்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் எதிர்ப்பு அரசியலின் அடையாளமாக முதலமைச்சர் உருவகப்படுத்தப்படுகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பு அரசின் நண்பனாகி இணைந்தோடும் அரசியலை மேற்கொள்வதால், முதலமைச்சர் தன்னைத்தானே எதிர்ப்பு அரசியலின் கதாநாயகனாக நிலைநிறுத்திக்கொள்ளப் பார்க்கிறார். இதனாலேயே அவரை மாற்று அணிக்குத் தலைமை தாங்குமாறு அழைப்பு விடுக்கிறார்கள்.

தமிழ் மக்களை ஓரணியில் இணைத்து, எதிர்ப்பு அரசியலின் தொடர்ச்சியை அவர் முன்னெடுப்பார் என்கிற பெரும் எதிர்பார்ப்பு அப்படி அழைப்பு விடுப்பவர்களிடம் காணப்படுகிறது.

ஒருபக்கத்தில் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் வேணவாவை, விருப்பத்தை, வேட்கையை வென்றெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படும் ஒருவர், மறுபுறத்தில் யதார்த்தத்தில் அதே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு இடையிலும், கட்சிகளுக்கு உள்ளேயும் குழப்பங்களையும் சர்ச்சைகளையும் பிளவுகளையும் உருவாக்குவதற்கும் காரணமாகி இருக்கிறார். அதனால்தான் அவர் வரமா சாபமா என்கிற கேள்வியே இங்கு எழுகிறது.

# தமிழர்கள் பிரச்சினையை தீர்க்கும் திட்டங்கள் என்னென்ன?

இந்துமதி

தற்போதுகூட அரசின் செயற்பாடுகளில் ஒரு தொய்வு நிலை தான் காணப்படுகின்றது. தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சரியான வேலைத்திட்டங்களையும் அது கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடியமைக்கு சிங்களத் தலைமைகளே காரணம். நாம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அலட்சியமாக இருந்தமையால்தான் பிரபாகரன் போன்றவர்களும் தமிழர் மத்தியில் இருந்து தோன்றினார்கள். இவ்வாறு நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காலம் கடந்தாவது அவர் ஓர் உண்மையைக் கண்டுபிடித்து வெளியில் கூறியிருக்கிறார். காலம் கடந்த ஞானம் ஒரு போதுமே பயன்தருவதில்லை. உரிய வேளையில் உரியதைச் செய்யும் போதுதான் பயன் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

### அந்நியர் நிர்வாகத்தில் தமிழர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தமிழர்கள் தமக்கெனத் தனியான பிரச்சினைகளைக் கொண்டிருக்கவில்லை. இதனால் எவரோடும் முட்டி மோத வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கவில்லை. அந்நியர்கள் தமிழர்களின் திறமைகளுக்கேற்ப அவர்களை முன்னிலைப்படுத்தினர். சிறுபான்மையினத்தவர்களென எண்ணி அவர்களை ஒதுக்கி வைக்காது கௌரவம் தந்தனர். இதனால் அந்நியரின் ஆட்சிக் காலம் தமிழர்களுக்குப் பொற்காலமாகத் திகழ்ந்ததெனலாம். ஆனால் நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் தமிழர்களின் தலைவிதியிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன.

இலங்கையர்கள் சுதந்திரத்தின் பின்னர் இன, மத, மொழி ரீதியாகப் பிளவுபடுத்தப்பட்டனர். பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்ற இரண்டு பெரும் பிரிவுகளாக நாட்டு மக்கள் வகைப்படுத்தப்பட்டனர்.

பெரும்பான்மையினத் தலைவர்களே நாட்டின் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்ததால் அவர்களைச் சார்ந்த மக்கள் தாமே நாட்டுக்குச் சொந்தக்காரர் என்ற அகந்தையுடன் நடக்கத் தலைப்பட்டனர். சிங்களத்துக்கும், பௌத்தத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட ஏனையவை யாவும் இரண்டாம் பட்சமாகின. இனப்பிரச்சினைக்கும் இதுவே வழிவகுத்தது.

### சிங்கள இனவாத அரசுகளால் கிழக்கு மாகாணம் அபகரிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகப் பிரதேசங்கள் என்பது அந்நியரின் ஆட்சிக் காலத்தில் நிலைநிறுத்தப்பட்டு வந்தது. இதனால் தமிழ் மக்கள் அச்சமின்றி வாழக் கூடியதொரு நிலை அன்று காணப்பட்டது. ஆனால் சுதந்திரத்துக்குப் பிறகு கிழக்குப் பகுதியை ஆக்கிரமிக்கும் திட்டங்களை அப்போதைய அரச தலைவர்கள் முன்னெடுத்து நிறைவேற்றியும் வந்தனர். இதன் பயனாகத் தமிழர்கள் தமக்குச் சொந்தமான நிலங்களை இழந்து விட்டனர். இன ரீதியிலும் அவர்கள் பின்தள்ளப்பட்டுவிட்டனர். இன்று கிழக்கு மாகாணம் தமிழர்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்பற்றதொரு பிரதேசமாகவே மாறிவிட்டது. தங்கு தடையற்ற குடியேற்றத் திட்டங்களால் தினமும் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் பறி போய்க் கொண்டிருக்கின்றன. இதே நிலை நீடிக்குமானால் இன்னும் சில வருடஙக்ளில் தமிழர்களின் நிலை கிழக்கு மாகாணத்தில் பரிதாபகரமானதாக மாறிவிடும். இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடியதைத் தவறென எவரால் கூற இயலும்?

### சிங்கள அரசுகளுடன் தமிழர் தரப்புக்கள் நடத்திய பேச்சுக்கள் பயனற்றுப் போயின


தந்தை செல்வா போன்ற தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகத் தமது இறுதிக்காலம் வரை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டேயிருந்தனர். பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. ஆனால் இறுதியில் செல்வாவும் ஏமாற்றப்பட்டார். செல்வாவுக்குப் பின்னர் வந்த தமிழ்த்தலைவர்களும் ஆட்சியில் இருந்தவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவந்தனர். ஆனால் எல்லாமே தோல்வியில் தான் முடிந்தன.

இலங்கையில் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிரான கலவரங்களும் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்குத் தூண்டுகோலாக அமைந்தன. 1958 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மோசமான இனக்கலவரம் தமிழர்களை வெகுவாகப் பாதித்தது. ஏராளமான தமிழர்கள் தென்பகுதியிலிருந்து அகதிகள் என்ற பெயரைச் சுமந்து கொண்டு வடபகுதிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களில் பலரும் இனக்கலவரத்தால் ஏற்பட்ட வடுக்களைச் சுமந்து வந்தனர். அப்போது நான்கு வயதுச் சிறுவனாகவிருந்த பிரபாகரன் இவர்களைப் பார்க்க நேரிட்டது. நான்கு வயதாக இருந்த போதிலும் பிரபாகரன் விவேகம் மிக்கதொரு சிறுவனாக இருந்ததால் அவரது நெஞ்சம் பதைபதைத்தது. உள்ளத்தில் கோபத்தீ மூண்டது. இதுவே அவர் துப்பாக்கி ஏந்துவதற்கும் காரணமாயிற்று. பிரபாகரனின் வழியில் இளைஞர்களில் பலர் செல்ல ஆரம்பித்தனர். இதுவே ஆயுதப் போருக்கும் வழிவகுத்தது.

கொடிய போர் ஒன்று இடம்பெற்று முடிவடைந்து விட்டது. இதனால் அழிவுகளுக்கும் குறைவிருக்கவில்லை. நாட்டின் பொருளாதாரமே இதனால் சீரழிந்து விட்டது. ஆனால் தெற்கில் உள்ளவர்கள் இன்னமும் நியாயத்தையும் யதார்த்தத்தையும் உணர்ந்ததாகத் தோன்றவில்லை. புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்ததும் சிறுபான்மை மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு கிடைத்து விடுமென நம்பப்பட்டது. ஆனால் அதுவும் பகற்கனவாக மாறும் நிலையே காணப்படுகின்றது.

அநேகமாக புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகத்தைத் தற்போதைய அரசியல் சூழ்நிலை கள் புலப்படுத்தி நிற்கின்றன. இனவாதிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக அரசு தனது கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்கிறது. இந்த நிலையில் தமிழர்களின் பிரச்சினை களுக்கு அரசினால் தீர்வுகாண முடியுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தற்போது கூட அரசின் செயற்பாடுகளில் ஒரு தொய்வு நிலை தான் காணப்படுகின்றது. தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சரியான வேலைத்திட்டங்களையும் அது கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.



சேரலாதன்

# இந்தியாவை புகழ்வதால் பயன் கிடைக்குமா?

சம உரிமை, சுயமரியாதை பெறுவதற்கான தமிழர் போராட்டங்களுக்கு இந்தியா துணை நிற்கும். இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்தில்உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தியாவின்70ஆவதுசுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் வரையில் ஈழத்தமிழர்களும் இந்தியாகுறித்துவடக்குமுதலமைச்சரைப் போன்றதொரு நம்பிக்கையையே கொண்டிருந்தனர். இந்தியா எம்மை ஒருபோதுமேகைவிட்டுவிடாது. எமதுஉரிமைப்போராட்டங்கள் யாவும் இந்தியாவின் உதவியுடன்வெற்றிபெறும். இந்தியாவுடன் நாம் கொண்டிருக்கும் தொப்புள்கொடிஉறவைஎவராலும் பிரித்துவிட முடியாது என்றெல்லாம் அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் 1987 ஆம் ஆண்டு இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தில் நுழைந்து அட்டூழியங்கள் புரிந்தபோது இந்தியா மீதான நம்பிக்கைதளர்வடையஆரம்பித்தது. தியாகதீபம்திலீபனின் சாவுடன் அந்த நம்பிக்கை முற்று முழுதாகத் தகர்ந்து போனது.

> இறுதிப்போரின் போது ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மனித குலத்தால் சகிக்க முடியாதவை. தனது சொந்த நாட்டு மக்களையே படையினரை ஏவி இலங்கை அரசு அழித்த வரலாறு இங்கு இடம் பெற்றது. இதற்கு இந்தியாவும் பக்கபலமாக நின்றுள்ளது. இலங்கை அரசுக்குத் தேவையான சகல உதவிகளையும் இந்தியாவே வழங்கியது.

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் பயனற்றது

1987 ஆம்ஆண்டுஉருவான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக தமிழர்களின் தாயகப் ப்குதிகளான வடக்கு மாகாணமும், கிழக்குமாகாணமும் ஒன்றிணைக்கப்பட்டு வடக்கு-கிழக்குமாகாணசபை உருவாக்கப்பட்டது. இதைத் தமதுவிடுதலைப்பயணத்தின் முக்கியபுள்ளியாகஈழத்தமிழர்கள் கருதினார்கள். வடக்குக் கிழக்கில்தமிழர்களேஆதிக்கம் பெற்ற சக்தியாக விளங்கினர். மாகாணசபையின்ஊடாகஅதிகாரங்கள் எவையும் கிடைக்காத போதிலும், ஆட்சியுரிமைக்கான ஆரம்பமாகவே இதுதமிழர்களால்நோக்கப்பட்டது. ஆனால் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின்மூலமாகஇந்தஇரண்டு மாகாணங்களின்பிணைப்புத் துண்டிக்கப்பட்டபோது தமிழர்கள் விழித்துக் கொண்டனர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்மூலமாகத்தாம்ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொண்டனர். இந்தியாவின் உண்மையான முகம் அப்போதுதான் வெளிப்பட்டது. விடுதலைப் புலிகள் இந்தியாவின் போக்குத் தோடர்பாக நன்கு தெரிந்து வைத்திருந்தனர். இதன் காரணமாகவே அவர்கள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முற்றாகவே நிராகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களின்இணைப்புத்தொடர்பாகத் தமிழர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் இந்தியா அது தொடர்பாக மூச்சுக்கூட விடுவதில்லை. இலங்கையை அனுசரித்துச்சென்று அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளவே அது விரும்புகின்றது.

இறுதிப்போரின்போது ஈழத் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள்மனிதகுலத்தால்சகிக்க முடியாதவை. தனது சொந்த நாட்டு மக்களையே படையினரை ஏவிகள் அரசு அழித்த வரலாறுஇங்குஇடம்பெற்றது. இதற்கு இந்தியாவும் பக்கபலமாக நின்றுள்ளது. இலங்கை அரசுக்குத் தேவையான சகல உதவிகளையும் இந்தியாவே வழங்கியது.

இந்தியப் படை அதிகாரிகள் களத்தில்நின்றனர்எனவும்சில செய்திகள் தெரிவித்தன. இறுதிப்போரில் ஈழத்தமிழர்களின் உயிர்கள் மட்டுமல்ல அவர்களின் வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்டன. வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு சரணடையச் சென்றவர்கள் கூட ஈவு இரக்கமில்லாதவகையில் மிலேச்சத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டனர். இவை யாவுமே இந்தியாவுக்கு நன்கு தெரியும். ஆனால் ஒன்றுமே தெரியாததுபோன்றுகண்மூடி மௌனியாக இருக்கவே அதனால் முடிந்தது.

## போர்க்குற்ற விசாரணையை இந்தியா ஒருபோதும் விரும்பாது

இலங்கைப்படைகளால்நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள்தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், இந்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் இதுவரை இடம்பெறவில்லை இந்தியாவிசாரணைகள்இடம் பெறுவதை ஒருபோதுமே விரும்பாது. விசாரணைகளின் போதுதானும்மாட்டிக்கொள்ள நேரிடுமோ என்ற ஐயம் இந்தியாவிடம் உள்ளதே இதற்கான முதன்மைக் காரணமாகும். ஆகவே விசாரணைகள் இடம் பெறுவதைத் தவிர்க்கவே இந்தியா விரும்பும். இதேவேளை ஈழத் தமிழர்களுக்கென ஒரு தனிநாடு உருவாகுவதையும் இந்தியா விரும்பமாட்டாது. அவ்வாறு விரும்பியிருந்தால் 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து சென்றதுபோன்றதொருநிலை இங்கும்தோன்றியிருக்கும். ஈழத் தமிழர்களின் ஈழக் கனவு கலைந்து போனமைக்கும் இந்தியாவே காரணமாகும். இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடாது போயிருந்தால் தமிழர்களின் பிரச்சினை எப்போதோ தீர்ந்து போயிருக்கும்.


## இந்தியாவை மகிழ்விக்க முயல்கிறார் வடக்கு முதலமைச்சர்

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இவற்றையெல்லாம் தெரிந்திருந்தும் ஈழத்தமிழர்களின்காவலனாக இந்தியாவைச்சித்தரித்துஉரையாற்றியதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏதோவொரு உணர்ச்சி வேகத்தில் அவர் முன்பின் யோசிக்காது ஆற்றிய உரையாகவே இதைப் பார்க்கவும் முடிகின்றது.

இந்தியாநினைத்தால் இப்போதும் கூட தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டிட முடியும். பன்னாட்டு அழுத்தங்களுக்கு இலங்கை தற்போது முகம் கொடுத்து வருகின்றநிலையில் இந்தியாவின் அழுத்தங்களும் சேருமாயின் நல்லதொரு முடிவு ஏற்படவே செய்யும்.

ஈழத்தமிழ்த்தலைமைகள் இந்தியத் தலைவர்களுடன் பல சுற்றுப் பேச்சுகளை நடத்திய போதிலும், பலன் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தியத்தலைமைஅமைச்சர் மோடி உட்படப் பலர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றுள்ள போதிலும் எதுவிதமான பிரயோசனமும் தமிழர்களுக்குக் கிடைக்க வில்லை. ஆகவே இந்தியாவை மகிழ்விப்பதற்காகப் புகழ்ந்து பேசுவதை இனியாவது எம்மவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்தியா எமக்கு உதவும்போது புகழ்ந்துபேசுவதில்தவறொன்றுமில்லை.



# ஆசிரியருக்கான கடிதம்

## நோய்கள் எம்மை அண்டவிடாது முற்பாதுகாப்பு தேடிக் கொள்வோம்

வேப்பம் பூ பருவ காலம் முடிந்து வேப்பம் விதைகள் விழத் தொடங்கிவிட்டன. வழமைபோல தெருவோரங்களில்கூட்டியொதுக்கப்பட் டுள்ளன. வளவுகளிலும் கூட்டியொதுக்கப்படும். பெய்கின்ற மழைக்கு சில முளைத்து அற்ப ஆயுளில்மடிந்துவிடும். சிலதப்பிப் பிழைக்கலாம்.

ஆயினும்திட்டமிட்ட முறைகளில் இவற்றைச் சேகரித்து முளைக்க வைத்துஇனங்காணப்பட்டஇடங்களில் நாட்டிப் பராமரிப்பது எமது எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் அளப்பரிய சேவையாகும். பெரியார் மில்க் வைற் கனகராசா அதனைச் செய்து வந்தார். தனியாரோ, நிறுவனங்களோ இதில் கரிசனையுடன்ஈடுபட்டுநாட்டுக்கு வளம் சேர்க்கலாம்.

அதற்கும் மேலாக வீடுகளில் நுளம்புத்தொல்லையிலிருந்து நீங்கி டெங்கிலிருந்து ஒவ்வொருவரும்காப்பாற்றப்படபக்கவிளைவுகளற்ற வேப்பம் விதை புகைப் போடுதலை அவரவர்களே மேற்கொள்ள வேண்டும். உதவ, தனியாரோ நிறுவனங்களோ முன் வரா. எதற்கும் நோய்கள் எம்மைப் பற்றிக் கொள்ளுமுன்னர் முற்பாதுகாப்புத்தேடிக்கொள்வது புத்திசாலித்தனமானது.

வருமுன் காப்போன்

## கற்கை நன்றே; கற்கை நன்றே

பாடசாலை இடைவிலகல்என்பது பல்வேறு காரணங்களால் நிகழ்கின்றது. வகுபபறைச் செயற்பாடு உவப்பின்மையும் இதற்கு ஒரு காரணமாகலாம். குடும்ப வறுமைநிலைபோன்றஇன்னோரன்ன காரணங்கள் இருப்பினும் வகுப்பறைச்செயற்பாடுகள்விடுப்புக்குரியன்வாக அமையாதுவிட்டால் மீண்டுமொரு முறை தப்பியோடிவிடச் சந்தர்ப்பமுள்ளது. எனவே மீளவும் இணைக்கப்படும்போது அவர்களைபாடசாலையில் தக்க வைக்கத்தக்கதான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களமும், கல்வித் திணைக்களமும் இணைந்து கூட்டாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்இன்றியமையாததாகும்.

[illegible] காக்குவில.




கரம்பன் கிழக்கு

# வட்டுவில் முருகமூர்த்தி கோயில்
# ஜீர்ணோத்தாரண பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

| கிரியை ஆரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| **23.08.2017 - புதன்கிழமை** | 25.08.2017 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் | **27.08.2017 - ஞாயிற்றுக்கிழமை** |
| காலை 6.05 மணி முதல் 7.05 மணிக்குள் | 26.08.2017 சனிக்கிழமை பி.ப 2.00 மணி வரை | காலை 7.41 மணி முதல் 9.19 மணிக்குள் |

### அடியார் பெருமக்களே !

சுவர்ணபுரி. குபேரபுரி என்று விதந்து கூறப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபால் ஞானபூமி எனச்சிறப்புப் பெற்ற யாழின் கண்ணே கந்தபுராணக் கலாச்சாரம் ஓங்கி மேவும் கரம்பன் கிராமந்தன்னில் தனை நாடிவரும் அடியார் வினையறுத்து வரமருளும் வட்டுவில் ஸ்ரீ முருகமூர்த்திப் பெருமானின் கோயிலில் வானுயர் அழகிய விமானங்களும் மகிமை அணிதிகழ் மண்டபங்கள். சிங்கவரி வர்க்க கற்றூண்கள் சிந்தனையுந்திச் சிற்பக்கதை பேசும் சுதைகள். கண்கவர் பதுமைகள். களஞ்சிய. வாகனசாலை. குருமடம். கருத்தில் நிற்கும் வர்ணமைப்பூச்சு. விருத்தி செய்யப்பட்ட வீதிகள் என பற்பல திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவானது !

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்கலம் மிகு ஏவிளம்பி வருஷம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரமும். ஷஷ்டி திதியும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 7.41 மணிமுதல் 9.19 மணிக்குள் வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெற திருவருள் கைகூடியிருப்பதால் ஐந்து தினங்களாக நடைபெறும் இப் பெரு விழாவில் கலந்து வழிபாடாற்றி இகபரசுகங்கள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## கிரியாகால நேரவிவரம்

**ஆவணி மாதம் 7ஆம் நாள் 23.08.2017 புதன்கிழமை**
காலை 6.05 மணிமுதல் 7.05 மணிக்குள் புதஹோரையில் கர்மாரம்பம். ஆச்சார்ய வரணம். கணபதிபூஜை. அனுக்ஞை, திரவிய பாகம். நூதன மூர்த்திகள் பூர்வாங்கக் கிரியைகள். மயூரத்துவஜ ஆரோகணம். கணபதி ஹோமம். நவக்கிரக மகம். மூர்த்தி. சம்ஹிதா. சாந்தி ஹோமங்கள். பிரசாதம் வழங்கல். மாலை 4.30 மணிமுதல் ரக்ஷோன ஹோமம். திசாஹோமம். கிராமசாந்தி. வாஸ்துசாந்தி. பிரசாதம் வழங்கல்.

**ஆவணி மாதம் 8ஆம் நாள் 24.08.2017 வியாழக்கிழமை**
காலை 10.00 மணிமுதல் குண்டமண்டல தான்யஸ்தாபனம். தீர்த்த சங்கிரகணம். சூர்யாக்னி சங்கிரகணம். பிரசாதம் வழங்கல். மாலை 4.00 மணிமுதல் சோம ஆராதனை. கங்கணபந்தனம். கடஸ்தாபனம். யாகபூஜை. காலகர்ஷணம். மாலை 6.00 மணிமுதல் 7.42 மணிக்குள் ஸ்தூபி. தீப யந்திர. பிம்பஸ்தாபனங்கள். மூல. காயத்ரீ. வஸ்ய. ஆகர்ஷண மந்திர ஹோமங்கள், பிரசாதம் வழங்கல்.

**ஆவணி மாதம் 9ஆம் நாள் 25.08.2017 வெள்ளிக்கிழமை**
காலை 8.00 மணிமுதல் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.
விஷேசசந்தி. ஆத்ம நிவேதனம். யாகபூஜை. சஹஸ்ரநாம ஹோமம். ஸ்தாலீபாகம். பாவனாபிஷேகம். பிரசாதம் வழங்கல் . மாலை 5.00 மணிக்கு யாகபூஜை. திரிசதீநாம ஹோமம். பிரசாதம் வழங்கல்.

**ஆவணி மாதம் 10ஆம் நாள் 26.08.2017 சனிக்கிழமை**
காலை 8.30 மணி அந்தர் யாகம். யாகபூஜை. ஜயனம். விஷேச திரவிய ஹோமம். பிரசாதம் வழங்கல். பிற்பகல் **2.00 மணிக்கு எண்ணெய்காப்பு நிறைவு**. மாலை 4.00 மணிக்கு கலச. கண்டா. தீப கணபதி வருண பஞ்சகவ்ய. பஞ்சாமிர்த. யக்ஞ சூத்ர. பிம்பசுத்தி பூஜைகள். பூர்வசந்தானம். ஜயனம். பச்சிம சந்தானம். சிவாச்சார்யார்களுக்கு பஞ்சோபசாரம் வழங்கல்.

**ஆவணி மாதம் 11ஆம் நாள் 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை**
அதிகாலை 5.30 மணிக்கு புண்ணியாகவாசனம். யாகபூஜை. உபசாரஹோமம். ஜயாதி ஹோமம். மஹாபூர்ணாகுதி. உபசாரபூஜை. தானாதிகள். வேத திருமுறை பாராயணங்கள். சர்வமங்கள ஹோஷ சகித கடப்புறப்பாடு விமான கலச கும்பாபிஷேகம். காலை 8.15 மணிக்கு பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம். தசமங்கள தரிசனம். ஸ்திராகுதி. எஜமான் அபிஷேகம். குருமாருக்கு உபசாரம். ஆசியுரை. அருள் உரைகள். பகல் 10.30 மணிக்கு மஹா அபிஷேகம். விஷேட பூஜை. வசந்தமண்டப பூஜை. சண்முக அர்ச்சனை. திருவிழா. பகல் 1.00 மணிக்கு மஹேஸ்வர பூஜை (அன்னதானம்).

## அருளாசி வழங்கும் விப்ரசதஸ்

"வேதாகம ஞானபாஸ்கரன்"
**சிவஸ்ரீ. தானு மஹாதேவக் குருக்கள்**
(தர்மஸாஸ்தா குருகுலம் - இணுவில்)

"கிரியா தத்வநிதி"
**சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
(ஆதீன கர்த்தா ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் - இணுவில்)

"ஸ்தோத்திர மாமணி"
**சிவஸ்ரீ. இ.ஸ்ரீதரக் குருக்கள்**
(ஸ்ரீ கந்தசுவாமி கோயில் - இணுவில். நாரந்தனை - லண்டன்)

ஸ்தானிக பிரதம குரு
"கிரியாதிலகம்" 'பிரதிஷ்டா சிரோமணி'
**சிவஸ்ரீ. கா.புவனேஸ்வரக் குருக்கள்**
(பிரதமகுரு சரவணை. கர்ணந்தோட்டம். கரம்பன். மாமுனை)

பிரதிஷ்டா குரு
"ஆகம வைதீக சாஸ்திர விற்பன்னர்" 'மதுரமந்திர மாமணி'
**சிவஸ்ரீ. குமார சரவணபவக் குருக்கள் (J.P)**
(பிரதமகுரு ஸ்ரீ அருணகிரிநாத சுப்பிரமணிய தேவஸ்தானம் - மஞ்சத்தடி. இணுவில்)

சர்வசாதகர்
"மதுர வாகீசர்"
**பிரம்மஸ்ரீ. குமார சுவாமிநாத சர்மா**
(கவிஞர் கு.வீரா - இணுவில்)
**பிரம்மஸ்ரீ. சி. கௌரிசங்கர சர்மா**
(இணுவில்)

மூர்த்திப குருமணிகள்
**சிவஸ்ரீ. கா.குவனேஸ்வரக் குருக்கள்** (கொழும்பு)
**சிவஸ்ரீ. தி.பிரகலாதக் குருக்கள்** (பருத்தித்துறை)
**சிவஸ்ரீ. பா.துஷ்யந்தக் குருக்கள்** (நுணசை)
**சிவஸ்ரீ. ந.ஜெகதீஸ்வரக் குருக்கள்** (கோண்டாவில்)
**சிவஸ்ரீ. சி.திலீபக் குருக்கள்** (இணுவில்)

யாகசம்ரக்ஷகர்கள்
**பிரம்மஸ்ரீ. உ.நகுலேஸ்வர சர்மா** (கொக்குவில்)
**பிரம்மஸ்ரீ. சி.சிறீகரன் சர்மா** (சாவகச்சேரி)
**பிரம்மஸ்ரீ. க.யசோதர சர்மா** (சாவகச்சேரி)
**பிரம்மஸ்ரீ. ப.ராகுலன் சர்மா** (வவுனியா)
**பிரம்மஸ்ரீ. வ.உதயகுமார் சர்மா** (பருத்தித்துறை)

பாகசாலை
**பிரம்மஸ்ரீ. க.ரவிசர்மா** (கொழும்பு)

வர்ணமைப்பூச்சு
**மூத்ததம்பி தேவதாஸ் குழுவினர்** (காரைநகர்)

மங்கள இசை
**வ.செல்வராஜா குழுவினர்** (புளியங்கூடல்)

பூமாலை அலங்காரம்
**பொ.செல்வநாயகம்** (புளியங்கூடல்)

வெள்ளை அலங்காரம்
**சொக்கலிங்கம்** (சுருவில்)

கூரை அமைப்பு, கதவு வேலை
**தங்கரத்தினம் ரவி** (காரைநகர்)
**அமுதலிங்கம்** (மானிப்பாய்)

ஒலி, ஒளி அமைப்பு
**அம்பாள் சவுண்ட்**
(மூர்த்தி. தம்பாட்டி)

### தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் அபிஷேகம். ஹோமம். பூஜை. அர்ச்சனை. அன்னதானத்திற்கு உகந்த பொருள்களை உபகரிக்கலாம்.

**கரம்பன் கிழக்கு.** *முருகன் அடி போற்றி ! முத்தி இன்பம் பெறுவோம் !* *பரிபாலனசபை.*



# எந்நிதியும் தரும் சந்நிதியான்

## இன்று சந்நிதியானுக்கு கொடியேற்றம்

எஸ்.ரி.குமரன்

ஈழமணித்திருநாட்டின் வடக்காக யாழ்ப்பாணம் தொண்டைமானாற்றில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பும்,அருள் இன்பப்பேறும் கொண்டமைந்த திருத்தலமாக செல்வச்சந்நிதி முருகன் ஆயலம் விளங்குகிறது. தமிழர்களின் ஒப்பற்ற பெருந்தெய்வமாகிய முருகப்பெரு மான் தமிழ் அமுதம் பருகி, அழகின் திருவாய், முருகாய் எழுந்தருளிக் காட்சி கொடுத்து, தனை நாடிவரும் பக்த அடியவர்களுக்கு அருள் உபகாரத்தினை நிறைவாய் தந்திருக்கும் திருத்தலமாக செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகிறது.

**ஆற்றங்கரை வரம்**

தொண்டைமானாற்றங்கரையில் பூவரச மரத்தடியில் அமர்திருந்து அருளாட்சி புரிகின்ற ஒப்பற்ற பெருந்தெய்வமாக விளங்கும் சந்நிதி வேலன், அடியவர்களுக்கு அன்னதானக் கந்தனாய் அருள்காட்சி தருகிறான். தமிழர்களுடைய பண்பாட்டு நெறிமுறையில் மரபுவழிப் பூசை வழிபாடாற்றி அடியவர்களால் பக்தியோடும்,அன்போடும் வழிபடப்படும் வேற்பெருமான், பசிப்பிணியைப் போக்கிநோய்தீர்க்கும்வேலவனாகவும் விளங்குகின்ற சிறப்பைக் கொண்டுள்ளான்.

**சித்தமயம்**

ஆற்றங்கரையானை நாடி அருள்பெற்ற சித்தர்கள்,யோகிகள் பலர் உளர். ஆற்றங்கரையான் ஏழை எழியவர்களின் ஒப்பற்ற பெருந்தெய்வம். வினைப்பயனைக் களைந்திடும் காவல் நாயகன்.ஏழைகள், செல்வந்தர் என்ற பாகுபாடின்றி அனைவரும் பக்திநெறியில் தங்கள் உடல் மொழி மெய்களினால் வழிபாட்டாற்றப்படும் சிறப்பைக் கொண்டது சந்நிதிப்பதி.

இங்கு அடியவர்கள் நாடி வழிபாடாற்றுவதற்கான காரணத்தை நோக்கும்போது, இயற்கையோடு அமைந்த ஆலயத்தைச் சூழவுள்ள நீர்நிலையும், ஆலயப் பூசகர் காலம் காலமாக முருகப்பெருமானுக்கு அறுபத்திநான்கு ஆலம் இலை கொண்டு நிவேதனம் செய்யும் பிரசாதத்தை சந்நிதியானை வழிபடவரும் அடியவர்களுக்கு மருந்தாக வழங்கும்தன்மைகளும்சிறப்பிற்குரியவை. தீரா நோயினால் பீடிக்கப்பட்ட அடியவர்கள் சந்நிதியானைச் சரணடைந்து அவனருளால் நோய் நீங்கி பூரணத்துவம் பெறுகின்றனர்.தேக ஆரோக்கியம் பெறுகின்றனர். அடியவர்கள் கந்தப் பெருமானை நினைந்து மனமுருகி வேண்டுதல் செய்கின்ற அனைத்து விடயங்களையும் நிறைவேறுகின்ற அற்புதத் திருப்பதியாக இப்பதி மேன்மை பெறுகிறது.

**மகோற்சவம்**

இத்தகைய சிறப்புப் பொருந்திய செல்வச்சந்நிதி முருகனுடைய ஏவிளம்பி வருட மகோற்சவப் பெருவிழாக்கள் இன்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளன. அடியவர்கள் புடைசூழ அவர்களின் பக்தி அலையில் மிதந்து விழாக்கோலம் பூணுகின்ற முருகப்பெரு மானுடைய திருவருளினைப் பெற்றுக் கொள்ளுதல் பெரும்பேறு. நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து அடியவர்களின் திருக்கூட்டம் ஆலயம் நோக்கி வருகை தருகின்ற காட்சி அவன் அற்புதத்தின் கூறு.

**பயன்**

அந்தவகையிலே இன்றைக் கொடியேற்றத் திருவிழாவில் கலியுக வரதனாக வேல் வடிவில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற சந்நிதி வேலவனை வழிபாடாற்றுவதன் ஊடாக இம்மை மறுமைப் பயன்களை பெற்று அனுபவம் செய்தல் செயற்கரிது. அழியா அழகும்,அன்பும்,கருணையும் உடையவனாக, என்றும் இளையவனாக, அறியாமை இருளை அகற்றி அறிவை வளம்படுத்தும் பணி, அவன் திருப்பொலிவு தருகின்ற இடைவிலகாத அணிகலன்.உயர்ந்த காவற்கலன். அற்புதக் களிப்பான பலாபலன்.

ஆக, தமிழின் கனிவை அற்புதமாய் அருந்திக் களிப்புறு அருளாசி வழங்கும் கந்தப்பெருமானை, இந்த நன்நாளிலே மீளா அடியவராய் வணங்கிப் பணிவோம்.அவன் திருநாமத்தை ஓதிச் சிந்தையிலே இருத்தி, வழிபாடு இயற்றி சந்நிதி வேலவனுடைய திருவருளுக்கு ஆட்படுவோமாக.

> “தமிழின் கனிவை அற்புதமாய் அருந்தி களிப்புறு அருளாசி வழங்கும் கந்தப்பெருமானை இந்த நன்நாளிலே மீளா அடியவராய் வணங்கிப் பணிவோம்.அவன் திருநாமத்தை ஓதி, சிந்தையிலே இருத்தி, வழிபாடு இயற்றி சந்நிதி வேலவனுடைய திருவருளுக்கு ஆட்படுவோமாக.

**நெஞ்சக் கனகல் (காப்பு)**

*நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்*
*தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்*
*செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே*
*பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.*

**ஆடும் பரிவேல்**

*ஆடும் பரி வேல் அணிசேவல் எனப்*
*பாடும் பணியே பணியா அருள்வாய்*
*தேடும் கயமா முகனைச் செருவில்*
*சாடும் தனி யானைச் சகோதரனே.*

**உல்லர்ச நிராகுலம்**

*உல்லாச நிராகுல யோக இதச்*
*சல்லாப விநோதனும் நீ அலையோ..?*
*எல்லாம் அற என்னை இழந்த நலம்*
*சொல்லாய் முருகா சுரபூ பதியே.*

**வானோ புனல்**
**(ஆறுமுகமான பொருள் எது..? )**

*வானோ..? புனல் பார் கனல் மாருதமோ..?*
*ஞானோ தயமோ..? நவில் நான் மறையோ..?*
*யானோ..? மனமோ..? எனை ஆண்ட இடம்*
*தானோ..? பொருளாவது சண்முகனே.*

**வளைபட்ட (மனை மக்கள் எனும் மாயை அகல அருள்வாய்)**

*வளைபட்ட கைம் மாதொடு மக்கள் எனும்*
*தளைபட்டு அழியத் தகுமோ..? தகுமோ..?*
*கிளைபட்டு எழு சூர் உரமும் கிரியும்*
*தொளைபட்டு உருவத் தொடு வேலவனே.*

**மகமாயை (மாயை அற)**

*மக மாயை களைந்திட வல்ல பிரான்*
*முகம் ஆறும் மொழிந் தொழிந்திலனே*
*அகம் மாடை மடந்தையர் என்(று) அயரும்*
*சகமாயையுள் நின்று தயங்குவதே.*

**திணியான மனோ**
**(ஆறுமுகன் அடியாரை ஆட்கொள்வான்)**

*திணியான மனோ சிலை மீது உனதாள்*
*அணியார் அரவிந்தம் அரும்பு மதோ..?*
*பணியா..? என வள்ளி பதம் பணியும்*
*தணியா அதிமோக தயா பரனே.*

**கெடுவாய் மனனே**
**(ஈகையும் தியானமும் நம்மைக் காக்கும்)**

*கெடுவாய் மனனே கதி கேள் கரவாது*
*இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்*
*சுடுவாய் நெடு வேதனை தூள்படவே*
*விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.*

**அமரும் பதி (மயக்கம் தீர்ப்பான் முருகன்)**

*அமரும் பதி கேள் அகம் ஆம் எனும் இப்*
*பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா*
*குமரன் கிரிராச குமாரி மகன்*
*சமரம் பெரு தானவ நாசகனே.*

**மட்டு ஊர்(மங்கையர் மையல் தூரத்தேக)**

*மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்*
*பட்டு. ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?*
*தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்*
*நிட்டூர நிராகுல நிர்பயனே.*

**கார் மா மிசை**
**(காலன் அணுகாமல் காத்திடுவான் கந்தன்)**

*கார் மா மிசை காலன் வரில் கலபத்*
*தேர்மா மிசை வந்து எதிரப் படுவாய்*
*தார் மார்ப வலாரி தலாரி எனும்*
*சூர்மா மடியத் தொடுவே லவனே.*



**கூகா என**
**(உறவினர் அழப் போகா வகை உபதேசம் பெற்றது)**

*கூகா என என் கிளை கூடி அழப்*
*போகா வகை மெய்ப்பொருள் பேசியவா*
*நாகாசல வேலவ நாலு கவித்*
*தியாகா சுரலோக சிகாமணியே.*

**செம்மான் மகளை (சும்மா இரு சொல் அற)**

*செம்மான் மகளைத் திருடும் திருடன்*
*பெம்மான் முருகன் பிறவான் இறவான்*
*சும்மா இரு சொல் அற என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.*

**முருகன் தனி வேல்**
**(முருகனின் அருளைக் கொண்டு மட்டுமே அவனை அறிய முடியும்)**

*முருகன், தனிவேல் முனி நம் குரு என்று*
*அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ*
*உரு அன்று அரு அன்று உளது அன்று இலது அன்று,*
*இருள் அன்று ஒளி அன்று என நின்றதுவே.*

**கைவாய் கதிர் (மனதுக்கு உபதேசம்)**

*கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று*
*உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்*
*மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்*
*ஐவாய் வழி செல்லும் அவாவினையே.*

**முருகன் குமரன் (நாம மகிமை)**

*முருகன் குமரன் குகன் என்று மொழிந்து*
*உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்*
*பொரு புங்கவரும் புவியும் பரவும்*
*குருபுங்கவ எண் குண பஞ்சரனே.*

**உருவாய் அருவாய்**
**(குருவாக வந்து அருளினான் கந்தன்)**

*உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்*
*கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்*
*குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.*

*கட்டுரையாளர் : செயலாளர்.*
*அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.*

### உங்களது பிறந்த திகதியை வைத்து வாழ்க்கைத் துணையை கண்டறிவது

# எப்படி?

சாதகம் பார்த்து திருமணம் செய்வது என்பது நாம் அனைவரும் அறிந்தது தான். ஒரு குழந்தை பிறக்கும் போதே பிறந்த நேரத்தை வைத்து அதன் சாதகத்தைக் கணிதுவிடுவர். ஒரு சிலர் பிறந்த நேரத்தைக் குறிக்கத் தவறுதல் அல்லது சாதகம் தொலைந்து போவதால் அவர்களது பிறந்த நாளின் பொதுப் பலனை வைத்துப் பெண் பார்பார்கள்.

இந்த பிறந்த நாள் வைத்துப் பொருத்தம் பார்த்து திருமணம் செய்யும் வழக்கம் பொதுவாக இருந்து வருகிறது. சாதகத்துக்கு என்று தனிப் பொருத்தம் மற்றும் பலன்கள் பார்ப்பது போன்று, அவ்வாறே பிறந்த திகதியை வைத்துப் பார்ப்பதற்கும் பொதுப் பலன்கள் மற்றும் பொருத்தங்கள் இருக்கின்றன.

எந்தத் திகதியில் பிறந்தவர் எந்தத் திகதியில் பிறந்த பெண்ணைத் திருமணம் செய்தால் அவரது வாழ்க்கை சந்தோசமாக இருக்கும் அல்லது இருக்காது என்ற பலன்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி இனிக் காண்போம்.

**7,16,25 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்**

7,16,25 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 1, 2, 5, 6 ஆகிய எண்களில் பிறந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டால் திருமண வாழ்க்கை நன்றாக அமையும். குறிப்பாக 2, 1 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களால் மிகவும் இனிய இல்லறம் அமையும். 8ஆம் திகதி பிறந்தவர்களை மணந்து கொண்டால், இல்வாழ்க்கையே கசந்துவிடும். திருமணம் செய்து கொள்ளும் நாள்களின் எண்கள் 1, 2, 6 என வருவது சிறந்தது.

**8,17,26ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்**

8,17,26ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 1, 4 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களைத் திருமணம் செய்துக் கொள்ளலாம். 2, 7 மற்றும் 8ஆம் எண்ணில் பிறந்த பெண்ணை மட்டும் திருமணம் செய்யக்கூடாது என்று கூறப்படுகிறது. 9ஆம் திகதியில் பிறந்த பெண்கள் இவர்களை அடக்கி ஆள முயல்வார்கள். திருமணம் செய்யும் நாளின் கூட்டு எண் 1, 6 என வந்தால் இல்வாழ்க்கை செழிக்குமாம்.

**9,18,27 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள்**

9,18,27 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த நாட்டமும், முனைப்பும் உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் 3, 5, 6, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களைத் திருமணம் செய்துக் கொண்டால், இவர்களது திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். இவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் பாக்கியம் அதிகம். 2, 11, 20, 29, 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும், கூட்டு எண் 2, 8 ஆக வரும் பெண்களையும் திருமணம் செய்யக்கூடாதாம். மீறிச் செய்தால் திருமண வாழ்க்கை துயரமாக அமைய வாய்ப்புகள் உண்டு. 3, 6, 9, 1 ஆகிய நாள்களில் திருமணம் செய்து கொண்டால், இல்லறம் நல்லறமாக அமையும்.

(முற்றும்)

## வரலாற்றில் இன்றைய தினம் 22.08.2017

1717 - சார்டினியாவில் ஸ்பானிஷ் துருப்புக்கள் கால் பதித்தன.
1827 - பெருவின் அரசதலைவரானார் ஜோஸ் டிலாமா.
1950 - பன்னாட்டு ரென்னிஸ் ஆட்டமொன்றில் பங்கெடுத்த முதல் கறுப்பினத்தவர் ஆனார் அல்தியா ஜிப்சன்.
1972 - இன ஒதுக்கல் கொள்கை காரணமாக றொடீசியா பன்னாட்டு ஒலிம்பிக் அரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டது.
2006 - கரவெட்டியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை.
2006 - மட்டக்களப்பில் மூவர் சுட்டுக்கொலை.
2016 - நீதி கேட்டு வன்னியில் நடை பயணம். ஐ.நா. செயலருக்கு முறைப்பாடும் கையளிப்பு.
2016 - அரசியற் கைதிகளின் விடுதலைக்காக கொழும்பில் கையெழுத்துப் போராட்டம்
2016 - வடக்கு மீனவர் போராட்டங்களில் தெற்கு மீனவர் இணையத் தயார். இலங்கை கரைவலை மீனவர் சங்கத் தலைவர் நிமால் கூரே தெரிவிப்பு.

## நாளை

**23.08.2017**
புதன்கிழமை

**ஆவணி - 07**

திதி: துதியை மு.இ. 10.56 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப.04.30
சுபநேரம்: 04.35–06.05 வரை
ராகுகாலம்: 12.05–01.35 வரை



2006 – புல்கோவா என்ரபிறைஸ் வானூர்தி ரஷ்ய எல்லைக்கருகே விபத்துக்குள்ளாகியதில், அதிலிருந்த 170 பேரும் சாவடைந்தனர்.

# பத்தி எழுத்து

## நிம்மதியான வாழ்வுக்கு ஏங்கி நிற்கின்றனர் குடாநாட்டு மக்கள்

குடாநாட்டில் அண்மைய நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் மிகையாகக் குறைந்துள்ளன. பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளை இதற்கான காரணமெனக் கூறமுடியும். வன்முறைக் கும்பல்கள் பொலிஸார் மீது மேற்கொண்ட தாக்குதலின் எதிரொலியாகத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுப் பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலமாக நாட்டின் பிற இடங்களிலும் சிலர் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைகள் முன்னரே இடம்பெற்றிருந்தால் பல வேண்டத்தகாத சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம் என்பது குடாநாட்டு மக்களின் ஆதங்கமாகும்.

போரின் பின்னரான காலப்பகுதி குடாநாட்டைப் பொறுத்தவரையில் துயரம் மிக்கதாகவே மாறிவிட்டது. இளைஞர்கள் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு மக்களைப் பெரும் அச்சத்தில் ஆழ்த்தி விட்டனர். எந்த வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற கலக்கத்தில் குடாநாட்டு மக்கள் தவித்தனர். திருட்டுக்கள் கொள்ளைகளுக்கும் குறைவில்லை. எதிர்காலச் சிற்பிகளான இளைஞர்கள் மது பாவனையிலும், போதைப்பொருள் பாவனையிலும் ஈடுபட்டதால் என்ன செய்வது என்பது புரியாத நிலையில் குடாநாடே சோகத்தில் ஆழ்ந்தது. தட்டிக் கேட்பதற்கு எவருமில்லாத நிலையில் எவரையும் எவராலும் திருத்த முடியவில்லை. பண்பாட்டுக்கும். கலாசாரத்துக்கும் பெயர்போன யாழ் குடாநாடு வன்முறையாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இதைப் போக்குவதற்கான வழிதான் மக்களுக்குத் தெரியவில்லை.

வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரையில் பொலிஸ் அதிகாரங்களைக் கொண்டிராததால் கையாலாகாத நிலையிலேயே காணப்படுகின்றது. பொலிஸார் ஆரம்பத்திலேயே அக்கறையுடன் செயற்பட்டிருந்தால் வாள்வெட்டுக் கலாசாரம் இந்த அளவுக்கு உச்ச நிலைக்குச் சென்றிருக்க மாட்டாது. குடாநாட்டு மக்களும் அச்சத்தில் ஆழ்ந்திருக்க மாட்டார்கள்.

மக்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் பொலிஸார் வசமே உள்ளது. அவர்கள் மனம் வைத்துச் செயற்பட்டால் வன்முறைக் கும்பல்களைப் கூண்டோடு ஒழித்துவிட முடியும்.

தற்போது குடாநாட்டு மக்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சை விடுகின்றனர். நிம்மதியாகத் தூங்குகின்றனர். கொடிய மிருகத்தை விடக் கேவலமான மனிதர்களுடன் வாழ்ந்த அவர்கள் சலித்துப் போய்விட்டனர். இனியாவது அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். பயமில்லாத, அமைதியான வாழ்வுக்காகவே அவர்கள் ஏங்கி நிற்கின்றனர். எதிர் காலத்தில் இதுதொடருமா?

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் நற்செயல்களை சிலர் பரிகாசம் செய்யலாம். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** புதிய உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். திகைப்புத் தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள்.

**மிதுனம்:** மனக்குழப்பம் நீங்க, குடும்பத்தினரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** உங்களின் பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**சிங்கம்:** சிலரது பேச்சு பாதிப்பை ஏற்படுத்தலாம். காலம் தந்த அனுபவ பாடத்தை மறக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்பு ஏற்க நேரிடும்.

**கன்னி:** சமூக பொறுப்புடன் செயல்படுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

**துலாம்:** உங்களிடம் புதியவரும் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், கூடுதல் வருமானமும் கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர்.

**விருச்சிகம்:** செயலில் தாமதம் ஏற்படுவதால் வருத்தம் உண்டாகலாம். கூடுதல் உழைப்பு தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற உதவும். நண்பர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்வர்.

**மகரம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கும்பம்:** பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** குடும்பச் சிரமத்தை பிறரிடம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் வருகிற குறுக்கீடுகளை உடனுக்குடன் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

# அரசியல் ஆத்திசூடி


- ✱ அரசியல் செய்ய விரும்பு!
- ✱ ஆளுவது பணம்!
- ✱ இரக்கமதை கைவிடு!
- ✱ ஈனச்செயல் செய்!
- ✱ உடையது அமிக்கிடு?
- ✱ ஊழல், மது கைவிடேல்!
- ✱ எண் எழுத்து அறியான்!
- ✱ ஏற்பது லஞ்சம்!
- ✱ ஐயமின்றி திருடிடு!
- ✱ ஒப்புக்கு உறவாடு!
- ✱ ஓடி ஓடி கட்சி மாறு.
- ✱ ஔ(அவ்)வளவும் சேர்.
- ✱ அஃக்கவுன்ட்டை வளர்த்திடு!




வீட்டில் எப்போதும் சிரிப்பு
சத்தம் கேட்குதே எப்படி????
அதுவா...
மனைவி என்மேல பாத்திரத்தை
தூக்கி வீசுவா...
மேல பட்டதுனா அவ சிரிப்பா...
படலைனா நான் சிரிப்பேன்...

சினிமா

# அதிருப்தியில் நடிகர் அஜித்



சமூக வலைதளங்களில் தன்னுடைய பெயரில் சில தனிப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புகள் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருவதற்கு நடிகர் அஜித் கடும் எதிர்ப்பும் அதிருப்தியும் தெரிவித்துள்ளார்.

நடிகர் அஜித்தின் சட்டத்தரணி பரத் அண்மையில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதில், "சில தனிப்பட்ட நபர்கள், அங்கீகாரம் இல்லாத, சுய அதிகாரம் எடுத்துக்கொண்ட சில நிறுவனங்கள் தங்களுடைய அரசியல் மற்றும் சமூக ரீதியான கருத்துக்களை அஜித் பெயரில் அறிவித்து வருகிறார்கள். இவர்கள் வன்மம் பேசி சமூக வலைதளங்களைக் கீழ்த் தரமாகப் பயன்படுத்துவது அஜித்துக்கு கடும் மன உளைச்சலை கொடுக்கிறது. இவர்களது செயல்களால் பாதிக்கப்பட்ட எல்லோரிடமும் அஜித் தன் மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்" என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 9 | | | | 4 |
| 7 | 6 | | 4 | | | | | 8 |
| 4 | | | 7 | | | | 1 | 2 |
| | | 6 | 3 | | 4 | | | 5 |
| | 7 | | | 2 | | | 4 | |
| 3 | | | | | 1 | 2 | | |
| 5 | 1 | | | | 7 | | 2 | |
| 6 | | | | | 5 | | 8 | 9 |
| | | | | 6 | | 4 | 5 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 1 | 3 | 4 | 6 | 8 | 7 | 5 |
| 6 | 3 | 5 | 7 | 8 | 9 | 4 | 1 | 2 |
| 7 | 8 | 4 | 2 | 1 | 5 | 3 | 6 | 9 |
| 8 | 4 | 3 | 9 | 7 | 1 | 2 | 5 | 6 |
| 1 | 5 | 7 | 6 | 2 | 4 | 9 | 8 | 3 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 3 | 7 | 4 | 1 |
| 4 | 2 | 6 | 1 | 9 | 8 | 5 | 3 | 7 |
| 5 | 1 | 9 | 4 | 3 | 7 | 6 | 2 | 8 |
| 3 | 7 | 8 | 5 | 6 | 2 | 1 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும்.
சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நாடி நரம்பெல்லாம்
போட்டோ கிராபிக் வெறி
ஊறின ஒருத்தனாலதான்
இப்படி எல்லாம் போஸ்
கொடுக்க முடியும்.



அட! இந்த ஐடியா கூட
நல்லா இருக்கே...



ஆடி மாசம் முடிஞ்சா புருசனும்



பொண்டாட்டியும்தான சேரனும்



இவனுங்க ஏன் சேர்றாங்க...

Sri Ravi and Anjali liked
**மாஸ்டர் பீஸ்** @Kannan_Twitz · 17

என்னதான் புகழ்ச்சிமிக்க
மனிதராக இருந்தாலும் பசி வந்தால்
அனைத்தையும் மறந்து
போராடித்தான் ஆக வேண்டும்

# வழிகாட்டிகள்



பாட்டி ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார். அதனைப் பேரன் பார்த்துக் கொண்டிருந்தான். "பாட்டி கதை எழுதுகிறீர்களா? அப்படியானால் அது என்னைப் பற்றியதாகத்தான் இருக்கும் இல்லையா?" எனப் பேரன் கேட்டான். பாட்டி எழுதுவதை நிறுத்தி விட்டு தன் பேரனைப் பார்த்து" ஆமாம் உன்னைப் பற்றித்தான் எழுதுகிறேன். நீயும் பெரியவனான பின் நான் கதை எழுதும் இந்தப் பென்சிலைப் போல இருப்பாய் என நம்புகிறேன்" என்றார். ஆர்வமும் விருப்பமுமாக பேரன் அந்தப் பென்சிலைப் பார்த்தான்.

அது ஒன்றும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகத் தெரியவில்லை. "இந்தப் பென்சில் நான் பார்த்த மற்றப் பென்சில்களைப் போலத்தானே உள்ளது" என்றான் பேரன்.

"நீ பார்க்கும் பார்வையினைப் பொறுத்தே பார்க்கும் பொருள்களின் முக்கியத்துவமும் இருக்கிறது. பென்சிலுக்கு ஐந்து பண்புகள் உள்ளன. அவற்றை உன்னுள் வளர்த்துக் கொண்டால் இவ்வுலகில் நீயும் சிறப்பாக வாழலாம்" என்றார் பாட்டி. தொடர்ந்து "பேரா நீ பல திறமைகளை உடையவனாக இருப்பினும் உன்னை வழி நடத்திச் செல்வதற்கு பலர் உள்ளனர். அவர்கள் உன் தாய், தந்தை, ஆசிரியர்கள், பெரியோர்கள் மற்றும் நல்ல புத்தகங்கள். நல்ல பென்சிலும் எழுதுபவருக்குட்பட்டு அவர் நினைக்கும் வழி செல்கிறது. அது போல உன்னை வழி நடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும். இது முதல் பண்பு. நான் பென்சிலின் கூர்மை மழுங்கும்போதெல்லாம் அதனைக் கூர்மைப்படுகின்றேன். அதனால் பென்சில் துன்பத்துக்கு உட்படுகிறது. ஆனால் கூர்மையாக்கப்பட்டு திறம்படச் செயலாற்ற தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறது. அது போல நீயும் சில தோல்விகள் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளக் கற்றுக் கொண்டால் நன்கு பக்குவப்பட்டு சிறந்தவனாவாய். இது இரண்டாவது பண்பு.

ஏதேனும் தவறுதலாக பென்சிலால் எழுதி விட்டால் அழிப்பான் கொண்டு அழிக்கின்றோம். அதற்கு பென்சில் அனுமதிக்கின்றது. தவறுகளைத் திருத்திக் கொள்வது ஒரு குறையன்று. நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டத் தவறுகளைத் திருத்திக் கொள்வது தேவையாகின்றது. இது மூன்றாவது பண்பு. மரத்தினாலான பல்வேறு வர்ணங்கள் பூசப்பட்ட பென்சிலின் வெளித்தோற்றத்தைவிட அதன் உள்ளே உள்ள கரிமம் காரீயம் (கிராபைட்) முக்கியமானது. அது போல் நீயும் உன் மனதுள் என்ன நிகழ்கிறது என்பதைக் கவனிப்பதில் கருத்தைச் செலுத்த வேண்டும். இது நான்காவது பண்பு.

பென்சில்தான் எழுதும் தாளில் தன்னுடைய சுவட்டினை முத்திரையாகப் பதித்து விட்டுச் செல்கிறது. அது போல உன் வாழ்வில் நீ செய்யும் ஒவ்வொரு செயலும் உன் தனித் தன்மையையும் முத்திரையையும் பதித்து மற்றவர்கள் உன் பெயரைப் பெருமையாகச் சொல்லும் படி இருக்க வேண்டும்.

ஆகவே உன்னுடைய ஒவ்வொரு செயலையும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். இது ஐந்தாவது பண்பு என்றுவிளக்கினார் பாட்டி. "பாட்டி நான் இப்போது பென்சிலின் பண்புகளை மட்டுமல்ல, சிறுவனாகிய நான் எப்படி வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன்" என்றான் பேரன்

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**



# வௌவால்களால் பார்க்க முடியுமா?

வௌவால்களில் பல வகைகள் உண்டு. பெரும்பாலான வௌவால்கள் பூச்சிகளைத் தின்று உயிர் வாழ்பவை. பழம் தின்னும் வௌவால்கள் ஒரு வகை. இவை பழங்களை மட்டுமே உண்பவை. பிற உயிரினங்களின் குருதியை உறிஞ்சிக் குடிப்பவை மற்றொரு வகை. பூச்சிகளைத் தின்னும் வௌவால்களையே நாம் அதிக அளவில் காண்கிறோம். இவற்றுக்கு கண் பார்வையே கிடையாது என்பது தவறு. கிட்டப்பார்வை என்பதே சரி. அருகிலுள்ள பூச்சிகளையும் பொருள்களையும் மட்டுமே இவற்றால் தெளிவாகக் காணமுடியும். வௌவால்கள் எதிரே உள்ள பொருள்களை அறிய கண்பார்வையைப் பயன்படுத்துவதில்லை. இவை பறக்கும் போது 'கிறீச்' என்ற ஒலி உண்டாகிறது. இந்த ஒலி எதிரிலுள்ள பொருள்களின் மீது பட்டு பிரதிபலித்து எதிரொலியாய் ஒலிக்க இந்த எதிர் ஒலியை அவை தெளிவாகக் கேட்கின்றன. தங்கள் செவிகளில் விழும் எதிரொலியை வைத்து தமக்கு எதிரிலுள்ள பொருள்கள் தம்மிடமிருந்து எத்தனை அருகில் அல்லது தொலைவில் உள்ளன என்பதை ஒரு கணினியை விட விரைவாகக் கணக்கிட்டு அதற்குத் தகுந்தாற்போல எதிர்படும் பொருளை விலக்கி பறக்கின்றன.



தேவையாயின் அந்தப் பொருளில் அமர்கின்றன. சில பழைய கட்டடங்களில் வௌவால்கள் கூட்டம் கூட்டமாக எதிர் எதிரே பல திசைகளிலும் பறந்து கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால் அவை அப்போது ஒன்றுக்கொன்று முட்டிக் கொள்வதே இல்லை. அத்தகைய ஒரு அற்புதமான கேட்கும் சக்தியும் எதிரிலுள்ள பொருள்களைக் கணக்கிட்டு அறியும் திறனும் இயற்கை உண்டு.

# வாய் விட்டுச் சிரிப்போம்




## ஐய்யய்யோ

ஒருவர் தனது மோட்டார்க் காரை விற்பதற்கு விரும்பி ஒரு பத்திரிகையின் விளம்பரப் பகுதிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு "கார் விற்பதற்கு விளம்பரம் கொடுக்க வேண்டும். எவ்வளவு செலவாகும் என்று கூற முடியுமா? என்று கேட்டார். 2.5 சென்றி மீற்றருக்கு இரண்டாயிரம் ரூபாய் ஆகும்" என்றார் விளம்பர அதிகாரி.

"ஐயய்யோ! எனது கார் நான்கரை மீற்றர் நீளமாயிற்றே. இப்போது விளம்பரம் செய்வதற்கே ஏகப்பட்ட செலவாகுமே" என்று அலறியடி தொடர்பைத் துண்டித்தார் கார் சொந்தக்காரர்.




# வர்ணம் தீட்டுவோம்



# வெள்ளை மாளிகை


- ஐக்கிய அமெரிக்க அதிபரின் உத்தியோக பூர்வ இல்லமே வெள்ளை மாளிகை.
- அமெரிக்காவின் முதல் அதிபரான ஜோர்ஜ் வொஷிங்டன் இதனைக் கட்டு வித்தார்.
- வெள்ளை மாளிகையில் வசிக்காத ஒரேயொரு அமெரிக்க அதிபர் வொஷிங்டன் மட்டுமே. மாளிகையின் கட்டுமானம் நிறைவேற முன்னரே அவர் காலமாகி விட்டார்.
- அயர்லாந்து நாட்டில் பிறந்தவரான ஜேம்ஸ் ஹோவன் வெள்ளை மாளிகையை வடிவமைத்தார்.
- 1792ஆம் ஆண்டு ஆரம்பமான இதன் கட்டுமானப் பணிகள் 1800ஆம் ஆண்டிலேயே நிறைவுற்றன.
- இந்த மாளிகையைக் கட்ட முழுமையாகப் பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- 6 மாடிகள் கொண்ட இந்த மாளிகையில் 132அறைகள், 35 குளியலறைகள் 412 கதவுகள் 147 ஜன்னல்கள் உள்ளன.
- அமெரிக்க அதிபரின் அதிகாரம் எல்லையற்றது. ஆனால் எந்த அதிபராலும் இந்த மாளிகையின் நிறத்திலோ வடிவமைபிலோ மாற்றம் செய்ய முடியாது.
- இந்த மாளிக்கைக்குள் முதன் முதலாக குடிபுகுந்த முதல் அதிபர் ஜோன் அடம்ஸ். இவர் அமெரிக்காவின் இரண்டாவது அதிபர் ஆவார்.
- 1814 ஒகஸ்ட் 24ஆம் திகதி அமெரிக்காவைக் கைப்பற்றிய பிரித்தானியர் இந்த மாளிகைக்குத் தீ வைத்தனர்.
- அமெரிக்காவின் 26ஆவது அதிபரான தியோடர் ரூஸ்வெல்ட் இதற்கு வெள்ளை மாளிகை (White House) எனப் பெயரிட்டார்.
- அச்சுறுத்தல் நிலவும் காலம் தவிர ஏனைய அனைத்து நாள்களிலும் இந்த மாளிகையைப் பொதுமக்கள் பார்வையிட முடியும்.
- வருடாந்தம் 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் வெள்ளை மாளிகையைப் பார்வையிடுகின்றனர்.



# பழங்களில் உப்புத் தூவி சாப்பிடுவது நல்லதா?

சிலர் பழங்களில் உப்பைச் சேர்த்துச் சாப்பிடுவார்கள். இப்படிப் பழங்களில் உப்புத் தூவி சாப்பிடுவதால், பழங்களின் சுவை அதிகரிப்ப





தோடு, வேறு சில நன்மைகளும் கிடைக்கின்றன.

பழங்களில் எண்ணற்ற நுண்கிருமிகளான பக்ரீரியாக்கள் இருக்கக்கூடும். அதனைத் தடுத்து, பழங்களை புதிதாகவும், பழங்களில் உள்ள பக்ரீரியாக்களின் வளர்ச்சியைத் தடுக்கவும் உப்பு உபயோகிக்கப்படுகிறது.

புதிதான பழங்களை உப்புக் கலந்த நீரில் ஊற வைத்தால், அதில் உள்ள கிருமிகள் நீங்கிவிடும். அதிக அமிலங்கள் நிறைந்த சிட்ரஸ் பழங்களான எலுமிச்சை, தோடம் பழம், திராட்சை போன்ற வற்றில் நார்ச்சத்து, விற்றமின்கள் அதிகமாக இருப்பதோடு, இந்தப்பழங்களுடன் உப்பு சேர்த்து உட்கொண்டால், அது வயிற்றில் சுரக்கும் அமிலத்தை சமநிலையாக்குவதோடு, சமிபாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தடுக்கும்.

பழங்களில் உப்பு தூவி சாப்பிடுவதால், உண்ணும் பழங்களின் சுவை அதிகமாகும். குறிப்பாக பழங்களில் உப்பு தூவி சாப்பிடுவதால், பழங்களில் உள்ள புளிப்பு குறைவதோடு, பழங்கள் கனியாமல் இருந்தாலும் பச்சை வாசனை தெரியாது. இதனாலும் பலரும் பழங்களில் உப்புத் தூவிச் சாப்பிடுகிறார்கள்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1391
சீட்டிழுப்பு திகதி 2017.08.21
வெற்றி இலக்கங்கள்
11 43 50 66 B
04 40 55 61
ரூ. 17,294,500/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▸ 692
சீட்டிழுப்பு திகதி ▸ 21.08.2017 திங்கட்கிழமை
W 04 36 46 47
சுப்பர் ஜக்பொட்
ரூ. 56, 794, 448/=
வெல்லப்படவில்லை
02 22 26 58
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.08.24 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2919 திகதி 21.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
03 13 44 58 M
போனஸ் இல.
02
புதன் கிழமை ஜக்பொட்
37, 815, 090/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
24 30 48 53
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.08.23 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி மகேஸ்வரன்
(ஓய்வு பெற்ற ஆசிரியை அச்செழு)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜினிதேவி மகேஸ்வரன் நேற்று (21.08.2017) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - யோகாம்பிகை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரனின் அன்பு மனைவியும் கேதீஸ்வரன் (கனடா), கோணேஸ்வரி (ப.நோ.கூ.ச. நீர்வேலி), யோகேஸ்வரி (ஜேர்மனி), பேரானந்தமூர்த்தி (தட்டெழுத்தாளர், மதூ டீசல் என்ஜினியர்ஸ் சுன்னாகம்), கிருபேந்திரமூர்த்தி (வதிரி) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'ஈஸ்வர இல்லம்' அச்செழு நீர்வேலி.**
**077 950 7257**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா சண்முகம்


ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சண்முகம் (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான குருக்கள்கணபதி - சீதேவி தம்பதியரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான இளையவி - சிவகாமி தம்பதியரின் மருமகளும் இராசதுரை, மணி என்றழைக்கப்படும் இராசமலர், கந்தையா, பெற்றி என்றழைக்கப்படும் அருந்ததி, செல்வரத்தினம், மகேஸ்வரி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் செல்லத்துரை, மகேஸ்வரன், கந்தசாமி, பாக்கியதுரை காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் செல்வரஞ்சிதம், விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### ஜெகதீஸ்வரி பூபாலசிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரி பூபாலசிங்கம் நேற்று (21.08.2017) திங்கட்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரி, இராஜபூபதி, விக்னேஸ்வரன் மற்றும் விமலேஸ்வரி, சிவசுப்பிரமணியம், இராசேந்திரா, சிவநேசன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சபாரட்ணம், பரமானந்தம், ஜெகதாம்பிகை, புஸ்பராணி, சண்முகேஸ்வரி, அருளினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காங்கேசன்துறை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி றஜிதா தியாகராஜ்**
அவர்களின் அன்புத் தந்தை
**நடராசா அரிச்சந்திரன்**
அவர்கள் 21.08.2017 அன்று காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரதேச செயலரும், சக உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரி சங்கங்களும், பிரதேச செயலகம், கண்டாவளை**

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் தொலைபேசி
இயக்குநராக கடமையாற்றும்
சு. அருந்தவக்குமார் அவர்களின்
அன்புத்தாயாரான
திருமதி **பூரணம் சுப்பிரமணியம்**
காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், பணிமனை யாழ்ப்பாணம்.**

# வேர்க்கடலை போளி

**தேவையான பொருள்கள் :**
பச்சை வேர்க்கடலை - 200 கிராம், உருளைக் கிழங்கு - 2, கரட் -2, பெருங்காயம் - ஒரு சிறங்கை, கொத்தமல்லி -சிறிதளவு, கடுகு - கரண்டி, கோதுமை மாவு - 2 கோப்பை, மஞ்சள் தூள் - அரைக் கரண்டி, தனி மிளகாய்த்தூள் -2கரண்டி, எலுமிச்சைச் சாறு- கரண்டி, உப்பு, எண்ணெய் தேவையான அளவு.



**செய்முறை :**
கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். வேர்க்கடலை, உருளைக்கிழங்கு, கரட் மூன்றையும் குழைய வேகவிட்டு ஆறியதும் நன்றாக மசித்துக் கொள்ளவும்.
மசித்த கலவையை ஒரு பாத்திரத்தில் போட்டு இத்துடன் பெருங்காயம், உப்பு, தனிமிளகாய்த் தூள், கொத்தமல்லி, எலுமிச்சைச் சாறு சேர்த்து கலந்து வைக்கவும்.
சட்டியை அடுப்பில் வைத்து சிறிது எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு தாளித்த பின் அதில் கலந்து வைத்துள்ள வேர்க்கடலை கலவையை போட்டு 3 நிமிடம் நன்றாக கலந்து ஆறியதும் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.
கோதுமை மாவில் தண்ணீர், உப்பு, மஞ்சள் தூள், ஒரு குழி கரண்டி நல்லெண்ணெய் விட்டு தளர பிசைந்து, சிறு உருண்டைகளாக உருட்டி அதனுள்ளே ஒரு வேர்க்கடலை உருண்டையை வைத்து மூடிவிடவும்.
கோதுமை மா உருண்டையை போளியாகத் தட்டி தோசைக் கல்லில் சுட்டெடுத்தால். வேர்க்கடலை போளி தயார்.

## மரண அறிவித்தல்கள்

# நடராசா அரிச்சந்திரன்



கெனடி லேனைப் பிறப்பிடமாகவும், புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அரிச்சந்திரன் (21.08.2017) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நடராசா - தையலம்மா தம்பதியரின் பாசமிகுமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஈஸ்வரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் றஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கண்டாவளை) வின் பாசமிகுதந்தையும் தியாகராஜின் (ஆசிரியர் கண்டி பவுலானா மகாவித்தியாலயம்), தர்மிளா (ஜேர்மனி), குகனேசன் (முகாமைத்துவ உதவியாளர் R.D.A), பரமேசன் (ஆசிரியர்) அகிலா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும் சறோஜினிதேவி, மாலா, பூசணிதேவி, ரூபச்சந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தங்கம்மா காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் சரோஜினிதேவி காலஞ்சென்ற யோகம்மா மற்றும் தயாநிதி (சுவிஸ்), சரவணமுத்து, சுவாதீஸ்வரன், வசந்தமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

*பிறப்பு* 25 . 11 . 1934



*இறப்பு* 23 . 07 . 2017

### திருமதி மனோன்மணி (அழகு) செல்வரத்தினம்

எமது தாயாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி எங்கள் துக்கங்களை பகிர்ந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**நாதன்பவனம், கே.கே.எஸ். வீதி, கோண்டாவில். 021 205 3381**

**செல்வராசன், செல்வானந்தி, யோகநாதன், செல்வநாதன், குடும்பத்தினர்.**



தோற்றம் 23 . 08 . 1938

மறைவு 19 . 08 . 2017

### திருமதி புஸ்பரெத்தினம் மகாலிங்கம்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பரெத்தினம் மகாலிங்கம் 19.08.2017 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் சதாசிவம் மகாலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற நடராசா-செல்லம்மா தம்பதியரின் மகளும் சதாசிவம் - இராசம்மா தம்பதியரின் மருமகளும் குலதீபன் (கனடா), காலஞ்சென்ற சிவபாலன், சிவமலர் (ஆசிரியர் - பரி. தோமா கனிஷ்ட பாடசாலை, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேஸ்வரி (கனடா), சற்குணசிவம் (கனடா) ஆகியோரின் சதோரியும் மன்மதகாந்தன் (ஆசிரியர் - கொ/விவேகானந்தா கல்லூரி), ஞானேஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமியும் மதியுதன், கபிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கனகரெட்ணம் (கனடா), உமா (கனடா), சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனியும் கருணாரூபினி (கனடா), சியாமளா (கனடா), சிவக்குமாரன் (கனடா), மனோகரி (கனடா) ஆகியோரின் சிறிய தயாரும் Dr. ராஜ் (கனடா), சாரங்கன் (கனடா), ரமணி, வனிதா (சுவிஸ்), கிருபாகரன் (அமெரிக்கா), தயாபரன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.08.2017 புதன்கிழமை முற்பகல் 9 மணி முதல் கல்கிசை, மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, ஈமைக்கிரியைகள் நடைபெற்று பின்னர் பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**236 2673,**
**077 3611639**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### சோமசுந்தரம் முத்தம்மா (கமலம்)

யூனியனடி இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் முத்தம்மா 21.08.2017 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2017) புதன் கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# செல்லையா குலநாயகம்

*தோற்றம் : 27.08.1923* *மறைவு : 21.08.2017*

யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்லையாகுலநாயகம் நேற்று (21.08.2017) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும் இராசரத்தினம், பாலாம்பிகை, சரஸ்வதி, சத்தியபாமா, சாந்தநாயகி ஆகியோரின் சகோதரனும் விக்கினேஸ்வரியின் கணவரும் கலைச்செல்வி, மோகன், அனுசா, யாமினி, காலஞ்சென்ற ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேந்திரா, ஜெயந்தி, கேதாரநாதன், சத்தியசீலன் ஆகியோரின் மாமனும் சங்கரி, தாரணி, வைஷ்ணவி, வாகீசன், ஜனனி, ராகினி, வினோதினி, கீர்த்தனி, கேதாரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் கொழும்புத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தேவை**
•கொப்பறா, தேங்காய் கொள்வனவு செய்யப்படும்.
•மில்வேலை செய்யக்கூடியவர்கள் தேவை.
**077 772 2215**

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
புறொயிலர் குஞ்சு, கல்பட் குஞ்சு, ஊர்க்கோழிக்குஞ்சுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு - 076 4481 101

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ்ப்பாணம், வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு விடப்படும்.
**077 985 8271, 076 984 1379**

**வாடகைக்குண்டு**
சுண்டுக்குளிக்கு மிக அருகில் நவீன வசதிகளுடன் கூடிய (AC/Non AC) வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.
**075 025 5013/ 077 422 6160**

**தேவை**
தெகிவளையில் உள்ள பிரபல சலூனிற்கு வேலையாள்கள் தேவை. யாழ்ப்பாணம், வவுனியா, வன்னி மாவட்ட இளைஞர்கள் தொடர்பு கொள்ளவும். திறமைக்கேற்ப சம்பளம். சிறந்த அனுபவமுள்ளவராயின் மாதம் 60.000/=
தொடர்பு - Raj ராஜ்
077 0537 608, 077 6633 446

**வீடு வாடகைக்கு தேவை**
ஓய்வுபெற்ற அரச ஊழியருக்கு 3 அங்கத்தவர் கொண்ட கௌரவ குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடனடியாக தேவை. (தரகர் தேவையில்லை)
**077 517 8727, 077 242 3400, 077 753 1344**

**காணிகள் விற்பனைக்குண்டு**
K.K.S. வீதி, பெரியபுலம் பாடசாலைக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வவுனியா, நெளுக்குளம், சாம்பல்தோட்டம் தொழில்நுட்ப கல்லூரியில் இருந்து 500M தொலைவில் 2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - K. சிவசுதன்**
**077 226 1334**

## சுட்டுகொன்ற...

நடுவதற்காக, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளார். இந்த வீடு இராணுவத்தினரால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி கொக்குவில் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதன் பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர். மாணவர்களைச் சந்தித்த மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கொல்லப்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட கந்தரோடையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் விஜயகுமார் சுலக்சனின் குடும்பத்தினருக்கு அரசால் காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டது. அந்தக் காணியிலேயே வீடு அமைக்கப்படவுள்ளது.

இராணுவத்தினரே வீடு அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கீரிமலை நல்லிணக்கபுரத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் போன்றே இந்த வீடும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று மதியம் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கவே மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (வ-5)

## இரசாயனவியல்...

யாகியுள்ளதாக துண்டறிக்கை வெளியிட்டுள்ளார் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இருப்பினும் அந்த ஆசிரியரின் தந்தை மற்றும் சகோதரரைக் கைது செய்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக் கிழமை நடைபெற்ற இரசாயனவியல் பரீட்சையின் பகுதி 2 வினாத்தாளில் உள்ள 3 வினாக்கள், கம்பகாவில் உள்ள தனியார் வகுப்பு ஆசிரியரால் முன்கூட்டியே கையேடு வடிவில் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தனது முன்னோடிப் பரீட்சைக் கையேட்டில் வெளியான வினாக்கள், உயர்தரப் பரீட்சை வினாத்தாளில் இருந்தாகத் தெரிவித்து அந்த ஆசிரியர் துண்டறிக்கையும் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் விசாரணைகள் நடத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார, பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியிருந்ததார். கம்பகாப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். தனியார் கல்வி நிலைய ஆசிரியரின் 67 வயதான தந்தையும், ஆசிரியரது 29 வயதான சகோதரரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து உயர்தரப் பரீட்சை வினாக்கள் அடங்கிய டெப்லட்டும் மீட்கப்பட்டிருந்தாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஆசிரியரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (வ-5)

## அடிப்படை....

ளுக்குதற்காலிகமாகஎப்படிஇடைநிறுத்தமுடியும் ? கட்சி யாப் பில் அதற்கு இடமிருக்கின்றதா? கட்சியின் அடிப்படை உறுப்புரிமை பெற்றநபரென்று சொன்னால், உறுப்புரிமை எனக்கு எப்போது வழங்கப்பட்டது என்பதை ஆதாரத்துடன் பகிரங்கப் படுத்த முடியுமா?

இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் ரெலோவிடம் கேள்விகளை எழுப்பியுள்ளார். ரெலோவின் உயர்மட்டக் குழுக் கூட்டம் வவுனியா வில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்சி ஒழுக் காற்று நடவடிக்கைக்காக பா.டெனீஸ்வரனை ரெலோவிலிருந்து ஆறு மாதங்கள் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அந்தக் கட்சி அறிவித்திருந்தது. இது தொடர்பில் அமைச்சர் பா. டெனீஸ்வரன் பத்திரிகையாளர் சந்திப்பை நேற்று நடத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது ரெலோவுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் நான் போட்டியிட்டேன். தேர்தலின் பின்னர் அன்றிலிருந்து இன்றுவரை தங்களுடைய கட்சிக்கு விசுவாசமாகவும் அடிப்படைத் தொண்டன் என்ற வகையிலும் செயற்பட்டுவருகின்றேன். கட்சியும் கட்சியின் செயலாளர் நாயகமும் பல தடவைகள் ரெலோவின் கூட்டங்களுக்கு வருவதில்லை என்றும் ஏறக்குறைய 21 கூட்டங்களில் ஒரு கூட்டத்துக்கே வந்துள்ளதாகவும் வெளிப்படையாகவே குற்றம்சுமத்தி வருகின்றனர்.

**என்னை எப்போதோ நீக்கியிருக்கலாம்**

கூட்டத்துக்கு வராமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. மாகாண சபை உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே மன்னார் மாவட்டத்தில் கூட்டம் ஒழுங்குசெய்து நடத்தப்பட்ட கூட்டமே எனக்கும் ரெலோ கட்சிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது கூட்டமாகும். அந்தக் கூட்டத்தில் பல ஏற்றுக்கொள்ளமுடியாத காரணங்களை முன்வைத்தபோது அதற்கு எதிராக தனியொருமனிதனாக குரல் கொடுத்திருந்தேன். அதற்குப் பின்னர் நடைபெற்ற 20 கூட்டங்களுக்கும் நான் சமுகமளிக்கவில்லை என்பது உண்மைதான்.

ஏன் வரவில்லை என்ற காரணம் எனக்கும் கட்சிக்கும் தெரிந்தவிடயம். மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று நினைத்தால் அதனைச்செய்வதற்கும் தயாராகவே உள்ளேன். நான் ரெலோவின் அடிப்படை உறுப்புரிமை பெற்றவராக இருப்பின் தங்களுடைய கட்சியின் விதிகள் சரியாக இருக்குமெனில் மூன்று கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக வராமல் இருக்கும்போதே அத்தகைய உறுப்பினர் தனது அடிப்படை உறுப்புரிமையை இழக்க நேரிடும். சட்ட மற்றும் யாப்பு விதிகளில் இது பொதுவாக காணப்படும் ஒரு ஏற்பாடாகும். அவ்வாறெனில் தொடர்ச்சியாக 20 கூட்டங்களுக்கு சமுகமளிக்கமால் இருந்த ஒரு உறுப்பினரை தாங்கள் ஏன் எதற்காக கட்சியிலிருந்து நீக்காமல் வைத்தீர்கள்?

**புறமுதுகில் குத்தவேண்டாம்**

கட்சியானது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனோடு சேர்ந்து சூட்சுமமாக எனது அமைச்சுப் பொறுப்பைப் பறித்து பழிவாங்க வேண்டுமென்ற நோக்கில் செயற்படுவதை என்னால் உணரமுடிகின்றது. எனக்குத் தெரியாமல் இரகசியமாக என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு முதலமைச்சருக்கு கடிதம் எழுதாமல் என்னோடு நேரடியாகக் கதைத்திருந்தால் எந்தவித தயக்கமுமின்றி அமைச்சுப் பதவியைத் தங்களுக்கு விட்டுத்தந்திருப்பேன்.

தற்பொழுது ரெலோவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் புறமுதுகில் குத்தி என்னை பழிவாங்க வேண்டுமென்று நடவடிக்கைகள் மேற்கொள்வீர்களாயின் தகுந்த நேரத்தில் எமது மக்கள் தங்களுக்குத் தகுந்தபாடம் புகட்டுவார்கள் என்பதை மறந்துவிடவேண்டாம்.

**நிரந்தரமாக நீக்குங்கள்**

கட்சியானது சனநாயக ரீதியாக வளர்ந்து வருகின்றபோது வெளிப்படைத் தன்மையோடும், நேர்மையுடனும் செயற்பட்டாலேயே அந்தக் கட்சியானது மக்களின் மனங்களில் இடம்பிடிக்க முடியும். இது தவிர்த்து சிறுபிள்ளைத்தனமாகக் கட்சி நடந்து கொள்ளுமாயின் அந்தக் கட்சியின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள் என்பதையும் மறந்துவிடவேண்டாம். எது எவ்வாறு இருப்பினும் சட்ட மற்றும் யாப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முறைப்படி என்னைக் கட்சியில் ஒரு உறுப்பினராகச் சேர்த்துவிட்டு, அதன்பின்னர் தங்களது யாப்பில் பின்னோக்கியாளும் சட்ட ஏற்பாடுகள் காணப்படுமிடத்து, ஆறு மாதங்கள் தற்காலிகமாக இடைநிறுத்துவதனை விட நிரந்தரமாகவே தங்கள் கட்சியில் இருந்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (வ-5)

## வடக்கு...

மாற்றியமைப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இடைஞ்சலாக இருந்து வந்தார். அவரது கட்சியான ரெலோ, 6 மாத காலத்துக்கு அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தும் முடிவை எடுத்திருந்தது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதனடிப்படையில், டெனீஸ்வரனை தனது அமைச்சரவையிலிருந்து தூக்கி எறிந்திருந்தார்.

டெனீஸ்வரன் வகித்த அமைச்சுப் பதவியில் வர்த்தக வாணிபத்தை, தற்போது மகளிர் விவகார அமைச்சராகவுள்ள திருமதி அனந்தி சசிதரனுக்கும், எஞ்சிய பொறுப்புக்களை தானும் பொறுப்பேற்பதாகத் தெரிவித்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுக் காலை கடிதம் அனுப்பியுள்ளார்.

முதலமைச்சர் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக அந்த அமைச்சரவையிலிருந்து பா. டெனீஸ்வரனை நீக்குவதில் சட்டரீதியாக சிக்கல்கள் எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது. வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கு, சில தினங்களுக்கு முன்னர் பா.டெனீஸ்வரன் கடிதம் அனுப்பியிருந்தார். அதில், தான் இப்போதும் அமைச்சராகத் தொடர்கின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் ஒருவர் சுயமாகப் பதவி விலகாத நிலையிலும், மாகாண சபையில் அந்த அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவர் வெளியேற்றப்படாத நிலையிலும், முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரை மாற்றலாமா? என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வடக்கு மாகாண ஆளுநர் குரே ஆலோசனை கேட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ப.சத்தியலிங்கம் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக முதலமைச்சருக்கு கொடுத்த கடிதம் வடக்கு மாகாண ஆளுநருக்கு இன்னமும் கொடுக்கப்படவில்லை. இதனால் சுகாதார அமைச்சுப் பதவியை குணசீலன் ஏற்பதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. பதவி விலகல் கடிதம் கொடுக்கப்பட்டு அதனை ஆளுநர் ஏற்றுக் கொண்டாலேயே, குணசீலன் அமைச்சராகப் பதவியேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் அமைச்சரவை மாற்றம் இன்னமும் சிக்கலுக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5,101)

## சுகாதார...

இதேவேளை, அமைச்சர் பா.டெனீஸ்வரனை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது அமைச்சரவையிலிருந்து நேற்றைய தினம் நீக்குவதாக ஆளுநருக்கு அறிவித்துள்ளபோதும், டெனீஸ்வரனுக்கு இன்றைய அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்பேன் என்று அமைச்சர் டெனீஸ்வரனும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சுகாதார அமைச்சராக இருந்த ப.சத்தியலிங்கம் தனது பதவி விலகலைச் சமர்பித்திருந்தபோதும், ஆளுநருக்கு அறிவிக்கப்படாமையால் சட்டரீதியான சுகாதார அமைச்சராக ப.சத்தியலிங்கமே தொடர்கின்றார்.

இந்த நிலையில் இன்று நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அவருக்கு அழைப்பு அனுப்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் குழப்பம் நிலவிவந்தது. முதலமைச்சர் அலுவலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக ப.சத்தியலிங்கத்துக்கு அமைச்சரவைக் கூட்டதுக்கான அழைப்பு அனுப்பப்படவில்லை.

அவருக்குப் பதிலாக புதிய சுகாதார அமைச்சர் நியமிக்கப்படவில்லை. முதலமைச்சரும் அந்த அமைச்சைப் பொறுப்பேற்கவில்லை. இதற்கிடையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சுகாதார அமைச்சராக ஜி.குணசீலனின் பெயரை ஆளுநருக்குப் பரிந்துரைத்தபோதும் அவர் இன்னமும் பதவியேற்கவில்லை. ஆளுநர் இன்று மாலையே யாழ்ப்பாணத்துக்கு வருவார். ஆனால் அமைச்சரவைக் கூட்டம் காலையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் இன்றியே இன்றைய அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (வ-5,101)

## ஓபிஎஸ்...

செல்வம் அணியினரும், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அணியினரும் நேற்று மாலை இணைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமையே இணைப்புப் பேச்சுக்கள் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தன. எனினும் சில விடயங்களில் முடிவு எட்டப்படாததால் இணைப்பு பிற்போடப்பட்டு, திரைமறைவில் பேச்சுத் தொடர்ந்து வந்தது. இந்த நிலையில் நேற்று இந்த இணைப்புச் சாத்தியமானது. ஓ.பன்னீர்செல்வத்துக்கு அ.தி.மு. கழகத்தின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் என்ற பதவி கொடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் அ.தி.மு. கட்சியையும், இரட்டை இலைச் சின்னத்தையும் தற்போது முடக்கியுள்ளதால் பொதுச் செயலாளரைத் தெரிவுசெய்ய முடியாத நிலை அந்தக் கட்சிக்கு உள்ளது. கட்சியும் சின்னமும் மீட்கப்பட்டதும் ஓ.பன்னீர்செல்வம் பொதுச் செயலாளராகப் பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டது.

துணை முதல்வராகவும், நிதி அமைச்சராகவும் ஓ.பன்னீர்செல்வம் அறிவிக்கப்பட்டு நேற்று மாலை 5 மணியளவில் தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் முன்னிலையில் அவர் பதவியேற்றார். ஓ.பன்னீர்செல்வத்தின் தீவிர ஆதரவாளரான பாண்டியராஜன் தொல்லியல் துறை, தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் பின்னர் தலைமைச் செயலகத்துக்கு ஓ.பன்னீர்செல்வம் சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. பின்னர் அவர் ஆவணங்களில் கையெழுத்திட்டு உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

கட்சியும், சின்னமும் விரைவில் மீட்கப்படும், சசிகலாவை உத்தியோகபூர்வமாக வெளியேற்றும் நடிவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**(தொடர்புடைய செய்திகள் பக்கம் 14,15)**

(வ-ம)

## சிறுவன்...

தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பட்டக்காடு பகுதியைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவனும் அவரது சகோதரர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வவுனியா நெளுக்குளம் குகன் நகர் பகுதியைச் சேர்ந்த மற்றொரு இளைஞரும் கைது செய்யப்பட்டார். இவர்கள் மூவரும் ஆள்கள் இல்லாத வீடுகளில் காணப்படும் சிறிய துளைகள் ஊடாக சிறுவனை வீட்டுக்குள் செல்லவிட்டு மற்ற இரு இளைஞர்களும் திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரும் வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள்" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

## அமைச்சராக...

குலராசா, பொ.ஐங்கரநேசன் இருவரும் முதலமைச்சரின் விசாரணைக் குழுவால் அமைச்சுப்பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட பின்னர், ஒட்டுமொத்த அமைச்சரவையுமே மாற்ற வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அதில் விடாப்பிடியாகவும் நின்று கொண்டார். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் அரசுக் கட்சியைப் பழிவாங்குகின்றார் என்று தெரிவித்து அந்தக் கட்சி, வடக்கு அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை எடுத்தது. வடக்கு அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இருந்த ப.சத்தியலிங்கம் தனது பதவியிலிருந்து விலகும் முடிவை முதலமைச்சருக்கு அறிவித்தார். அதனை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

மற்றொரு அமைச்சரான பா.டெனீஸ்வரன் அமைச்சுப் பதவியிலிருந்து விலக மாட்டேன் என்று தெரிவித்திருந்தார். அதனால் அவரை ரெலோவிலிருந்து ஆறு மாதங்கள் இடைநிறுத்துவதாகவும், தமது கட்சி சார்பில் க.விந்தனை அமைச்சராக நியமிக்குமாறும் முதலமைச்சரிடம் கோரியிருந்தது. ஆனாலும் அந்தக் கட்சியினுள் ஜி.குணசீலனை நியமிக்க வேண்டும் என்று ஒரு தரப்பு வேண்டுகோள் முன்வைத்திருந்தாலும், கட்சியின் இறுதி முடிவாக க.விந்தனே பரிந்துரைக்கப்பட்டிருந்தார். முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ரெலோவின் முடிவைப் புறந்தள்ளி, ஜி.குணசீலனை சுகாதார அமைச்சராக நியமிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கு நேற்றுக் காலை கடிதம் அனுப்பியுள்ளார். (வ-5,101)

## அமைச்சர்...

நீதி அமைச்சர் விஜயதாஸ தொடர்பில் இன்று தீர்க்கமான உறுதியான முடிவு எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை விஜயதாஸ மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் பதிலளிப்பதற்கு நேற்று வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தபோதும் அவர் பதிலளிக்கவில்லை என்பதுடன் கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கியதேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் கடந்தவியாழக்கிழமை நடைபெற்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறி விட்டார் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கட்சியில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை, ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விஜயதாஸ மீதான குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வழங்குவதற்கு நேற்று மாலை வரையில் அவகாசம் வழங்கப்பட்டிருந்தபோதும், அவர் பதில் வழங்கவில்லை என்பதுடன் கூட்டத்திலும் பங்கேற்கவில்லை. நீதி அமைச்சர் விஜயதாஸ தொடர்பில் விரைவில் இன்று இரவு (நேற்று), நாளை (இன்று) அரசதலைவருடன் பேசித்தீர்க்கமான முடிவு எடுப்பதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை பொது நிகழ்வில் பேசிய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைத் தாக்கியும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் புகழ்ந்தும் பேசியிருந்தார். (வ-5)

## ரைட்ரோன்ஸ் அணி வின்ஸை வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரைட்ரோன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் மதியம் 11 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரைட்ரோன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரைட்ரோன்ஸ் 8 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக திலக்சன் 26 ஓட்டங்களையும், டினோசன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வின்சன், யதுசன், ஜெபர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

155 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வின்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் உதயசாந், நந்தகுமார், திலக்சன் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



## ஜொலிஸ்ரார் அணி பதற்றம் இல்லாமல் அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ரி-20 தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் அணி அபார வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 17.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுதர்சன் 47 ஓட்டங்களையும் கண்ணராஜ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தூவரகன் 5 இலக்குகளையும், வாமணன், மதுசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

112 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 17.2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தோஸ் 40 ஓட்டங்களையும், மதுசன் 22 ஓட்டங்களையும், கஜனாந் 22 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

## வடக்கு, கிழக்கு ரீதியில் பூப்பந்தாட்டத் தொடர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் வடக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம், 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி 14 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான ஆட்டங்களும் 20 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான



ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன.

26ஆம் திகதி 16 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

27ஆம் திகதி பெண்களுக்கான திறந்த ஆட்டங்களும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்களுக்கான ஆட்டங்களும்நடைபெறவுள்ளன. (ம-23)

## கண்ணகை ச.ச.நிலைய துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 22

மட்டுவில் கண்ணகை சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்ணகை விளையாட்டுக் கழகத்தினர் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான மென்பந்து துடுப்பாட்டத் தொடர் ஒன்றை விரைவில் நடத்தவுள்ளனர். எதிர்வரும் 26ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் கழக மைதானத்தில் காலை 8 மணி தொடக்கம் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. (ம-23)



## திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் பல்கலைக் கழகத்தை வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ரி-20 தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.

நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற பல்கலைக் கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தர்சிகன் 33 ஓட்டங்களையும், அசோக் 21 ஓட்டங்களையும், சுரேந்திரன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் குருகுலசூரிய 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

153 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும், 9 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. றுக்ஸ்மன் 23 ஓட்டங்களையும், குருகுலசூரிய 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியின் சார்பாக சிவராஜ் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கனகபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## யங்கம்பன்ஸின் கரப்பந்தாட்ட முடிவுகள் சில



யாழ்ப்பாணம், ஓக. 22

யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் தங்கவடிவேல் ஞாபகார்த்த கிண்ணத் துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் சில.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற செற் கணக்கிலும், தோப்ப வாலிபர் விளையாட்டுக் கழகம் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற நேர் செற்றிலும், புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் கெருடாவில் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற நேர் செற் கணக்கிலும் வெற்றிபெற்றன. (ம-108)

## துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் தொடரொன்றை நடத்தவுள்ளனர். இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் சாவகச்சேரி சங்கத்தானை உபஅஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் அமைந்துள்ள கழக அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் அல்லது ஏற்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)




# வரலாற்று சிறப்புமிக்க அடைவை தவறவிட்டார் மலிங்க

இந்திய அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க அடைவை நிலை நாட்டக்கூடிய வாய்ப்பு இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் மலிங்கவுக்குக் கிடைத்த போதிலும், அந்த வாய்ப்பை அவர் பயன்படுத்தத் தவறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் மலிங்கவின் 200ஆவது ஒருநாள் ஆட்டமாகும். இதுவரை அவர் 298 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். எனவே இந்த ஆட்டத்தில் இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினால் அவர் 200ஆவது ஆட்டத்தில் 300 இலக்குகள் என்ற அடைவை எட்டிய வீரர் என்ற பெருமையைப் பெறுவார் என்ற நிலை இருந்தது. ஆனால் ஒரு இலக்கையேனும் மலிங்க வால் கைப்பற்ற முடியவில்லை. இதனால் முக்கியத்துவமான அடைவை அவர் தவறவிட்டார்.

ஆட்டம் ஆரம்பமாக முன்னர் இலங்கை கிரிக்கெட் சபை தனது வலைத்தளங்களில் மலிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்தது. 'இன்னும் இரண்டு இலக்குகள் வரலாற்று முக்கியத்துவம் மிக்க அடைவுக்கு வேண்டும்' என்றும் அது குறிப்பிட்டது. ஆனால் அத்தனை எதிர்பார்ப்புக்களும் பொய்த்துப்போனது. (ம)



# தோல்வியில் இருந்து பாடம் கற்றுள்ளோம்

## தரங்க தெரிவிப்பு

"இந்திய அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் கிடைத்த தோல்வியில் இருந்து பாடம் கற்றுள்ளோம்" என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் தரங்க.

தம்புள்ளயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 43.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 127 பந்துகள் மீதமிருக்க ஒரு இலக்கை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே தரங்க இவ்வாறு தெரிவித்தார்.

"ஆரம்பத்தில் நாங்கள் நன்றாக விளையாடினாலும், பின்னர் அதைத் தக்கவைக்கத் தவறிவிட்டோம். துடுப்பாட்ட வீரர்களில் யாராவது ஒருவராவது பெரிய ஓட்டங்களைக் குவித் திருக்க வேண்டும். 300 ஓட்டங்களை அணி குவிக்க வேண்டுமென்றால் ஆரம்பத்திலிருந்தே அடித்தளத்தை சிறப்பாக அமைக்க வேண்டும். கடந்த 3 ஆண்டுகளாக இந்த விடயம்தான் எங்கள் அணிக்கு பிரச்சினையாக உள்ளது. ஒரு சமயம் 300 ஓட்டங்களை தொடுவது போல தெரிந்தாலும், எதிர்பாராதவிதமாக 216 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து விட்டோம். இந்திய அணி கடைசி நேரத்தில் அபாரமாக விளையாடியது. இந்த ஆட்டத்தில் செய்த தவறிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும், கற்றுள்ளோம்" என தரங்க மேலும் தெரிவித்தார். (ம)

# 3 சுழல் வீரர்கள்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணியின் சார்பாக மூன்று சுழல் வீரர்கள் களமிறங்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

பல்லேகலயில் நாளைமறுதினம் இரண்டாவது ஆட்டம் நடைபெறவுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தின் பின்னர், "அடுத்த ஆட்டத்தில் சுழல் வீரர்களை அதிகம் பயன்படுத்தவுள்ளோம்" என்று கோக்லி தெரிவித்தார். இதையடுத்தே மூன்று சுழல் வீரர்கள் தொடர்பிலான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. (ம)

# டிமித்ரோ சம்பியன்



அமெரிக்க ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான சின்சினாட்டித் தொடரில் பல்கேரிய வீரர் டிமித்ரோ சம்பியனானார்.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் கிர்கிஜோஸை எதிர்த்து டிமித்ரோ மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் டிமித்ரோவ். அவர் அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)

# 300 ஓட்டங்கள் எதிர்பார்த்தோம் கோக்லி வெளிப்படைக் கருத்து

"இலங்கை அணி சுமார் 300 ஓட்டங்களை எமக்கு இலக்காக நிர்ணயிக்கும் என்று எதிர்பார்த்தோம்" நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டம் தொடர்பில் இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குசல் மெண்டிஸ், டிக்வெல்ல, குணதிலக ஆகியோரின் சிறந்த ஆட்டத்தால் ஒரு கட்டத்தில் அதாவது 26 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைக் குவித்து பலமாக இருந்தது. அதன் பின்னர் மத்திய வரிசையிலும், பின்வரிசையிலும் ஏற்பட்ட தடுமாற்றமே இலங்கை அணியை பாதாளத்துக்குத் தள்ளியது. இதையே கோக்லியும் சுட்டிக் காட்டினார்.

"இலங்கை அணியின் ஆரம்பம் மிகச் சிறப்பாக அமைந்தது. அந்த அணி சுமார் 300 ஓட்டங்கள் அல்லது அதற்கு அப்பால் செல்லக்கூடிய வகையில் ஆரம்பம் கண்டது. இதனால் 300 ஓட்டங்களை நோக்கித் துடுப்பாட வேண்டி வரலாம் என்று பேசிக்கொண்டோம். பின்னர் எமது சுழல் பந்துவீச்சாளர்கள் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்தனர். தவான் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுகிறார். கடந்த மூன்று மாதங்களாக அவர் அற்புதமான திறனில் (போர்மில்) உள்ளார்." என கோக்லி மேலும் தெரிவித்தார்.





ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி தொடர் ஆரம்பமாகிறது. இன்று ஆஸ்திரேலிய அணிக்கும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பதினொருவர் அணிக்கும் இடையில் பயிற்சி ஆட்டமொன்று நடைபெறவிருந்தது. இந்த ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட வாய்ப்புள்ளது என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (ம)



## 6 பந்துகளில் 6 சிக்சர்கள்

### பாண்டியா நம்பிக்கை

6 பந்துகளில் 6 சிக்சர்களை விளாச முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் இந்திய அணியின் அதிரடி வீரர் பாண்டியா.

அண்மையில் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கெடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இதுவரை மூன்று சிக்சர்களை தொடர்ச்சியாக அடித்துள்ளேன். நான்காவது சிக்சர் தொடர்பில் சிந்திக்கவில்லை. எனினும் ஒரு பந்துப்பரிமாற்றத்தில் 6 சிக்சர்களை விளாசமுடியும்" என்று பாண்டியா மேலும் குறிப்பிட்டார். (ம)

# லா லிகா கால்பந்துத் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தது மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்துத் தொடரான லா லிகா தொடரின் நடப்புப் பருவகாலத்தை (2017 - 2018) வெற்றியுடன் ஆரம்பித்தது ரியல் மட்ரிட்.

நேற்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் மட்ரிட்டை எதிர்த்து டிப்போர்டிவோ மோதியது. ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கரீத் பேல். 27 ஆவது நிமிடத்தில் அதிரடியாகச் செயற்பட்ட காஸ்மிரோ மட்ரிட்டின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். டிப்போர்டிவோ பலமுறை முயற்சித்தது. எனினும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. 2:0 என்று மட்ரிட்டின் ஆதிக்கத்துடனேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 62ஆவது நிமிடத்தில் குரூஸ் மட்ரிட்டின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். இந்தக் கோல் மட்ரிட்டின் வெற்றியை உறுதிப்படுத்தியது. மாற்றங்கள் நிகழவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் கம்பீரமான வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

அண்மையில் நடைபெற்ற பார்சிலோனாவுக்கு எதிரான ஆட்டத்தில் நடுவரைத் தள்ளிவிட்ட குற்றத்துக்காக ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரர் ரொனால்டோவுக்கு 5 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. அவர் இல்லாத ஆட்டங்களில் மட்ரிட் தடுமாறும் என்று சொல்லப்பட்ட போதிலும் அந்த அணி எவ்வித் தடுமாற்றமும் இல்லாமல் தொடர்ந்தும் சிறப்பாகவே விளையாடி வருகிறது. (ம)



# சின்சினாட்டித் தொடரில் முகுருசா சம்பியனானார்



அமெரிக்க ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில், கிண்ணம் வென்றார் ஸ்பெயின் வீராங்கனையான கார்பின் முகுருசா.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. முகுருசாவை எதிர்த்து ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றினார் முகுருசா. அடுத்த செற்றிலும் வெற்றிபெற்றால் நேர் செற் வெற்றியென்ற நிலையில் அந்த செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வெற்றார் முகுருசா. (ம)

**காணவில்லை**



கிளிநொச்சி விநாயகபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட **ப.சிவபாக்கியம் (வயது 53)** என்பவரை 23.06.2017 இலிருந்து காணவில்லை கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 217 2250**

**மணமகள் தேவை**

யாழ் கிறிஸ்தவ (R.C) கௌரவ குடும்பம் 1986, பட்டதாரி அரச உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 349 6085**

**வேலையாள்கள் தேவை**

வடமாகாணத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்தில் கணக்காய்வு பணி தொடர்பான வெற்றிடம் நிலவுகின்றது.

**சுன்னாகம் கொமர்ஷல் வங்கி முன்பாக,**

**021 224 0514, 077 386 7696**

**EasyWay** English

தொழில்புரிவோர், பள்ளி மாணவர்கள், வீட்டுப்பெண்கள் மற்றும் ஆங்கிலம்பேசவிரும்புவோருக்கான புதியபிரிவுகள்

வகுப்புகள் எதற்கும் வராமலேயே தமிழ் விளக்கத்துடனுள்ள 14 பாடப்புத்தகங்களையும், 90 வீடியோ பாடங்களையும் சுயமாகக்கற்று 90-120 நாட்களுக்குள் பயிற்சிகளை செய்து ஒப்படைப்பதன் மூலம் இறுதிப்பரீட்சைக்கு தோற்றமுடியும்.

பாடநெறிக்கட்டணம் ரூபா 2000 மட்டுமே!

குழந்தைகள் நாளாந்தம் மொழிகற்பதை மூலமாகக்கொண்டு உருவாக்கப்பட்ட இப்பயிற்சியில் நிச்சயமாக உங்களாலும் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

பேச்சுப்பயிற்சி, எழுதுதல், வீடியோ பாடம், மொழிபெயர்ப்பு, கடிதம் வரைதல் என அனைத்துமுள்ள இப்பயிற்சியில் எந்த மாவட்டத்திலுள்ளவர்களும் தபால் மற்றும் வங்கிமூலம் கட்டணம் செலுத்தி இணையமுடியும்.

EASY WAY School of English — 403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். 077 621 4567, 021 567 4133

**சுன்னாகத்தில் 5 நாள் இலவச ஆங்கில வகுப்பு**

புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய தரம் 5 மாணவர்களுக்கானது சர்வதேச தரத்திலான இலகு முறை ஆங்கில வகுப்பு

- **ஆரம்பம் - 28.08.2017 (திங்கள்)**
- **நேரம் - 3.30 - 6.00**

**முற்பதிவினை மேற்கொண்டு வகுப்பில் பங்குபற்றமுடியும்.**

**பதிவுகளுக்கு - 076 697 3040, 021 224 3660**

ELAS 124, Sir Pon Ramanathan Road, Chunnakam. 1st Floor, DFCC Bank.

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி பகுதியில் இயங்கிவரும் முதற்தர உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணிநிலைக்குரிய பணியாளர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு நேரில் வருகை தரவும்

1) உணவு தயாரிப்பாளர் (குக்)
2) கொத்து, பிறைட்றைஸ் தயாரிப்பாளர்
3) றொட்டி வேலை சிற்றுண்டிகள் தயாரிப்பாளர்
4) உணவு பரிமாறுபவர் 5) சமையல் உதவியாளர்

**T.P : 077 6491 027, 077 9400 963**

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

O/L, A/L கற்றோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள் தொழில்புரிவோர், வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.

சாம்ஷன் ஆசிரியரின் 3 மாத நேரடிபேச்சுப் பயிற்சி வகுப்பில், ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 26. 08. 2017

1. காலை 08.00-10.00 — 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 — 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (திங்கள் மற்றும் புதன்)
1.காலை 08-10 2.காலை 10-12 3.மாலை 03-05

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?

SAAMSON Experts in English Training — 403, பெருமாள் கோயில் அருகில், வெலிங்டன் சந்தி யாழ்நகர் 021 320 3313, 077 1570 486




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.0 8.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.